திரிகடுகம்

அம்சவேணி பெரியண்ணன் உரை

திரிகடுகம்

அம்சவேணி பெரியண்ணன் உரை

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

திரிகடுகம் அம்சவேணி பெரியண்ணன் உரை ❐ அம்சவேணி பெரியண்ணன் ❐பதிப்பு 2019 ❐ பக்கங்கள்: 120 ❐ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❐தொலைபேசி:42070663 ❐ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❐ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.105.00

பதிப்பாளர்: டாக்டர்.பெ.மயிலவேலன்,
M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது; தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர்.பெ.மயிலவேலன், M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr.P.MAILAVELAN,** M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D. Chennai.

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

THRIKADUGAM HAMSAVENI PERIANNAN URAI ❐ HAMSAVENI PERIANNAN ❐ Edition: 2019 ❐ Pages: 120 ❐ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❐ Phone: 42070663 ❐ Typeset: Latha Computer, Chennai ❐ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs. 105.00**

Publisher: Dr.P.MAILAVELAN,
M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

> "நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
> கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திரிகடுகம் என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

□ □ □

திரிகடுகம்

அம்சவேணி பெரியண்ணன் உரை

காப்பு

கண்ணகல் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்
தண்ணரும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம்-நண்ணிய
மாயச்சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.

விளக்கவுரை

விரிந்து பரந்த இந்த உலகத்தை அளந்தவன், நறுமணம் மிக்க பூக்கள் நிறைந்த, குளிர்ச்சி தரும் குருந்த மரத்தை முறித்தவன், எதிரிகளின் நயவஞ்சக வண்டியை உதைத்தவன் ஆகிய செயல்களை செய்தவன் திருமால், காயாம்பூ மலர் போன்ற மேனியை கொண்டவன் அப் பெருமான். மேலே குறிப்பிட்டுள்ள மூன்று செயல்களை செய்து பகைவர்களை வென்று உலகை காத்த திருமாலின் திருவடிகளை பணிந்து திரிகடுகத்தை தொடங்குகிறார் நல்லாதனார். திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில் குருந்த மரத்தை முறித்தான். நயவஞ்சக வண்டிய உதைத்தான். வாமன அவதாரத்தில் திரிவிக்ரமனாக வளர்ந்து உலகை அளந் தான். அசுர சக்திகளை அழித்து தருமத்தை நிலை நிறுத் திய திருமாலின் திருவடிகளை பணிந்து ‘திரிகடுகம்’ என்ற நீதி நூலை மனித சமுதாயம் நலம் பெற தருகிறார் நல்லாதனார் என்பது பொருளாகும்.

அ.பொ.

கண்ணகல் ஞாலம்-விரிந்து பரந்த உலகம். தண்ணறும்-குளிர்ந்த. பூங்குருந்தம்-பூக்கள் நிறைந்த குருந்தமரம். மாய சகடம்-நயவஞ்சக வண்டி. பூவைப்பூ வண்ணன் அடி-கருநீல நிறமுடைய திருமாலின் திருவடி.

பொருள் சுருக்கம்

அசுர சக்திகளை அழித்து நல்லோர்களை காத்த திருமாலின் திருவடிகளை பணிந்து 'திரிகடுகம்' என்னும் நூலை தொடங்குகிறார் நல்லாதனார். ஆகவே ஆசிரியர் வைணவராக இருக்கலாம் என்று கருதுவதற்கு இடம் உண்டு.

1. நூல்

அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்-சொல்லின்
அரில் அகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து.

விளக்கவுரை

காப்பு செய்யுளைத் தொடர்ந்து, நூல் என்ற தலைப்பில் அமையப் பெற்ற இச்செய்யுள் நூலின் உட்கருத்தை தெரிவிப்பதாக உள்ளது. திரிகடுகம் என்றால் காக்கும் பொருள்கள் மூன்று என்பது பொருள். திரி என்றால் மூன்று. கடுகம் என்றால் பாதுகாக்கும் பொருள் என்பதாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் உடலுக்கு வரும் நோயை குணப்படுத்தி ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கிறது. அதேபோல் திரிகடுகத்தின் ஒவ்வொரு பாடலும் மூன்று நீதி நெறிகளை உணர்த்தி அறியாமை நோயை அகற்றி மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்து

கிறது. அறியாமையும், தீய செயல்களும் நோய்கள் போன்றவை இந்த நோய் நீங்கி விட்டால் மனிதன் தெய்வ பலம் நிறைந்தவன் ஆகி விடுவான். இதனை அறிவதுதான் உண்மையான அறிவாற்றல். திரிகடுகம் என்ற நூலின் அடிப்படை உட்கருத்து இதுதான். அருந்ததி என்பவள் வசிஷ்ட மகரிஷியின் மனைவி. கற்புக்கு இலக்கணம் போல் திகழ்பவள். நட்சத்திர மண்டலத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றவள். அதனால்தான் திருமணம் நடக்கும் போது அம்மி மிதித்து அருந்ததி காட்டல் சடங்கு நடத்தப்படுகிறது. அதாவது அருந்ததிபோல் மணமக்கள் கற்புக்கரசியாக திகழ்ந்து.

பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதாகும். வாழ்க்கை துணைவி யாக அமையும் பெண்தான் வாழ்வுக்கு ஆதாரம் என்ப தால் முதல் பாடலிலேயே இதனை நல்லலாதனார் அறிவுறுத்துகிறார். கற்புடைய பெண்ணுடன் கூடி வாழவேண்டும். குற்றமில்லாத மேலானவர்களுடன் நட்பு கொள்ள வேண்டும். நற்செயல்களையே செய்யும் உயர்குடியில் வாழ்வோரிடம் உறவு கொள்ளவேண்டும் என்று மூன்று நீதிகளை இப்பாடல் கூறுகிறது.

திரிகடுகம் உடல் நோய் தீர்ப்பது போல் இந்த மூன்று நீதிகளும் உயிர் பிணியை நீக்கி உள்ளத்தை தூய்மையாக்குகிறது என்பது பொருளாகும்.

அ.பொ.

தொல்–பழமை. மாண்டர்–உயர் பண்புடைய மேலோர். அருந்ததி–கற்பில் சிறந்த வசிஷ்டரின் மனைவி. அதில்–குற்றம். மனத்திண்மை–வலியுடைய தூய்மை பெற்ற மனம். கேள்வி–கல்வி கற்பதால் வரும் அறிவு.

பொருள் சுருக்கம்

கற்புடைய பெண்ணுடன் வாழவேண்டும். நல்ல பண்புமிக்க குடியினருடன் உறவு வைக்க வேண்டும். குற்றமில்லாத நல்லோர்களுடன் நட்பு கொள்ள வேண்டும். உடல் நோய்க்கு திரிகடுகம் நல்ல மருந்து. உயிர் நோய்க்கு மேலே கூறப்பட்ட மூன்றும் நல்ல மருந்து.

2. நல்லோர் செயல் மூன்று

தன்குணம் குன்றாத் தகைமையும் தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும்-நன்குணர்வின்
நான்மறையாளர் வழிச்செலவும் இம்மூன்றும்
மேன்முறையாளர் தொழில்.

விளக்கவுரை

நல்ல குணங்களை எந்த நிலையிலும் கைவிடாமல் ஒழுக்க நெறியில் வாழ்தல், குற்றமில்லாத செயல்களை செய்யும்படி, பணிக்கும் சான்றோர்களின் வார்த்தைகளை மீறாமல் அதனை செய்து முடித்தல், நான்கு வேதங்களையும் அறிந்த சுத்தமானவர் (அந்தணர் என்றால் சுத்தமானவர் என்பது பொருள்) காட்டும் வழியில் நடத்தல் ஆகிய மூன்றும் நல்லொழுக்கத்தையே வாழ்வில் இலக்கணமாக கொண்டவர்கள் செய்ய வேண்டிய செயல்களாகும். தங்கத்தை நெருப்பில் போடுவதால் அதன் பள, பளப்பு அதிகமாகிறது. ஆகவே, துன்பம் வந்த போதும் ஒழுக்கத்தையும், நல்ல குணங்களையும் கைவிடாமல் இருப்பது உயர்ந்தோர் குணம் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது.

நல்லவர்கள் கட்டளை என்பது இறைவனின் கட்டளை போன்றது. அதனை செய்த வாக்காக கருதி செய்து முடிக்க வேண்டும். வேதங்கள் கற்ற அந்தணர்

காட்டும் வழியில் நடக்க வேண்டும். வேதக்ஙள என்ன சொல்கின்றன? உனக்குள்ளேயே பேராற்றல் படைத்த ஆத்மா இருக்கிறது. அந்த ஆத்மாவால் முடியாத காரியம் எதுவுமில்லை என்று அது கூறுகிறது. அப்படிப்பட்ட உயர்ந்த தத்துவங்களை அறிந்த அந்தணர்கள் காட்டும் வழி சென்று நாம் ஆத்ம தரிசனம் பெற வேண்டும் என்பது உட்கருத்தாகும்.

அ.பொ.

தாஇல்-குற்றம் இல்லாத. சீர்-சிறந்த. இன்குணம்-இனிமையான குணம். நான்கு மறையாளர்-ரிக், யஜீர், சாம, அதர்வனம் என்னும் நான்கு வேதங்களை கற்ற சுத்தமானவர்கள் (அந்தணர்கள்). நன்குணர்வின்-தீர ஆலோசித்து நன்கு அறிந்த. ஏவின-பணித்த.

பொருள் சுருக்கம்

சொல், எண்ணம், செயல் ஆகியவற்றில் தூய்மை யாக இருத்தல், பெரியோர் இடும் கட்டளையை சிரமேற் கொண்டு செய்தல், வேதங்கள் அறிந்த ஆன்மிக சான் றோர்கள் காட்டும் வழியில் செல்லுதல் ஆகிய மூன்றும் மேலோர் செயல்களாகும்.

3. இம்மூன்றும் அறியாமையில் வினையும் தீமை

கல்லார்க்(கு) இனன்ஆய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலால் புடைத்தலும்-இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும் இம்மூன்றும்
அறியாமை யால்வரும் கேடு.

விளக்கவுரை

படிப்பறிவில்லாத மூடர்களுடன் உறவு கொண்டு பழகுதல். நல்ல குணமுள்ள, கற்புள்ள மனைவியை கோலால் அடித்து துன்புறுத்துதல், வீட்டுக்கு தகுதி

யற்ற தீயவர்களை அழைத்து வருவது ஆகிய மூன்று செயல்களும் அறியாமை காரணமாக தமக்கு தாமே தீமையை வரவழைத்துக் கொள்ளும் தீமைகளாகும். மூடர்கள் உறவு என்பது தேவையற்ற சங்கடங்களை உருவாக்கும். மூடர்களின் உறவைவிட எதிரிகளின் எதிர்ப்பு மேலானது என்று சொல்வார்கள்.

ஆகவே, மூடர்களின் சகவாசத்தை விட்டொழிக்க வேண்டும். கற்புடைய பெண்கள் இறைவனையே கட்டுப்படுத்தி தங்கள் முன்னே தோனற்ச் செய்தவர்கள் என்று புராண இதிகாசங்கள் கூறுகின்றன. கற்புக்கரசி கண்ணகி மதுரை மாநகரையே எரித்திருக்கிறாள். ஆகவே, நல்ல, குணமுள்ள கற்புக்கரசியான மனைவி யரை அடிப்பதோ, மனம் புண்படும்படி செய்வதோ நமக்கு நீங்காத துன்பத்தைக் கொண்டு வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தீயவர்கள் நண்பர்கள் என்ற போர்வையில் வீட்டுக் குள் புகுந்து குடும்பத்தை பிரித்து நாசம் செய்வார்கள். ஆகவே, தீயவர்களை நல்லவர்கள் என்று நம்பி அடிக்கடி வீட்டுக்கு அழைத்து வருவது பேராபத்தை விளைவிக்கும். நல்ல பாம்பை கண்டால் அடித்துக் கொல்கிறோம். அதேபோல் தீயவர்களை வீட்டுக்கு அழைத்து வராமல் ஒதுக்கி வைக்க வேண்டும். இம்மூன்று தவறுகளை செய்பவர்கள் தங்கள் அறியாமை காரணமாக பெருந் தீமைகளை சந்திக்க நேரும் என்பதை இப்பாடல் எச்சரிக்கை செய்கிறது.

அ.பொ.

கல்லார்-கல்வி அறிவு பெறாத மூடர்கள். இனம் ஆம்-உறவு கொண்டு. காழ்-மனஉறுதி. சிறியார்-அற்பர்கள், தீயவர்கள். புகல்-நுழைவது.

பொருள் சுருக்கம்

அறிவில்லாத மூடர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்வது, ஒழுக்கமுள்ள மனைவியை அடித்து துன்புறுத்துவது, பாம்பு போன்ற விஷத்தை கக்கும் தீயவர்களை வீட்டுக்கு அழைத்து வருவது ஆகிய இம்மூன்றும் தீய விளைவுகளை விளைவிக்கும்.

4. இம்மூன்றும் இறக்கத் துணிந்தவனின் செயல்கள்

பகைமுன்னர் வாழ்க்கை செயலும் தொகை நின்ற
பெற்றத்துள் கோலின்றிச் சேறலும்-முற்றன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றும்
சாவஉறுவான் தொழில்.

விளக்கவுரை

பகைவர்கள் காண ஆடம்பரத்தை காட்டக்கூடாது. கூட்டமாக இருக்கும் மாடுகளுக்கிடையே ஒரு கோல் இல்லாமல் செல்லக் கூடாது. முன்பு நமக்கு துன்பம் செய்து பிரிந்தவனை மீண்டும் நண்பனாக்கிக் கொள்ளக்கூடாது. இந்த மூன்று செயல்களும் சாகத் துணிந்தவன் செய்யும் செயல்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

நம்முடைய சிறப்புகளை கண்டு எதிரிகள் பொறாமைப்படுவார்கள். எந்த விதத்திலாவது அந்த சிறப்பை கெடுக்க சதித் திட்டம் போடுவார்கள். அதனை நிறைவேற்ற பொய், சூது, கொலை போன்ற பாதக செயல்களையும் செய்வார்கள். ஆகவே, நம் செல்வக்கை, சிறப்பை எதிரிகள் அறியும்படி காட்டக்கூடாது. மாடுகள் கூடியிருக்கும் இடத்தில் கோல் இல்லாமல் தனித்துச் சென்றால் கூரான கொம்புகளால் அவை குத்தி படுகாயமாக்கக் கூடும். சில சமயங்களில் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

ஆகவே, வலிமை மிக்க கோல் ஒன்றை பாதுகாப்புக்காக உடன் எடுத்துச் செல்லவேண்டும்.

தன்னை துன்புறுத்தி யவன் பிரிந்து சென்ற பிறகு அவனை மீண்டும் நண்பனாக்கி கொள்வது தீமையை உண்டாக்கும். நண்பன் போல் நடித்தாலும் அவன் உள்ளம் வஞ்சகத்தை மறைத்து வைத்திருக்கும். வெளியே சாம்பல் போல் தெரிந்தாலும உள்ளே நெருப்புத் தணல் இருக்கும். அதை நீறு பூத்த நெருப்பு என்று சொல்கி றோம். அதேபோல் தன்னை துன்புறுத்தியவர்கள் மேலுக்கு நல்லவர்கள் போல் நடித்து நெருப்பை நம்மீது கொட்டி விடுவார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வர்களை மீண்டும் நண்பர்களாக்கிக் கொளள்க்கூடாது. மேலே கூறப்பட்ட மூன்று நீதிகளை கடைப்பிடிக்காத வர்கள் இறக்கத் துணிந்தவர்கள் என்று திரிகடுகம் அடையாளம் காட்டுகிறது.

அ.பொ.

பகை–எதிரிகள். வாழ்க்கைச் செயல்–செல்வாக்கான வாழ்வு. தொகை–கூட்டம். பெற்றம்–காளை மாடு. காய்தல்–வருந்தும்படி செய்தல். கோடல்–கொள்ளுதல். சேரல்–போதல். கைவாங்கி–கைவிட்டு.

பொருள் சுருக்கம்

நம்மீது பொறமை கொண்டுள்ள எதிரிகள் முன்பு தங்கள் செல்வ செழிப்பை காட்டக்கூடாது. மாடுகள் நிறைந்துள்ள கூட்டத்தில் பாதுகாப்புக்கு கோல் இல்லாமல் அங்கு செல்லக்கூடாது. நம்மை துன்புறுத்தி பிரிந்து சென்றவனை மீண்டும் நண்பனாக சேர்த்துக் கொள்ளக்கூடாது. இந்த கூடாத மூன்று செயல்களை யும் செய்வது மரணத்தை தானே வரவழைத்துக் கொள்வதைப் போன்றது.

5. இம்மூன்றும் அழிவுக்கு வழி வகுக்கும்

வழுங்காத் துறைஇழிந்து நீர்ப்போக்கும் ஒப்ப
விழைவிலாப் பெண்டீர் தோள்சேர்வும்-உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகழும் இம்மூன்றும்
அருந்துயரம் காட்டும் நெறி.

விளக்கவுரை

நீர் நிறைந்த குளம் அல்லது பெருக்கெடுத்து ஓடும் ஆறுகளில் இறங்கும்போது படித்துறைகளை கவனித்து பாதுகாப்புடன் இறங்க வேண்டும். காதல் இன்பம் என்பது விரும்புகின்ற பெண்ணோடு அமைய வேண்டும். முன்பின் தெரியாத ஊருக்கு விருப்பமில்லாமல் விருந்தாளியாக செல்வது துன்பம் தரும் என்று திரிகடுகம் கூறுகிறது.

நீர்நிறைந்த குளத்தில் அலட்சியமாக இறங்கினால் வழுக்கி விழுந்து காயம் ஏற்படலாம். சில இடங்களில் புதையும் சேறு இருக்கலாம். அலட்சியமாக இறங்கும் போது புதை சேறில் சிக்கிக்கொள்ள நேரலாம். ஆகவே, நீர்நிலைகளில் இறங்கும்போது பாதுகாப்பாக இறங்க வேண்டும். விருப்பமில்லா பெண்ணுடன் காதல் இன்பம் துய்க்க விரும்புவது ஆபத்தானது. அதனால் பெயர் கெடுவதோடு பல சிக்கல்களில் சிக்கி தண்டனை அனுபவிக்கவும் நேரும்.

ஆகவே, மனம் ஒத்த பெண்களையே விரும்ப வேண்டும். மாறாக உள்ளப் பெண்களை ஒதுக்க வேண்டும். அல்லது ஒதுங்க வேண்டும். முன்பின் தெரியாத ஊருக்கு விருப்பமில்லாமல் விருந்தாளியாகச் செல்லக் கூடாது. முன்பின் தெரியாதவர்கள் நாகரிகமாக, பண்புள்ளவர்களாக நடந்து கொள்வார்கள் என்று சொல்ல முடியாது பல அவமானங்களை சந்திக்க நேரலாம்.

முன்பின் தெரியாத ஊரில் ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் நம்மை பாதுகாத்துக் கொள்வது கடினம். ஆகவே, இந்த விஷயத்தில் மிக எச்சரிக்கையாக இருந்து இது போன்ற பயணங்களைத் தவிர்க்க் வேண்டும். இந்த மூன்று விஷயங்களையும் அலட்சியப்படுத்துகிறவர்கள் அழிவுப் பாதையை நோக்கிச் செல்கிறார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

இழிதல்–இறங்குதல். நீர்போக்கு–நீரோட்டம். விழை விலாப் பெண்டிர்–விரும்பாத பெண்கள். தோள் சேர்வும்–தோளைத் தழுவுதல். அருந்துயரம்–பெரும் துன்பம். விருந்தினனாய்–விருந்தாளியாக. வேற்றூர்–முன்பின் தெரியாத ஊருக்கு.

பொருள் சுருக்கம்

படித்துறை இல்லாத நீர் துறைகளில் பாதுகாப்பில்லாமல் இறங்குவது, அன்பில்லாத பெண்ணோடு கூடுதல, விருப்பமில்லாமல் வேற்றூருக்கு விருந்தாளி யாக செல்வது ஆகிய மூன்றும் துன்பத்தைத் தரக்கூடியவை.

6. இம்மூன்றும் பெருமைமிகு செல்வப் பேறு

பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறில் பொறையும்–அறவினையைக்
காராண்மை போல ஒழுகுதலும் இம்மூன்றும்
ஊராண்மை என்னும் செருக்கு.

விளக்கவுரை

மற்றவர்கள் நம்மைப் போற்றிக் கொண்டாடும் போது ஆணவம் கொள்ளாமல் அடக்கமாக இருக்க வேண்டும். நம் பெருமையை அறியாத அறிவிலிகள் நம்மை குறைவாக மதித்து மாறுபட்ட சொற்களை கூறினாலும் கோபம் கொள்ளாமல் பொறுமை காக்க

வேண்டும். நற்செயல்களை செய்யும்போது ஆளுமை திறன் வெளிப்படும்படி செய்ய வேண்டும். இம்மூன்றும் பெருமை சேர்க்கக் கூடிய செல்வ பேறுகள் என்று திரிகடுகம் கூறுகிறது.

மற்றவர்கள் நம்மைப் புகழும்போது ஆணவம் கொண்டால் மற்றவர்களை அலட்சியப்படுத்தும் தீய குணம்வரும். அதனால் நம்சிறப்புகள் அழியும். போற்றி யவர்களே தூற்றுகின்ற அவலமும் வரும். ஆகவே, புகழ் போதையில் ஆணவம் தலை தூக்காமல் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். அதேபோல் நம் தகுதியைப் புரிந்து கொள்ளாமல் நம் சொற்களை கேட்காமல் மாறுபட்டு பேசுபவர்களிடம் கோபம் கொள்ளக் கூடாது. பொறுமையை கடைபிடித்து அவர்களாகவே நம் பெருமையை உணர வைக்கவேண்டும்.

கோபம் கொண்டு அவர்களை தண்டித்தால் அவர்கள் திருந்தமாட்டார்கள். தொடர்ந்து தொல்லை கொடுக்கவும் செய்வார்கள். நாம் எந்த செயலை செய்தாலும் வெற்றிக்கு வழி வகுப்பது ஆளுமைத் திறன்தான். இந்த உலகம் அறிவுக் கூர்மையும், ஆளும் திறன் உள்ளவர்களிடம் மட்டுமே இரக்கம் காட்டுகிறது. கோழைகளையும், திறமையில்லாதவர்களையும், அலட் சியம் செய்கிறது. ஆகவே, எந்தச் செயல் செய்தாலும் நம் ஆளுமை திறன் வெளிப்படும்படி வெற்றிகரமாக செய்யவேண்டும். இந்த மூன்று தகுதிகளும் பெருமைதரக் கூடிய செல்வப் பேறுகளை நமக்கு தரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

பேணுதல்-புகழ்ந்து போற்றுதல். நாணுதல்-வெட்கம் அடைந்து அடங்கி இருப்பது. பேணார்-பழிப்போர். பொறை-பொறுமை. அறவினை-நற்செயல்கள். ஆளுமை-ஆண்மை. ஊராண்மை-ஊர் மக்களால் மதிக்கப்படுதல்.

பொருள் சுருக்கம்

மற்றவர்கள் நம்மை புகழ்ந்து போற்றிக் கொண்டாடும்போது ஆணவம் வரக்கூடாது. நம் பெருமையை அறியாமல் மாறுபட்டு பேசுபவர்களிடம் சினம் கொள்ளக்கூடாது. பொறுமை காக்க வேண்டும். எந்த செயல் செய்தாலும் ஆண்மையுடன் (ஆளுமைத் திறனுடன்) செய்யவேண்டும். இம்மூன்று நெறிகளை கடைபிடித்தால் அதுவே செல்வப் பேறு.

7. இம்மூன்றும் ஊமை கண்ட கனவுகள்

வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆளல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும்-பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனா.

விளக்கவுரை

மீன் இனங்களில் வாளை மீன் நீண்டது, பெரியது. பறவை இனத்தில் உள்ளான் என்பது மிகச் சிறிய பறவை. அந்தக் குருவி வாளை மீனை கொத்தி கொண்டு பறந்து செல்ல முடியுமா...? அதுபோல் ஆளுமைத் திறன் இல்லாதவன் செல்வக்குடியில் பிறந்தாலும் அதை நிர்வாகம் செய்யும் திறமையின்றி செல்வ வளத்தை இழப்பான். கற்றுத் தேர்ந்த சான்றோர்கள் கூடியுள்ள சபையில்தான் கற்றதை துணிவுடன் கூற இயலாதவனின் அறிவு குடத்தில் இட்ட விளக்குபோல் மறைந்தே இருக்கும் என்று திரிகடுகம் கூறுகிறது.

மிகப் பெரிய வாளை மீனை சிறிய பறவையான உள்ளான் கொத்திச் செல்ல இயலாது. அதுபோல் சிறுமதி படைத்தவர்கள் பேரறிவுள்ளவர்களை வெற்றிக் கொள்ள முடியாது. ஏனெனில் பேரறிவு என்பது மிகப் பெரிய படை பலத்தையும் வீழ்த்தும்

வலிமையுடையது. அப்படியிருக்க சிறுமதி படைத்தவர்களை அறிவாளிகளை எக்காலத்திலும் வெல்ல முடியாது. அப்படி வெல்லலம் என்று நினைப்பது ஊமை கண்ட கனவு போல பயனின்றி போகும். பணக்கார குடும்பத்தில் ஒருவன் பிறந்தாலும் அச்செல்வத்தை பாதுகாக்கும் ஆளுமை இல்லாவிட்டால் எதிரிகள் அந்த செல்வத்தை ஏதேனும் ஒருமுறையில் அழித்து விடுவார்கள். ஆளுமைத் திறன் என்பது செல்வத்தை பெருகச் செய்யவேண்டும். இருக்கும் செல்வம் குறையாமல் பாதுகாக்கும் திறன் வேண்டும். தான் கற்றதை பெரியோர்கள் கூடியிருக்கும் சபையில் துணிவுடன் கூறுவது என்பது ஒரு தனி சிறப்பு. அச்சிறப்பு இல்லாதவன் கற்றகல்வி பயன் தராது. சிறுமை பெருமையை வெல்ல நினைப்பது, அளுமை திறன் இல்லாதன் பெற்ற செல்வம் நிலைப்பது என்பது, துணிவு இல்லாதவன் கற்றோர் சபையில் பேச நினைப்பது ஆகிய இம்மூன்றும் ஊமை கண்ட கனவுகள் போல நிறைவேறாமல் போகும் என்பது பொருளாகும்.

அ.பொ.

உள்ளல்-எடுக்க நினைத்தல். தலைப்படல்-முயற்சி செய்தல். ஆளல்லன்-ஆளும் திறமையற்றவன். பல்அவை-பலர் கூடியுள்ள சபையில்.

பொருள் சுருக்கம்

பலவீனம் உள்வன் பலவானை வெல்ல நினைப்பது ஆளுமை இல்லாதவனின் செல்வ குடிப்பிறப்பு, கற்றவர் சபையில் நுழைய அஞ்சுபவர்களின் படிப்பறிவு ஆகிய மூன்றும் ஊமை கண்ட கனவுபோல் பயன் படாது.

8. இம்மூன்றும் புகழ் குணங்கள்

தொல்லவையுள் தோன்றும் குடிமையும் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும்-வெல்சமத்து
வேந்துவப்ப அட்டார்த்த வெற்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறாப் பொருள்.

விளக்கவுரை

அறிஞர்கள் கூடியிருக்கிற சபையில் அமர்வதற்கு நல்ல குடிபிறப்பைப் பெற்றிருப்பது. அந்த அவையில் தன் கல்வியை திறம்பட கூறுவது. போர் வரும்போது தன் அரசனுக்கு வெற்றி ஏற்படும்படி செய்வது ஆகியவை சிறந்த குணங்களாகும். ஆனாலும் இதனை மற்றவர்கள் தான் போற்ற வேண்டும். நமக்கு நாமே பாராட்டிக் கொண்டு ஆணவம் கொள்ளக் கூடாது. நாம் திறமைகள் பெற்றிருக்கலாம். அதன் காரணமாக பல சிறப்புகள் வரலாம்.

இதைக் கண்டு மற்றவர்கள் போற்ற வேண்டும். நமக்கு நாமே புகழ்ந்து கொண்டால் நாளடைவில் அது இகழ்ச்சியைக் கொண்டு வரும். தற்பெருமை என்பது இழிவான குணம் என்பதால் அது இழிவையே தரும் என்பதாகும். ஆகவே, மேலே கூறப்பட்ட புகழ் குணங்கள் மேலும்புகழ் பெற வேண்டுமானால் நாம் அடக்கத்தோடு வாழவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

தோன்றும்-அறிவு விளங்க இருத்தல். தொக்கிருத்தல்-கலந்திருத்தல். சமர்-போர். அட்டு-அழித்த. ஆர்த்த-வெற்றி ஆரவாரம் செய்கின்ற.

பொருள் சுருக்கம்

அறிஞர்கள் சபையில் வீற்றிருக்கும் வாய்ப்பு, கற்ற கல்வியை எடுத்துரைக்கும் ஆற்றல், போர்வரும்போது தன் தலைவனுக்கு வெற்றி ஏற்படச் செய்யும் குணங்கள்

சிறந்தவைதான். ஆனால் இந்த சிறப்புகளை நமக்கு நாமே புகழக் கூடாது. மற்றவர்கள் புகழும்படி அடக்க மாக இருக்கவேண்டும்.

9. இம்மூன்றும் மூடர்கள் விருப்பம்

பெருமை உடையார் இனத்தில் அகறல்
உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்
விழுமிய அல்ல துணிதல் இம்மூன்றும்
முழுமக்கள் காத லவை.

விளக்கவுரை

நல்ல குணமும், நல்ல செயல்களும் கொண்டவர் களின் கூட்டத்தை விட்டு விலகுவது, தனக்கு சொந்த மான மனைவியை விட்டு வேறு பெண்களிடம் ஆசை வைத்து, வாழ்தல், மேன்மை தராத செயல்களை செய்ய முற்படுதல் ஆகிய மூன்றும் மூடர்களின் விருப்பங்க ளாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

நல்ல குணம் கொண்டவர்களை விட்டு விலகுவது பாதுகாப்பு கவசத்தை இழத்தல் போன்றது. மனைவியை விட்டு வேறு பெண்களை விரும்புவது இகழ்ச்சியைத் தரும். புகழ் தராத கீழான செயல்களை செய்தால் பழி வரும். பாவம் வரும். தண்டனை வரும். ஆகவே, மேலே கூறப்பட்ட மூன்று செயல்கள் மூடர்களின் விருப்பம். துன்பம் விளைவிப்பவை என்பது கருத்து.

அ.பொ.

அகறல்–விலகுதல். உரிமைஇல்–தனக்கு உரிமையில்லாத. காமுற்று–ஆசைப்பட்டு. துணிதல்–செய்ய முயலுதல். முழு மக்கள்–அறிவற்ற மூடர்கள். காதலவை–விருப்பப்படும் செயல்கள்.

பொருள் சுருக்கம்

சான்றோர்களை விட்டு விலகுவது. மனைவி அல் லாத பிறப்பெண்களுடன் கூடி வாழ ஆசை கொள்வது, உயர்ந்தது. அல்லாத செயல்களை செய்ய முயல்வது

ஆகிய இம்மூன்றும் அறிவற்ற மூடர்கள் விரும்பும் செயல்களாகும்.

10. இம்மூன்றும் நன்மை அல்ல

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லாத அவைக்களனும்-பாத்துண்ணும்
தன்மை இலார் அயல்இருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல்.

விளக்கவுரை

எண்ணிலும், எழுத்திலும் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் இல்லாத ஊர், ஊரில் இருவருக்கிடையே சச்சரவு ஏற்பட்டால் கூப்பிட்டு பேசி சமரசம் செய்ய வல்ல முதிர்ந்த ஞானம் பெற்றவர்கள் இடம் பெறாத பொதுச் சபை, பிறருடன் பகிர்ந்து உண்ணும் பண்பு இல்லாதவர் அருகில் குடியிருப்பது, ஆகிய மூன்றும் வாழ்வில் நன்மை தருவன அல்ல என்று திரிகடுகம் குறிப்பிடுகிறது. எண்ணிலும், எழுத்திலும் தேர்சி பெறாதவர்கள் உள்ள நிலை இருந்தால் அந்த ஊர் வீழ்ச்சியடையும். வேற்று ஊர்காரர்கள் எளிதில் ஏமாற்றுவார்கள். அரசு வழங்கும் பணத்தை ஊர் மக்களுக்கு செம்மையாக செலவழிக்க இயலாது.

ஆகவே, எண்ணும், எழுத்தும் அறிந்த, நேர்மையான வர்கள் ஊருக்குத் தேவை. அடுத்துஊர் என்று இருந்தால் சண்டை, சச்சரவு வரத்தான் செய்யும். அப்படி வரும் போது சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நியாயமான முறையில் சமரசம் செய்யாவிட்டால் அந்த சண்டை முற்றி கொலையில்கூட முடியலாம். அல்லது நீதிமன்றம் சென்று அலைய வேண்டிய அவல நிலை ஏற்படலாம்.

ஆகவே, நேர்மையான முறையில் சமரசம் செய்ய வல்ல பொதுச்சபை ஊருக்குத் தேவை. அடுத்து பகிர்ந்து உண்ணும் பண்பு இல்லாதவர்கள் வசிக்கும்

இடத்தில் வசிப்பது ஆபத்தானது. அத்தகைய பண்பில் லாதவர்கள் தீமைகளை செய்ய அஞ்ச மாட்டார்கள். இரக்க குணம் அற்ற மிருகத்தை போன்ற அவர்களால் தீமை ஏற்படும். ஆகவே, மேலே கூறப்பட்ட மூன்று விஷயங்களில் கவனம் வைத்து வாழவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

கணக்காயர்–அறிஞர் எண் எழுத்தில் தேர்ச்சி பெற்றோர். பிணக்கு–சண்டை. அறுக்கும்–விலக்கி விடும். மூத்தோர்–அறிவில் சிறந்தவர்கள். அவைக்களம்–நியாய பொதுச்சபை. பாத்துண்ணும்–பங்கிட்டு சாப்பிடும் பண்பு. அயல் இருப்பு–அருகாமையில் குடி யிருப்பது.

பொருள் சுருக்கம்

அறிவில் சிறந்தவர் வாழாத கிராமம். சண்டை சச்சரவுகளை அமைதிபடுத்தும் சான்றோர் இல்லாத பொதுச்சபை, பிறருக்கு கொடுத்து தாமும் உண்ணும் பண்பில்லாதவர் அருகில் வசிப்பது ஆகிய மூன்றும் நன்மைகளைத் தராது. தீமைகளையே உருவாக்கும்.

11. இம்மூன்றும் துயரம் தருபவை

விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும் விழக்
களியாதான் காவா துரையும்–தெளியாதான்
கூரையுள் பல்காலும் சேரலும் இம்மூன்றும்
ஊரெல்லாம் நோவ துடைத்து.

விளக்கவுரை

விழாக்களுக்கு தன்னை அழைக்காவிட்டாலும் வலிய சென்று அதில் கலந்து கொள்வதும், தடுமாறி விழும்படி குடித்திராத ஒருவன் விரும்பாத வீண் பேச்சுக்களைப் பேசுவதும், தன்னை நம்பாதவன் வீட்டிற்கு பலமுறை செல்வதும், ஆகிய மூன்றும் ஊரில்

உள்ளவர்கள் இகழ்ச்சியாக பேசவைக்கும் துன்பத்தைத் தரும் செயல்களாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

அழைப்பு இல்லாமல் விழாக்களுக்கு வலிய செல்பவர் பிறரால் அவமதிக்கப்படுவர். ஏளனமாக பார்ப்பதே இழிவை தரும். சாப்பிடும் நேரத்தில்கூட மரியாதை தராமல் அவமதிப்பு செய்வார்கள். ஆகவே, அழைப்பு தாராத விழாவுக்கு செல்லக்கூடாது. குடிகாரன் வாயிலிருந்து வரும் சொற்கள் அனைவரும் வெறுக்கும் படியாகவே இருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. குடிகாரன் பேச்சு... விடிஞ்சாக்கா போச்சு... என்று சொல்வது போல் அவனை எவரும் நம்பமாட்டார்கள். ஆகவே, குடிப்பது இழிவையே தரும். ஆகவே குடிக்காதவன், குடிகாரன் போல் தீய சொற்களைக் கூறக்கூடாது.

அடுத்து தன்னை நம்பாதவன் வீட்டுக்கு அடிக்கடி செல்வது இகழ்ச்சியையே தரும். நம்பாதவன் வீட்டிற்கு வெட்கம் இல்லாமல் போகிறான் என்று ஊர் மக்கள் பேசுவார்கள். அவனை அழைப்பதற்கு விரும்பாமல் ஒதுக்கியே வைப்பார்கள். ஆகவே, மேலே கூறப்பட்ட இழிவைத்தரும் செயல்களை செய்யக்கூடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

விளிதல்–அழைப்பது. கூத்தாட்டு–விழா நிகழ்ச்சி. விழ–தடுமாற. களியான்–மது குடிக்காதவன். காவா–நாவடக்கம் இல்லாத. உரை–சொற்கள். தெளியான்–நம்பாதவன். கூரை–வீடு. ஊரெல்லாம்–ஊரில் வசிக்கும் மக்கள் அனைவரும்.

பொருள் சுருக்கம்

அழைக்காத விழாவுக்கு வலிய செல்லுதல், தெளிவோடு இருந்தும் தீய சொற்களைப் பேசுவது, தன்னை நம்பாதவன் வீட்டுக்கு அடிக்கடி சென்று பேசுவது ஆகிய மூன்றும் இகழ்ச்சியைத் தரும் என்பதாகும்.

12. இம்மூன்றும் இனியவை

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

விளக்கவுரை

ஊக்கமும், விடாமுயற்சியும் உடையவன் கடன் படாமல் வாழ்வான். வேளாண்மை என்று சொல்லப் படுகின்ற உதவும் குணமுடையவன் விருந்தினர் இருக்க அவரை உபசரிக்கால் தான் மட்டும் உண்டு மகிழ்வ தில்லை. உயர்ந்த குறிக்கோளை உடையவன் அதை எந்நிலையிலும் மறவாதவன். மேலே கூறப்பட்ட மூவரையும் நட்பாகக் கொள்வது வாழ்வில் இனிமை சேர்க்கும் என்று திரிகடுகம் கூறுகிறது.

யானை உருவத்தில் பெரியது. பலம் கொண்டது. ஆயினும், ஊக்கமுள்ள புலியைக் கண்டு யானை அஞ்சம். அதேபோல் சுறு, சுறுப்பும், முயற்சியும் உள்ளவர்களை கண்டு துன்பம் அஞ்சி ஓடும். ஆகவே, கடன்படாத வாழ்க்கை அவர்களுடையது என்று சொல்லப்பட்டது. விருந்தினரை போற்றி உபசரிப்பவன் வானுல தேவருக்கு விருந்தாளி ஆவான் என்று கூறப்பட்டிருக்கிறது. அடுத்து உயர்ந்த லட்சியம் கொண்டவன் மற்றவர்களுக்கும் அந்த லட்சியத்தைக் கூறுவான். மனிதனின் உண்மையான லட்சியம் என்பது தனக்குள் இருக்கும் தெய்வ ஒளியை, ஆத்ம ஒளியை தரிசிப்பதே ஆகும். அந்த லட்சியத்தை லட்சியவாதி கோடானுகோடி மக்களுக்கு தெரிவிப்பான். ஆகவே, மேலே கூறப்பட்ட சிறந்த மூவரையும் நட்பு கொள்வது இனிமையான வாழ்வு தரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

தாளாளன்–உற்சாகமுள்ளவன். வேளாளன்–உபகாரி. கோளாளன்–லட்சியத்தில் உறுதி கொண்டவன். கேளாக–நட்பாக.

பொருள் சுருக்கம்

கடன்படாமல் வாழும் வாழ்க்கை, விருந்தினர் இருக்க தான் தனித்து உண்டு மகிழாமை, கொண்ட லட்சியத்தில் உறுதியாக இருப்பது ஆகிய மூன்றும் வாழ்க்கைக்கு இனிமை சேர்ப்பதாகும்.

13. இம்மூன்றும் அரியன

சீலம் அறிவான் இளம்கிளை சாலக்
குடியோம்பல் வல்லான் அரசன்–வடுவின்றி
மாண்ட குணத்தான் தவசி என்றிம்மூவர்
யாண்டும் பெறற்கரியார்.

விளக்கவுரை

நல்லொழுக்கமுடையவன் இளமை காலம் முதலே உறவுகொள்ள தகுதியானவன். குடிமக்களை அன்போடு காக்கும் வல்லவன் நல்ல அசரன். குறைகாண முடியாத உயர் குணமுள்ளவன் ஒழுக்கமுடைய துறவி ஆவான். இத்தகைய மூவரும் கிடைப்பது அரிது. இத்தகைய வர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கமாட் டார்கள் என்பதால் அரிது என்று திரிகடுகம் கூறுகிறது.

வானத்திலிருந்து மழைபொழிகிறது. அது கிணற் றில் விழுந்தால் கிணற்று நீர். குளத்தில் விழுந்தால் குளத்து நீர். ஆற்றில் விழுந்தால் ஆற்று நீர். சமுத்திரத்தில் விழுந் தால் சமுத்திர நீர். கங்கையில் விழுந்தால் புனித நீர். அதேநீர் சாக்கடையில் விழுந்தால் சாக்கடை நீராகி விடுகிறது. அதேநீர் சாக்கடையில் விழுந்தால் சாக்கடை நீராகி விடுகிறது.

அதேபோல் மனிதன் எவரிடம் சேருகிறானோ அந்த குணங்களைப் பெறுகிறான். நல்லொழுக்க

முடையவர்களை அடையாளம் கண்டு இளமை காலந் தொட்டு உறவு கொண்டால் அம்மனிதன் சான்றோனாக மாறுவான் என்பது கருத்து. ஆபத்து காலத்தில் குடிமக்களை தெய்வம் போல் கொண்டாடுவார்கள். குடிமக்களின் பேரன்பை பெற்ற அரசன் ஆளும் தேசம் விரைவில் முன்னேற்றம் அடையும் என்பதாகும்.

குறைகாண முடியாத ஒழுக்கமுள்ள துறவியால் லட்சக்கணக்கான மனிதர்களை ஆனமிக திசைக்கு திருப்பிவிட முடியும். அந்த லட்சக்கணக்கானவர்கள் கோடிக்கணக்கான மனிதர்களை நல்திசைக்கு திருப்பி விடுவார்கள். இத்தகைய அற்புதமான குணம் படைத்த வர்கள் எண்ணிக்கையில் குறைவாகத்தான் இருப் பார்கள். அவர்களை அடையாளம் கண்டு நாம் பயன் பெறவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

சீலம்–தூய்மை, நற்குணம். தொட்டே–தொடங்கியே. ஓம்பல்–பாதுகாத்தல். வடு–குற்றம். மாண்ட–சிறந்த. யாண்டும்–எல்லா இடங்களிலும்.

பொருள் சுருக்கம்

ஒழுக்கமுள்ளவன், குடிமக்களை பாதுகாக்கும் வல்லமை உடைய அரசன், தவ ஒழுக்கம் நிறைந்த துறி ஆகிய மூவரும் எண்ணிக்கையில் குறைவாகத்தான் இருப்பார்கள். அவர்களை அடையாளம் கண்டு அவர்கள் வழி நடந்து நாம் பெருமை பெறவேண்டும்.

14. இம்மூன்றும் கூடாத குளங்கள்

இழுக்கல் இயல்பிற்று இளமை பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை-யாண்டும்
செறுவொடு நிற்கும் சிறுமை இம்மூன்றும்
குறுகார் அறிவுடையார்.

விளக்கவுரை

இளமை பருவம் என்பது நன்மை, தீமைகளை அறியாத பருவம் வழி தவறி நடப்பது அப்போது இயல்பு. ஆனால் பெரியோர்கள் அதை அறிந்து வழி தவறா உறுதியை பெற்றிருப்பார்கள். பெரியோர்களால் பழிக்கப் பட்ட செயல்களை செய்வது அறியாமையாமல் வரும் குற்றம் கோபம் கொள்ளுதல் அற்பத்தனமானது. இம் மூன்றையும் கூடாத குணங்கள் என்று அறிந்து பெரியோர்கள் அவற்றை நெருங்க விடமாட்டார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

மனம் என்னும் கடிவாளத்தை சரியாகப் பிரிக்கத் தெரிந்தவர்கள் எந்த பருவத்திலும் வழி தவறி நடக்க மாட்டார்கள். களவு, கொலை, காமம் முதலானவை பெரியோர்களால் பழிக்கப்பட்டவை. அச்செயல்களை செய்பவர்கள் அறியாமை நிறைந்தவர்கள். தங்கள் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்ளும் அறிவிலிகள் அவர்கள் அதேபோல் கோபம் என்பது ஒரு விநாடியில் ஒருவனை சிறையில் தள்ளி விடும். குடும்பத்தை நடு ரோட்டில் நிற்க வைக்கும். ஆகவே, மேலே கூறப் பெற்ற இழிகுணங்களை உதறி தள்ளி நற்குணங்களையே கொள்ள வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

பழித்தவை-பிறர் ஏசும் செயல்கள். பேதைமை-அறியாமை. செறு-கோபம். சிறுமை-அற்பம். இழிவு குறுகார்-நெருங்கமாட்டார்.

பொருள் சுருக்கம்

முறைதவறி நடப்பது. இழிவான வார்த்தைகளைப் பேசுதல். கோபம் என்னும் கொடிய குணம் ஆகிய மூன்றும் கூறடாத கெட்ட குணங்கள் என்பதாகும்.

15. இம்மூவரும் நண்பர்கள் அல்ல

பொய்வழங்கி வாழும் பொறிஅறையும் கைதிரிந்து
தாழ்விடத்து நோக்கும் தட்டையும்-ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும் இம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

விளக்கவுரை

பொய்களை பேசி உயிர் வாழ நினைக்கும் ஏழை. முறை தவறியதால் தாழ்ந்து போன ஒருவனை ஏளனமாக பார்ப்பவன், ஒருவனிடம் நட்பு கொண்டவன் அந்த நண்பனால் தனக்கு என்ன ஆதாயம் என்று நினைப்பவன் ஆகிய மூன்று பேரும் நண்பர்களாக ஆவதற்கு தகுதியற்றவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

பொய்களை பேசுபவனிடம் நட்பு கொண்டால் நம்மையும் பொய்யர்கள் என்றே மற்றவர்கள் எடை போடுவார்கள். தாழ்ந்து போன நண்பனை திருத்துபவளே உண்மை நண்பர். அவளை இழிவாக பார்ப்பவன் நாம் கெட்டுப் போனாலும் அவ்வாறே பார்ப்பான். ஆகவே, அத்தகையவனும் நட்புக்கு தகுதியானவன் அல்ல நட்பு என்பது புனிதமானது. ஆதாயம் தேடுபவன் ஆபத்தானவன். ஆகவே, மேலே கூறப் பெற்ற மூவரும் நட்புக்கு அருகதையற்றவர்கள் என்பது பொருள்.

அ.பொ.

பொய்வழங்கி-பொய்களை பேசி. பொறை-செல்வம் இல்லாமை. கைதிரிந்து-முறைகேடாக. தட்டை-வெறுமையான். ஊழ்-விதி. வினைநலம்-பிரதிபலன்.

பொருள் சுருக்கம்

பொய் பேசுபவன். மற்றவர்களை தாழ்வாக மதிப்பவன். நட்பில் ஆதாயம் தேடுபவன் ஆகிய மூவரும் நட்புக்கு தகுதியற்றவர்கள்.

16. இம்மூன்றும் அழியா புகழ் பெற்றவை

**மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்-உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார்.**

விளக்கவுரை

வாழும் இந்த உலகில் உயர்ந்த புகழை பெற்றவன், கற்புக்கரசியை மனைவியாகப் பெற்றவன், குடிநீர் தட்டுப்பாடு நீங்க நிறைய கிணறுகளை வெட்டுபவன் ஆகிய இம்மூவரும் அழியாத புகழுக்கு சொந்தக்காரர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

சுயநலத்தை துறந்து பிறர் நலனையே சிந்திப்பவர்கள் உயர்நத் புகழைப் பெறுவார்கள். கற்புக்கரசி மனைவியாக கிடைத்து விட்டால் வாழ்நாள் முழுவதும் ஒருவன் இன்பம் அடைன் பெருமையும் பெறுவான். உயிருக்கு ஆதாரமாக இருக்கும் குடிநீர் கிடைக்க கிணறுகள் வெட்டுபவன் மக்களுக்கு உயிர் கொடுத்தவன் ஆகிறான். ஆகவே, மேலே கூறப்பெற்ற மூன்று பேறுகளும் அழியாத புகழை உடையவை என்று கூறப்பட்டது.

அ.பொ.

வான்புகழ்-மிக உயர்ந்த புகழ். நாட்டான்-நிலை நிறுத்து. மாசு-அழுக்கு. சீர்-சிறப்பு. உண்ணுநீர்-குடிநீர். கூவல்-கிணறு. தொட்டாள்-தோண்டியவன்.

பொருள் சுருக்கம்

செயர்க்கரிய செயல்கள் செய்து புகழ் பெற்றவன். கற்புக்கரசியை மனைவியாகப் பெற்றவன், குடிநீர் பஞ்சம் போக்க கிணறுகளை வெட்டுபவன் ஆகிய மூவரும் அழியா புகழைப் பெறுவார்கள்.

17. இம்மூவர் பயனற்றவர்கள்

மூப்பின்கண் நன்மைக்கு அகன்றானும் கற்புடையாள்
பூப்பின்கண் சாராத் தலைவனும்-வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டும் இலிங்கியும் இம்மூவர்
கல்விப் புணை கைவிட்டார்.

விளக்கவுரை

முதுமையை காரணமாக வைத்து நல்ல செயல்களை செய்யாதவன் பருவ வயதில் மனைவியுடன் இன்பம் துய்க்காதவன். வாதம் செய்யும் துறவி ஆகிய மூவரும் பயனற்றவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

முதுமை என்பது அனுபவம் நிறைந்தது. அதைப் பயன்படுத்தி முடிந்தவரை நல்ல செயல்களை செய்ய வேண்டும். வாலிப வயதில் மனைவியிடம் இன்பம் துய்க்காதவன் அப்பெண்ணுக்கு துரோகம் இழைத்தவன் ஆகிறான். துறவி என்பவன் அடக்கமாக ஆன்மீக பொக்கிஷத்தை மக்களுக்கு தரவேண்டும். வீண் பிடிவாதம் கொண்டு வாதம் செய்யக்கூடாது. ஆகவே, தகாத குணங்கள் பெற்ற அம்மூவரும் பயனற்றவர்கள என்பதாகும்.

அ.பொ.

மூப்பு-முதுமை. நன்மை-நல்லொழுக்கம். அகலுதல்-விட்டு விடுதல். பூட்டி-பருவம். வாய்ப்பகை-வாய்ச் சொல்லால் வரும் சண்டை.

பொருள் சுருக்கம்

வயோதிகம் காரணமாக நல்லொழுக்கத்தை கைவிட்டவன் இளம்வயதில் மனைவியை சேராதவன், வாதம் செய்யும் துறவி ஆகிய மூவரும் பயன் இல்லாதவர்கள்.

18. இம்மூன்றும் அச்சத்திற்குரியவை

ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்கு
இருதலையும் இன்னாப் பிரிவும்-உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணி இம்மூன்றும்
கள்வரின் அஞ்சப்படும்.

விளக்கவுரை

வயோதிகத்தை உணரும்போது தோன்றும் பயம், நண்பர்களாய் இருந்து பழகியவர்கள் பிரிந்து செல்வதால் ஏற்படும் பிரிவு துன்பம் அச்சம் தரக்கூடியது. உடல் தோற்றத்தை சீரழிக்கும் நோய் பயத்தைத் தருவது. ஆகவே, இம்மூன்றும் அச்சத்திற்கு உரியவை என்று திரிகடுகம் சுட்டிக்காட்டுகிறது. வயோதிகத்தை உணரும் போது மரண பயம்.

மனிதனை ஆட்டிப் படைக்கிறது. தான் அழிவற்ற ஆத்மா என்ற விவேகமின்மையால் இந்த பயம் வருகிறது. நண்பர்கள் பிரிவதால் ஏற்படும். அச்சமும் அறியாமையால் விளைவதே. எல்லா உறவுகளும் பிரியத்தான் செய்யும். இறைவன் மட்டுமே நம்முடன் எப்போதும் இருப்பவர் என்பதை அறியாததால் இந்த அச்சம் வருகிறது. உடல், நோய்வாய்ப்பட்டு அழியத்தான் செய்யும். இந்த உடல் போனால் வேறு உடல் காத்திருக் கிறது. இதை அறியாததால் ஏற்படும் பயம் இது. ஆகவே, இந்த மூன்று அச்சங்களையும் மேலே கூறப் பெற்ற உண்மைப் பொருளுடன் ஒப்பிட்டு விலக்க வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஒருதலை–வலிமை. மூப்பு–வயோதிகம். புணர்ந்தார்– நண்பர்களாக இருந்தவர்கள். இருதலையும்–இரண்டு பக்கத்திலும். உள்உருக்கி–உள்ளிருந்தபடி மெலியச் செய்யும்.

பொருள் சுருக்கம்

வயது முதிர்ச்சி, நண்பர்களால் பிரிவு, உடலை உருக்குலைக்கும் நோய ஆகிய மூன்றும் அச்சம் தருபவை. இந்த அச்சங்களை உண்மைப் பொருளை உணர்ந்து நீக்க முடியும்.

19. இம்மூவர் கேடு சூழும்

கொல்யானைக் கோடும் குணமிலியும் எல்லில்
பிறன்கடை நின்றொழுகு வானும்-மறந்தெரியா(து)
ஆடும்பாம் பாட்டும் அறிவிலியும் இம்மூவர்
நாடுங்கால் தூங்கு பவர்.

விளக்கவுரை

கொல்ல வரும் யானையை எதிர்க்க பயந்து புற முதுகிட்டு ஓடும் வீரன். இரவில், அடுத்தவன் மனைவியை கூடி மகிழ தருணத்தை எதிர்பார்ப்பவன். பாம்பின் கொல்லும் அறியாது அதை ஆட வைக்கம் மூடன், ஆகிய மூவரையும் கேடு சூழும் என்று திரிகடுகம் கூறுகிறது.

புறமுதுகிட்டு ஓடும் வீரனை யானை துரத்தி கொல்லும் அபாயம் உள்ளது. எதிர்த்து போராடினால் யானை பின்வாங்கிச் செல்ல வாய்ப்பு உண்டு. அடுத்தன் மனைவியை விரும்புபவன் இகழ்ச்சியை அடைவான். தண்டனையும் பெறுவான். பெயர் கெட்டுப் போகும். பாம்பு விஷத்தை உள்ளடக்கியது. அதனை ஆடவைத்து விளையாடும் மூடன் கடிபட்டு மாளக் கூடும். ஆகவே, தகாத செயலாகிய இம்மூன்றை செய்பவன் கேட்டினை அடைவான் என்பனது பொருளாகும்.

அ.பொ.

குணமிலி-நல்ல அறிவு இல்லாதவன். எல்லில்-இரவில். பிறன்கடை-மாற்றான் வீடு. மறம்-கொலை குணம். அறிவிலி-மூடத்தன்மை கொண்டவன். நாடுங்கள்-ஆராயும்போது தூங்குப வர்-விழிப்புணர்வு இல்லாதவர்.

பொருள் சுருக்கம்

போர்க்களத்தில் கொல்ல வருவது யானையே என்றாலும் எதிர்க்க வேண்டியது வீரனின் கடமை. அந்த கடமையை மறந்து ஓடுபவன். அடுத்தவன் மனைவியை அடைய நினைப்பவரை பாம்போடு விளையாடுபவன் ஆகிய மூவரும் ஆபத்தில் சிக்குவார்கள்.

20. இம்மூன்றும் துயரம் தரும்

ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலும்-கதித்தொருவன்
கல்லான் என்று எள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கும் இன்னா தன.

விளக்கவுரை

அடுத்தவர் பொருளை அடைய விரும்புவது, மனைவி மக்கள் பசித்திருக்க அதை நீக்க முயலாமல் சோம்பலில் இருப்பது, படிப்பறிவு இல்லை என்பதற்காக அவனை வெறுத்து ஒதுக்குவது ஆகிய செயல்கள் துயரத்தை கொண்டு வந்து சேர்க்கும் என்று திரிகடுகம் கூறுகிறது.

அடுத்தவர் பொருளை அடைய நினைப்பவன் தீவினையில் சிக்குகிறான். நிழலானது ஒருவனை தொடர்வதுபோல் வினைப்பயனை எவராகிலும் அனுபவித்தே ஆகவேண்டும். குடும்பத்தாரின் பசியைப் போக்கவில்லையென்றால் சுற்றம் மட்டும் வெறுக்காது. ஊரே வெறுக்கும். அவன் நடைப் பிணமாக மதிக்கப் படுவான். கல்வி கற்றவன்தான் அறிவாளி என்பதில்லை. கல்வி பயிலாத மேதைகள் இவ்வுலகில் உண்டு. ஆகவே, கல்வியறிவு இல்லை என்பதற்காக ஒருவரை வெறுத்தால் அது துன்பத்தை வரவழைக்கும். ஆகவே, மேலே கூறப்பட்ட அறியாமை செயல்களை கைவிடவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

பிறன்கட்–பிறர் பொருளில். படுதல்–ஆசை வைத்தல். பாசம்–அன்பு. மடி–சோம்பல். கொளல்–கைக்கொள்ளுதல். கல்லான்–கல்வி கற்காதவன். கதித்து–கோபம் கொண்டு.

பொருள் சுருக்கம்

அடுத்தவர் பொருளை அடைய முற்படுவது, சுற்றத் தாரின் பசியை போக்காமல் சோம்பிக்கிடப்பது. கல்வி கற்காதவனை அவமதிப்பது ஆகிய மூன்று துயரத்தை கொண்டு வரும்.

21. இம்மூன்றும் நல்லவர் லட்சியம்

வருவாயுள் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை–எய்தப்
பலநாடி நல்லலவை கற்றல் இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

விளக்கவுரை

வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை அறச் செயல் களுக்கு செலவிடுவது. போரில் தான் வெற்றி பெற செய்த செயல்களை ஆராய்ந்து அவற்றில் தீயனவற்றை மீண்டும் செய்யாமல் இருத்தல், கற்க வேண்டிய நூல்களை கற்றுத் தெளிதல், ஆகிய மூன்றும் நல்ல லட்சியத்திற்கு வழி வகுக்கும் என்று திரிகடுகம் கூறுகிறது.

அறம் செய்வது புண்ணியத்தை சேர்க்கும். புண்ணி யம் நல்ல செயல்களை செய்ய தூண்டும். நல்ல செயல்கள் தீவினைகளை எரிக்கும். தீவினை தீர்ந்தால் உள்ளே ஒளிரும் இறை ஒளி லட்சியம் ஈடேறிவிடும். அதேபோல் செயல்களில் தீய செயல்களை நீக்குதல், ஆத்ம தரிசனம் தரக் கூடிய மெய்ஞான நூல்களை கற்றுத் தெளிதல் ஆகிய மூன்றும் நல்லோரின் லட்சியங்களாகும்.

அ.பொ.

வருவாய்-வருமானம். கால்-நான்கில் ஒரு பகுதி. செரு-போர். வாய்ப்ப-ஈடுபட்ட நிலை. செய்தவை-முன்பு செய்த தவறான செயல்கள்.

பொருள் சுருக்கம்

வருமானத்தில் கால் பகுதியை அறச் செயல்களுக்கு செலவிடுதல் போரில் தவறான செயல்களை செய்திருந் தால் மீண்டும் அதை தொடராமை, ஆத்ம தரிசனம் பெறுவதற்கு கருவியாக விளங்கும். மெய்ஞான நூல் களைக் கற்றுத் தெளிதல் ஆகிய மூன்றும் மனிதனின் உண்மையான லட்சியத்தை நிவைவேற்றும்.

22. இம்மூன்றும் பிறவிப் பிணியை நீக்கும்

பற்றென்னும் பாசத் தளையும் பலவழியும்
பற்றாது ஓடும் அவாத் தேரும்-தெற்றெனப்
பொய்த்துரை என்னும் பகைஇருளும் இம்மூன்றும்
வித்தற வீடும் பிறப்பு.

விளக்கவுரை

ஒன்றின்மேல் கொண்டிருக்கின்ற பிணைப்பு, பல பொருள்களை அடையத் துடிக்கும் அடங்கா ஆசை, தெளிவாக தெரிந்திருந்தும் பொய்பேசுதலும் ஆகிய மூன்றும் வேரோடு அழிந்தால் பிறவிப் பிணியும் அழியும் என்று திரிகடுகம் கூறுகிறது.

ஆசைதான் பிறப்புக்கும், துன்பத்திற்கும் காரணம் என்று அவதாரப் புருஷர்கள் சொல்லியிருக்கிறார். ஆசை அழிந்தால்தான் வினை அழியும். வினை அழிந் தால் பிறப்புக்கு வேலை இல்லை. ஆகவே, மேலே கூறப் பட்ட மூன்றையும் வேரோடு சாய்க்கவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

பற்று–ஆசை. பாசத்தனை– ஆசை என்னும் அடிமை விலங்கு. அவா–வேட்கையுறுதல். தெற்றென–மிகத் தெளிவாக. பொய்த்துரை–பொய்பேசுதல். வித்து–விதை.

பொருள் சுருக்கம்

ஒன்றின்மேல் வைக்கும் பிணைப்பு, மற்ற பொருள் களை அடையத் துடிக்கும் அடங்காத ஆசை, பொய் பேசுதல் ஆகியவை ஒழிந்தால் பிறவிப் பிணி அழியும்.

23. இம்மூன்றும் நல்ல செயல்கள்

தானம் கொடுக்கும் தகைமையும் மானத்தார்
குற்றம் கடிந்த ஒழுக்கமும்-தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை ஆக்கும் கயிறு.

விளக்கவுரை

பிறர் கேட்காமலேயே அவர்களின் தேவையறிந்து கொடுக்கும் நற்குணமும், பழிக்கு அஞ்சுவோர் பிழை செய்திருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் பாராட்டு கின்ற நல்ல செயலும், சந்தேகத்திற்கு இடமில்லாமல் பல ஆசைகளை விட்டுவிட்டசூழலும் ஆகிய இம்மூன் றும் நல்லவை நீங்காமல் இருக்க கட்டும கயிறு என்று திரிகடுகம் கூறுகிறது.

கொடை என்பது மாபெரும் சக்தி. அந்த சக்தி நல் லன அனைத்தையும் உருவாக்கும். கர்ணன் துரியோதன னிடம் நட்பு வைத்த பிழை செய்தபோதும் அவருடைய கொடைக் குணத்தால் அவன் புகழ் உலகமெங்கும் பரவியது. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று புத்தர் பகவான் கூறினார். ஆகவே, மேலே கூறப்பட்ட மூன்று நல்குணங்களை கொண்டோருக்கு அனைத்தும் நன்மையாகவே முடியும் என்பது பொருளாகும்.

அ.பொ.

தானம்-ஒருவர் கேட்காமலேயே மனம் விரும்பி கொடுப்பது. தகைமை-நல்ல குணம். மானத்தார்-பழிக்கு பயப்படுபவர். கடிந்த-விலக்கிய. ஒழுக்கம்-அனைத்திலும் தூய்மை. தெற்றென-மிகத் தெளிவாக. ஆர்க்கும்-இறுக்கட்டும்.

பொருள் சுருக்கம்

கொடை குணம். நல்லோர் தவறை பொறுத்தல். ஆசையின்றி இருத்தல் ஆகிய இம்மூன்றும் நல்லறச் செயல்களாகும்.

24. இம்மூன்றும் பாழ்நரகம்

காண்தகு மென்தோள் கணிகைவாய் இன்சொல்லும்
தூண்டிலின் உட்பொதிந்த தேரையும்-மாண்டசீர்
காழ்த்த பகைவர் வணக்கமும் இம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கும் அளறு.

விளக்கவுரை

காண்பதற்கு இன்பம் தரும் அழகிய தோள்களை யுடைய வேசிகளின் இனிய மொழி, தூண்டில் முள்ளில் வைத்துள்ள உணவுக்கு ஆசைப்பட்டு அதில் சிக்கும் முன், கொடிய பகைவர்களின் பணிவு ஆகிய மூன்றும் துன்ப நரகத்தில் அழுத்தக்கூடியது என்று திரிகடுகம் கூறுகிறது.

வேசிகளின் இனிய மொழி பொய்யானது. பணம் இல்லை யென்று தெரிந்தால் துரோகம் இழைக்கும் தீயவர்கள் அவர்கள். தூண்டில் முள்ளில் உள்ள மீனை உணவு என்று நினைத்து கவ்வும் மீன் சாகும். அதுபோல் அற்பபொருளுக்கு ஆசைப்பட்டு பெரிய பொருளை தொலைத்தால் துன்பம் தான். மகாத்மா காந்தியை சுடுவதற்கு முன்பு கரம் கூப்பி பணிந்தான் கோட்சே. அக் கொடியவனின் கரங்களிலிருந்த துப்பாக்கிதான் அவரை

பொன்றது. ஆகவே பகைவரின் வணக்கத்தை நம்பக் கூடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

காண்தகு-பார்ப்பதற்கு இனிமையான. கணிகையர்-வேசிகள். தூண்டில்ல-தூண்டில் முள். உட்பொதிந்த-வைத்த தேறை ஒருவகை மீன். மாண்ட-உயர்ந்த. காழ்த்த-வயிரம் பாய்ந்த.

பொருள் சுருக்கம்

வேசிகளின் இனிமையான மொழி, தூண்டிலில் சிக்கிய மீன், பகைவர்களின் வணக்கம், ஆகிய இம்மூன்று ஒருமனிதரை ஆழ்நரகத்தில் ஆழ்த்தக் கூடியவை. (தூண்டிலில் வைக்கப்பட்ட உணவை சாப்பிட ஆசைப்பட்டு மீன் சிக்குவதுபோல் அற்ப பொருளுக்கு ஆசைப்பட்டு விலை உயர்ந்த பொருளை மனிதன் இழப்பது நரகத்திற்கு சமம் என்பதாகும்).

25. இம்மூவர் அறிஞர்க்கு எதிரிகள்

செருக்கினால் வாழும் சிறியவனும் பைத்தகன்ற
அல்குல் விலைபகரும் ஆய்தொடியும்-நல்லவர்க்கு
வைத்த அறப்புறம் கொன்றானும் இம்மூவர்
கைத்துண்ணார் கற்றறிந் தார்.

விளக்கவுரை

ஆணவம் கொண்டு வாழும் சிற்றறிவுடையவன். படம் போல் அகன்ற மனைவிடமுடைய வேசிகள் பணம் தருவார்க்கு இன்பம்தர தன்னாலே விற்பவர்கள் (அழகிய வளையல்களை அணிந்த இந்த விலை மகளிர்) துறவிகளுக்காக அமைத்த அறச்சாலைகளை அழித்தவன் ஆகிய இம்மூவரும் தரும் உணவை அறிஞர்கள் உண்ண மாட்டார்கள். ஆகவே இம்மூவரும் அறிஞர்களுக்கு எதிரிகள் என்று திரிகடுகம் கூறுகிறது. விவேகமுடைய அறிஞர்கள் வேசிகளை விரும்பமாட்டார்கள். கற்புக்

கரசியையே கரம் பிடித்து மனைவியாக கொள்வர். ஆணவம் கொண்டவர்களை அறிஞர்கள் விரும்பமாட்டார்கள். ஏனெனில் ஆணவம்தான் அழிவுக்கு வழி வகுக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும் ஆன்மீக பொக்கிஷங்களை உலக மக்களுக்கு வழங்கும் துறவிகளுக்காக அமைக்கப்பட்ட அறச்சாலைகளை அழிப்பவர்கள் ஆண்டவனை அவமதித்து அழிவின் விளிம்பில் நிற்பவர்கள். ஆகவே, இம்மூவரிடமிருந்து அறிஞர் உணவை பெறமாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

செருக்கு–ஆணவம். சிறியான்–அற்பத்தனம் உடையவன். பைத்தகன்ற–படம்போல் விரிந்த. அல்குல்–மறைவிடம். ஆய்தொடி–ஆய்ந்தெடுத்து அணிந்த வளையல்கள். அறப்புறம்–அறச்சாலை.

பொருள் சுருக்கம்

ஆணவம் கொண்ட அற்பர்கள், பணத்திற்காக தங்களையே விற்கும் வேசிகள், துறவிகளின் அறச்சாலைகளை அழிப்பவர்கள். ஆகிய மூவர் தரும் உணவை அறிஞர் ஏற்க மாட்டார்கள்.

26. இம்மூவர் உயர்ந்தவர்கள்

ஒல்வது அறியும் விருந்தினனும் ஆருயிரைக்
கொல்வது இடைநீக்கி வாழ்வானும்-வல்லிதில்
சீலம் இனிதுடைய ஆசானும் இம்மூவர்
ஞாலம் எனப்படு வார்.

விளக்கவுரை

விருந்தை ஏற்க செல்பவன் விருந்து தருபவனின் நிலையை அறிந்து ஏற்க வேண்டும். அளவுக்கு மிஞ்சி எதிர்பார்க்கக் கூடாது. மேலும், உயிர் கொலை நடக்காமல் தடுப்பவன், ஒழுக்க நெறியில் நிற்கும் ஆசிரியன் ஆகிய இம்மூவரும் உயர்ந்தவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

விருந்தை ஏற்பவன் நாகரிகமாக நடக்க வேண்டும். விருந்து கொடுப்பவனின் நிலையை அறிந்து கொடுத்ததை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்பவனே உயர்ந்தவன். ஒரு உயிருக்கு ஆபத்துவராமல் தடுப்பவன் உயர்ந்தவன். ஒரு ஆட்டிற்காக தன் உயிரை தர தயாராக இருந்தார் புத்தர் பகவான். அதனால்தால் அவரை உயர்ந்த சான்றோர் என்று உலகம் போற்றுகிறது. ஒழுக்கநெறியில் நிற்கும் ஆசிரியனால்தான் மாணவர்களுக்கு ஒழுக்க நெறியை உணர்த்த முடியும். வாய்பேச்சில் ஒழுக்கத்தை போதிக்கும் ஆசிரியன் செயலில் ஒழுக்கம் தவறியவனாக இருந்தால் அந்த போதனை மாணவர்கள் மனதில் பதியாது. ஆகவே, நிலமை அறிந்து விருந்தை ஏறப்வன், உயிரை காப்பவன், ஒழுக்கநெறியுடைய ஆசிரியன் ஆகிய மூவரும் உயர்ந்தவர்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆருயிர்–ஆருமையுடையதான உயிர். இடைநீக்கி–தடுத்து. வல்லிதில்–வலிமையுடன். சீலம்–தூய்மையான நல்லொழுக்கம். ஞாலம் எனப்படுவார்–உயர்ந்தோர் என்று போற்றப்படுவார்கள்.

பொருள் சுருக்கம்

அளவுக்கு அதிகமாக ஆசைப்படாமல் கிடைத்ததை விரும்பி ஏற்கும் விருந்தினன், உயிர் கொலையை தடுக்கும் நல்லவன், ஒழுக்க நெறியில் உறுதி கொண்ட ஆசிரியன் ஆகிய இம்மூவரும் உலகத்தவரால் உயர்ந்தவர்கள் என்று போற்றப்படுவார்கள்.

27. இம்மூன்றும் உயர்ந்தவர்களின் செயல்கள்

உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்–தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

விளக்கவுரை

உணவு உட்கொள்வதற்கு முன்பு குளித்து நீராடி விட்டு உண்பவர். எவ்வளவு கொடுத்தாலும் நடுநிலை தவறாமல் பொய்சாட்சி சொல்லாதவர், பசியால் உண வில்லாமல் தோல் சுருங்கி சாகும் நிலை வந்தபோதும் வாய்மை தவறாதவர்; ஆகிய இம்மூவரும் மனத்தால்... வாக்கால் செயலால் பிழைபடாத தூயோர் செயலாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

தூய்மை என்பது அகம், புறம் இரண்டிலும் தூய்மை காப்பதாகும். புறத்தூய்மை நீராடுவதால் உண்டாகும். அகத்தூய்மை வாய்மையால் உண்டாகும். இந்த தூய்மைதான் தெய்வத்திடம் நம்மை நெருங்க வைப்பதாகும். எவ்வளவு பணம் கொடுத்தாலும் நடுவு நிலமை தவறாதவர்களை தேவர்களும் போற்றிக் கொண்டாடுவார்கள். பசியால் துடித்தபோதும் உண்மை நெறியை விடாதவர்கள்தான் மகான்களாக மாறுகிறார்கள். மேலே கூறப் பெற்ற தூய்மை நெறி மூன்றும் மனிதனை தெய்வமாக்கும். ஆகவே, இந்த செயல்கள் உயர்ந்தோர் செயல்கள் என்று கூறப்பட்டது.

அ.பொ.

பால்பற்றி–ஒருபக்கமாக சாய்த்து. சான்றாண்மை–பெருந்தன்மை. குன்றா–குறையாத. தூஉயம்–தூய்மையாளர். தொழில்–செயல்.

பொருள் சுருக்கம்

உணவு கொள்வதற்குமுன் நீராடி சுத்தமாக இருப்ப வர் நடுநிலை தவறாமல் இருப்பவர். பசியால் வாடிய போதும் வாய்மை நிலையில் பிறழாதவர் ஆகிய மூவரின் செயல்கள் மிக உயர்ந்த செயல்களாகும்.

28. இம்மூவர் வீணர்கள்

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்
இல்லது காமுற்று இருப்பானும்-கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானும் இம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார்.

விளக்கவுரை

எந்த விதத்திலாவது தான் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக தன் வெற்றியை தடுப்போர் மீது கோபம் கொள்ளும் நல்முயற்சியில்லாதவன். தனக்கு கிடைக்க முடியாததை அடைய விரும்பி காத்திருக்கும் மூடனும், ஒருவன் கற்றவற்றில் உண்மையை தெளியாமல் பிறர் சொல் கேட்டு குறை கூறுபவனும் வீணர்கள் ஆவார். உமியை குத்தி கைவலி கண்டவர் என்றும் கூறலாம். உமியை குத்தினால் அரிசி கிடைக்காது. அதபோல் மேலே கூறப்பட்ட மூவரும் பயனற்றவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

எந்தவிதத்திலாவது வெற்றி பெறவேண்டும் என்று நினைப்பவன் அதர்ம செயல்களைச் செய்வான். அதைக் காணும் நல்லோர்கள் அவன் வெற்றியை தடுப்பார்கள். தடுப்பவர்கள் மீது கோபம் கொள்ளாமல் நியாய வழியில் முயற்சி செய்து வெற்றி பெறவேண்டும். தன் வலிமையை அறிந்து ஒன்றை விரும்பவேண்டும். தன் வலிமை அறியாமல் ஆசைபட்டு காத்துக்கிடப்பது, பயனற்றது. கற்றவர் பேச்சில் குறை இருக்குமானால் சுயமாக யோசித்து தெளிய வேண்டும். பிறர் கூறியதை நம்பி குறை கூறுபவன் இகழ்ச்சியை அடைவான் என்பது பொருளாகும்.

அ.பொ.

வெகுண்டு-கோபம் அடைந்து. நோன்பிலி-சுயமுயற்சி இல்லாதவன். காமுற்று-பேராசை கொண்டு. செவிக்குற்றம்-காதால் கேட்ட பிழை. உமி-நெல்லின் தோல்.

பொருள் சுருக்கம்

தான் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக மற்ற வர்கள் மீது சினம் கொண்டு சீறுபவன், கிடைக்கா முடியாததற்காக காத்திருப்பவன், பிறர் கற்ற கல்வியில் மற்றவர் சொல்வதை கேட்டு சுயமாக ஆராயாமல் குற்றம் சொல்பவன் ஆகிய மூவரும் பயன்றவர்கள்.

29. இம்மூன்றும் நன்மை பயப்பவை

பெண்விழைந்து பின்செலினும் தன்செலவில் குன்றாமை
கண்விழைந்து கைஉறினும் காதல் பொருட்கின்மை
மண்விழைந்து வாழ்நாள் மதியாமை இம்மூன்றும்
நுண்விழைந்த நூலவர் நோக்கு.

விளக்கவுரை

ஒரு பெண் ஆசைப்பட்டு பின் தொடர்ந்து வந்த போதும் தன் நிலை தாழாமல் இருத்தல். தன்னிடம் வந் தடைந்த மற்றவர்கள் பொருள்மீது ஆசை வைக்காமல் இருத்தலும், உலக வாழ்வு வசதிகளுக்காக நல்லறச் செயல்களை மறவாமல் இருத்தலும் மேலோர் லட்சிய மாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

பெண் ஆசை என்பது நம்மை கீழே தள்ளுகிறது. நம் தெய்வீகத்தை வெளிப்படுத்த முடியாத வகையில் திரையாக மறைக்கிறது. அதனால் நிலையான பேரானந் தத்தை பறிகொடுத்து பெண்களால் கிடைக்கும் சிற்றின் பத்தில் மூழ்கி மனிதர்கள் மரணம் அடைகிறார்கள். இந்த அவல நிலை கூடாது. ஒரு பெண்ணே வலிய வந்தாலும் விலகிச் செல்ல வேண்டும். சந்தர்பப சூழல் காரணமாக மற்றவர்கள் பொருள் நம் கைவசம் சிக்கிக் கொண்ட போதும் அதனை அபகரிக்க ஆசைப்படக்கூடாது. அப்படி செய்தால் தீவினை என்னும் பாவமூட்டையால் துன்பம் வந்து தாக்கும். நாம் வசதியாக வாழ்வதிலேயே

கவனம் செலுத்தி நல்ல புண்ணிய காரியங்களை செய் யாமல் விட்டால் வறுமை, நோய், முதலான துன்பங்கள் விளைத்துக் கொள்ளும் என்பது பொருளாகும்.

அ.பொ.

விழைந்து-விருப்பமுற்று. குன்றாமை-தன் நிலை தவறாமை. கண்-இடம். கைஉறினும்-தன்னிடம் சிக்கிய போதும். காதல்-ஆசை. வாழ்நாள்-வாழுகின்ற தினங்களில்.

பொருள் சுருக்கம்

பெண்ணே வலியவந்தாலும் தவறு செய்யாத உறுதி. பிறர் பொருளை விரும்பாமல் இருத்தல். நல்ல அறச் செயல்களை மறவாமல் செய்து வருதல் ஆகிய மூன்றும் மனிதனுக்கு நன்மை பயப்பவை.

30. இம்மூன்றும் புகழ் தரும்

தன்நச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்காறு இகந்தானும் இம்மூவர்
நின்ற புகழ் உடையார்.

விளக்கவுரை

தன்னைத் தேடி விரும்பி வந்தவர்களை ஒதுக்காது உபசரித்தல், மிகுநத செல்வம் சேர்ந்ததும் தன் நண்பர், உறவினர் ஆகியோரை மறக்காதிருத்தல் மற்றவர்கள் மீது எந்த நிலையிலும் பொறாமை படாமல் இருத்தல் ஆகிய மூன்று நற்குணங்களும் மனிதனுக்கு பெரும் புகழைத் தரும் என்று திரிகடுகம் கூறுகிறது.

வறுமை நிறைந்தவன் நம்மை தேடி வரலாம். நோய்வாய்ப்பட்டவன் உதவி நாடி வரலாம். அல்லது வேறு துன்பங்களை அடைந்தவன் அதை நீக்க நம்மைத் தேடிவரலாம். அந்த சமயத்தில் இகழ்ச்சியாகப் பேசி

அவர்களை ஒதுக்கக்கூடாது. ஏனெனில் இறைவளே அவர்கள் வடிவில் வந்து நம் புண்ணிய கணக்கை உயர்த்த வாய்ப்பு தருகிறான். இதை மறக்கக்கூடாது. செல்வம் சேர்ந்ததும் இயற்கையாகவே பலர் ஆணவம் கொண்டு நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை உதாசீனம் செய்கிறார்கள். இந்நிலை நீடித்தால் மகாலட்சுமி விலகிவிடுவாள். வறுமை வந்து வருத்தும் என்பது கருத்து. பொறாமை என்பது சாத்தான். இதையே அசுரர் என்று சொல்கிறோம். இந்த சாத்தான் மனிதனிடம் புகுந்து விட்டால் அவன் அதள பாதாளத்தில் விழுந்து நரகத் துன்பத்தை அடைவான். ஆகவே, எந்த நிலையிலும் பொறாமை கூடாது.

அ.பொ.

நச்சி–விரும்பி. என்னல்–இகழ்ச்சியாகப் பேசுதல். மன்னிய–மிகுந்த. பொச்சாப்பு–மறதி. நீத்தான்–கை விட்டவன். அழுக்காறு–பொறாமை. இகந்தான்–நீங்கியவன்.

பொருள் சுருக்கம்

தன்னைத் தேடி வந்தவர்களை ஒதுக்கக்கூடாது. பணக்காரன் ஆனதும் உறவுகளை மறக்கக்கூடாது. எந்த நிலையிலும் பொறாமை கூடாது.

31. இம்மூன்றும் மெய்ஞானம்

பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாங்கு
இல்லறம் முட்டாது இயற்றலும்-வல்லிதின்
தாளின் ஒருபொருள் ஆக்கலும் இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை.

விளக்கவுரை

படிப்பதற்கு ஏராளமான நூல்கள் இருந்தபோதும் நம் அச்சத்தைப் போக்குகின்ற, மரணத்தை வெல்லச் செய்கின்ற உத்தம நூல்களை படிப்பது, பிறரோடு

பகிர்ந்து உண்டு மகிழ்ச்சியாக வாழ்வது, உறுதி, விடா முயற்சி கொள். புதியதாக சாதனை படைப்பது. ஆகிய மூன்றும் கல்வி கேள்விகளில் எல்லாம் தலையாய ஞானம் என்று திரிகடுகம் கூறுகிறது.

தேவையற்ற ஆயிரம் நூல்களை படிப்பதைக் காட்டிலும் நம் அச்சத்தைப் போக்குகின்ற ஒரு சிறிய நூலை வாசிப்பது நம் வாழ்க்கையையே புரட்டிப் போட்டு விடும். அச்சத்தையும், மரணத்தையும் வெல்லவே நாம் வந்திருக்கிறோம். அதை மறந்து குப்பைகளை வாசிக்காமல் பொக்கிஷ (ஞான பொக்கிஷம்) நூல்களை வாசிக்க வேண்டும்.

மரங்கள், கற்களைப் போல் வீணாக இருந்து சாவதைவிட வாழும் வாழ்க்கையில் புதிய சாதனையை படைக்க வேண்டும். அதற்கு உறுதி, விடாமுயற்சியை துணையாகக் கொள்ளவேண்டும். தன்னைப் போல் ஒரு மனிதன் பட்டினியால் துடித்திருக்கும்போது தான் மட்டும் தனித்து உண்பது மிருகச் செயல் கிடைத்ததை பகிர்நது உண்பதே பேரானந்தம். இந்த மூன்று விஷயங்களை அறிந்தவன் மெய்ஞானி.

அ.பொ.

பாத்துண்ணல்–பகுத்துண்டு இல்வாழ்க்கையை நடத்துதல். முட்டாது–தடையில்லாமல். இயற்றல்–நடத்துதல். தான்–முயற்சி. கேள்வி–கல்வி, கேட்டறியும் செவிவழிச் செல்வம்.

பொருள் சுருக்கம்

ஞான நூல்களை கற்பது, பிறர்க்கு கொடுத்து தானும் உண்டு வாழும் நல்வாழ்வு, புதிய சாதனைகளை நிகழ்த்துதல் ஆகிய மூன்று செயல்களும் மெய்ஞானத்தை தரக்கூடியது.

32. இம்மூன்றும் படித்தவர்களின் கடமை

**நுண்மொழி நோக்கிப் பொருள் கொளலும் நுற்குஎலா
வெண்மொழி வேண்டினும் சொல்லாமை-நன்மொழியைச்
சிற்றினம் அல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்.**

விளக்கவுரை

சொல்லின் உண்மைப் பொருள் அறிந்து கற்க வேண்டும். கற்ற நூலுக்கு பொருந்தாத விஷயங்களை பிறர் விரும்பிக் கேட்டாலும் அதை சொல்லாமல் இருப்பதும், நல்லறிவு புகட்டும் சொற்களை அற்பர்கள் அல்லாத நல்லவரிடம் மட்டுமே சொல்வதும் ஆகிய இம்மூன்றும் கல்வி கற்றவர் கடைபிடிக்க வேண்டிய மாபெரும் கடமை என்று திரிகடுகம் கூறுகிறது.

உண்மை என்பது ஆத்மா. பொய் என்பது உடல். ஆனால், உடல் வாழ்க்கையே மெய்யானது என்று உண்மைக்கு மாறான பொருளில் கல்வி இருக்குமா னால் அது மனித குலத்தை சீரழித்து விடும். ஆகவே, உண்மையை கல்வி போதிக்கவேண்டும் என்பது கருத்து. ஒரு நூலின் மூலதத்துவத்தை ஒதுக்கி விட்டு அதற்கு மாறான கருத்துக்களை சொல்லும்போது பிறர் அதை விரும்பிக் கேட்கலாம்.

அதற்காக பொருந்தாத கருத்துக் களை கூறக் கூடாது. தகுதியற்றவர்களிடம் நல்ல கருத்துக் களை கூறினால் ஏற்க மாட்டார்கள். முத்துக்களை கொட்டி வைத்தால் நாய் அதன் பெருமை அறியாது. முதுது வியாபாரிக்குதான் அதன் பெருமை தெரியும். ஆகவே, அற்பர்களிடம் நல்ல விஷயங்களைக் கூறி காலத்தை வீணடிக்கக்கூடாது. மேலே கூறப்பட்ட மூன்று விஷயங் களும் கல்வியாளர்கள் கடைபிடிக்க வேண்டியவை என்பது பொருளாகும்.

அ.பொ.

நுண்மொழி–ஆழ்ந்த நுட்பமான சொல். ஏலா–பொருந்தாத. வெண்மொழி–வீண் சொற்கள். சிற்றனிம்–அற்பத்தனம் கொண்டவர்கள். பூண்–கைகொள்ளவேண்டியது. கடன்–கடமை.

பொருள் சுருக்கம்

சொல்லின் உண்மைப் பொருளையே கிரகிக்க வேண்டும். உயர் தத்துவங்களை நல்லவர்களிடம் மட்டுமே கூற வேண்டும். ஒரு நூலில் உள்ள மூலகருத்துகளை மறந்து பொருந்தாத விஷயங்களை செல்லக்கூடாது.

33. இம்மூன்றும் அரசர் கடமைகள்

கோல்அஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ
ஆலம் வீழ்போலும் அமைச்சனும்–வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும் இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

விளக்கவுரை

குடிமக்கள் தனக்கு கட்டுப்பட்டு வாழுமாறு அரசனின் செயல்கள் இருக்கவேண்டும். அவ்வாறு வாழும் மக்களை பாதுகாக்கும் வண்ணம் அமைச்சனின் செயல்கள் அமைய வேண்டும். ஆலமரத்தை அதன் விழுதுகள் தாங்கிப் பிடிப்பது போல் அமைச்சன் குடிமக்களை தாங்கி காக்க வேண்டும். வேலுக்கு உறுதி தருவது பூண். அதுபோல் மனவலிமையும், உடல் வலிமையும் கொண்ட படை வீரர்களின் காவல் அமையும்படி அரசன் செயல்பட வேண்டும். இம்மூன்றும் அரசனின் கடமை என்று திரிகடுகம் கூறுகிறது.

குடிமக்களின் நலனில்ல அரசனக்கு அன்பும் அக்கறையும் இருந்தால் அவர்கள் அரசனின் செங்கோலுக்கு அடங்கி நடப்பார்கள். அரசன் கொடுங்கோலனாக

இருந்தால் குடிமக்கள் அரசனின் ஆணைகளை அலட்சியப்படுத்துவார்கள். ஆகவே, அரசன் எப்போதும் குடிமக்களின் நலனையே கடமையாக கொள்ளவேண்டும். அதேபோல் அமைச்சன் நாட்டின் செழிப்புக்கு வழி வகுக்கும் வகையில் அறிவுரைகளை வழங்க வேண்டும். அந்நியர்கள் நாட்டை அபகரிக்க முடியாத அளவுக்கு படைபலத்தை வலிமையாக வைக்கவேண்டும். இம்மூன்றும் அரசன் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளாகும்.

அ.பொ.

தழீஇ-அரவணைத்து. ஆலம்வீழ்-ஆலம் விழுது. கடைமணி - பூண். திண்மை-வலிமை. காப்பு-காபல். படைவேந்தன்-படையுடைய அரசன். விடல்-விடாதிருத்தல்.

பொருள் சுருக்கம்

குடிமக்கள் அரசனின் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கும்படி அரசனின் செயல்கள் இருக்க வேண்டும். ஆலம் விழுது ஆலமரத்தை தாங்குவது போல் அமைச்சனின் மதிநுட்பம் மக்களை தாங்குவதாக இருக்க வேண்டும். படைபலம் உறுதியாக நாட்டை பாதுகாக்கும் வகையில் அமைய வேண்டும்.

34. இம்மூவரும் உயர்ந்தோர்

மூன்று கடன்கழித்த பார்ப்பானும் ஓர்ந்து
முறைநிலை கோடா அரசும்-சிறைநின்று
அலவலை இல்லாக் குடியும் இம்மூவர்
உலகம் எனப்படு வார்.

விளக்கவுரை

ஓதல், ஓதுவித்தல், ஏற்றல் என்ற மூன்றையும் நித்திய கடமையாகக் கொண்ட அந்தணன், ஒருபக்கமாக சாயாமல் நடுநிலையுடன் ஆட்சி செய்யும் அரசன், அந்த அரசனின் ஆணைக்கு கட்டுப்பட்டு கவலையின்றி வாழும்

மக்கள் ஆகிய மூவரும் உயர்ந்தோர் என்று திரிகடுகம் கூறுகிறது.

மெஞ்ஞான கருத்துக்களை முறைப்படி மக்களுக்கு புரியும் வகையில் கூறும் அந்தணன், எந்தநிலையிலும் நடுவுநிலையில் இருந்து சாம, தான, பேத, தண்டம் ஆகி நான்குமுறைகளை கையாளும் அரசன். அரசுக்கு ஒத் துழைப்பு கொடுக்கும் குடிமக்கள் ஆகிய மூவரும் உயர்ந்தோர் எனப்படுவர். இம்மூவருர் அமைந்த நாடு செல்வ செழிப்பிலும், ஆன்மிக நெறியிலும் சிறந்து விளங்கும் என்பது உட்பொருளாகும்.

அ.பொ.

ஓர்ந்து-ஆராய்ந்து. முறைநிலை-நீதி நெறிமுறைமை. கோடா-கோணத, தவறாத, சிறை-கட்டுப்பாடு. அலவலை-கவலை. உலகம்-உயர்ந்தோர்.

பொருள் சுருக்கம்

தன் கடமை தவறாத அந்தணன், நடுநிலை தவறா அரசன் கவலையில்லாமல் அமைதியாக வாழும் குடிமக்கள் ஆகிய மூவரும் உயர்ந்தோர்.

35. இம்மூவர் புகழுக்குரியவர்

முந்நீர்த் திரையின் எழுந்து இயங்கா மேதையும்
நுண்நூல் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை இன்றி மயல் அறுப்பான் இம்மூவர்
மெய்ந்நீர்மை மேல் நிற்பவர்.

விளக்கவுரை

சமுத்திர அலைகள் போல ஆர்ப்பரிக்காமல் அடக்கமுடன் இருக்கும் கல்வியாளன், நூலின் நுட்ப மான பொருளை அறிபவன், பிறர் தன்னிடம் குற்றம் காணாத வகையில் வாழ்பவன் ஆகிய மூவரும் உயர்ந் தோர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. காய்ந்த பனை

ஓலைகள் சலகலக்கும். அவை கீழே விழுவதற்கு இந்த சல, சலப்பு அறிகுறி. அதேபோல் கல்வியாளன் ஆர்ப் பாட்டம் செய்தால் அவன் தாழ்வு அடைவான். அடக் கத்துடன் இருந்தால் புகழ் பெறுவான். நூலின் உண்மைப் பொருளை தன் மதிநுட்பத்தால் அறிய வேண்டும்.

அறிந்ததை பிறர் பயன் பெறும் வகையில் சொல்ல வேண்டும். உண்மைக்கு மாறாக கருத்துக்களை புரிந்து கொண்டால் எவருக்கும் நன்மை பயக்காது. சொல்... செயல்... சிந்தனை ஆகிய மூன்றிலும் தூய்மையாக இருப்பவர்களை எவரும் குறை கூறமுடியாது. அப்படி கூறினாலும் எடுபடாது. மேலே கூறப்பட்ட நற்குணங் களை கொண்ட இம்மூவரும் அழியா புகழைப் பெறு வார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

முந்நீர்-கடல் (ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என மூன்று நீராலானது). திரை-அலை. இயங்கா-அலையா. நுண்-நுட்பமான. கேள்வி-கேள்வி ஞானமாகிய செவிச் செல்வம். மைநீர்மை-ஐயப்பாடு. மயல்-மய்ககம்.

பொருள் சுருக்கம்

அறிவாற்றல் இருந்தும் அடக்கமாக இருப்பவன். கல்வியில் கரைகண்டவன். சந்தேகப்படாத நிறைவு தன்மையுடையவன் ஆகிய மூவரும் புகழுக்குரியவர் களாகும்.

36. இம்மூவர் அறிவிலிகள்

ஊன்உண்டு உயிர்கட்கு அருளுடையேம் என்பானும்
தான்உடன் பாடின்றி வினைஆக்கும் என்பானும்
காமுறு வேள்வியில் கொல்வானும் இம்மூவர்
தாம் அறிவார் தாம் கண்டவாறு.

விளக்கவுரை

மாமிசம் உண்டு உடலை வளர்ப்பவர்கள், தாங்கள் உயிர்களிடத்தில் அன்பு கொண்டவர்கள் என்று தாங் களே சொல்லிக் கொள்வதும், தானாக முயன்று செய் யாமல் எல்லாம் விதிப்படியே நடக்கும் என்று செய லற்று இருப்பவனம், பயன் கருதி அல்லது விரும்பியதை அடைய உயிர் பலியிட்டு யாகம் செய்பவர்களும் அறிவற்றவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

ஒரு உயிரை கொன்று உண்பவர்கள பிற உயிர் களிடம் அன்பு கொண்டவர்கள் நாங்கள் என்றும் சொல்வது பொருந்தாது. ஆகவே, அறிவிலிகள் எல்லாம் விதிப்படி நடக்கும் என்று செயலற்றிருப்பவன் சோம்பேறி. அவன் இந்த வாழ்கையில் தோல்விகளை யும், அவமானங்களையுமே சந்திப்பான். ஆகவே, அவனும் அறிவிலியே ஒரு உயிரை பலியிட்டு தனக்கு வேண்டியதை பெற யாகம் செய்வது மூடத்தனம் இதைத்தான் புத்தரும் கூறினார். ஆடுகளை பலியிடுவ தால் உன்தேசம் செழிக்கும் என்றால் அதைவிட மேலான மனித உயிரை பலிகொடு. இன்னும் அதிகமாக உன் நாடு செழிக்கும் என்றார் அவர். அதைக்கேட்ட மன்னன் திருந்தினான். ஆகவே, ஒரு உயிரை பலிகொடுத்து பலன் பெற நினைப்பவன் அறிவிலியே ஆகும்.

அ.பொ.

ஊன்-இறைச்சி. அருள்-அன்பு. உடன்பாடு-செயல். வினை-ஊழ்வினை. ஆக்கும்-நடத்தும். காமுறு-விரும்பி. வேள்வி-யாகம்.

பொருள் சுருக்கம்

புலால் உண்பவன் தான் உயிர்களிடம் அன்புடைய வன் என்று கூறிக் கொள்வதும், எல்லாம் விதிப்படி நடக்கும் என்று சொல்லிக் கொண்டு செயலற்று இருப்

பதும். உயிர் பலி கொடுத்து வேண்டியதை பெறலாம் என்று நினைப்பவர் அறிவிலிகள்.

37. இம்மூன்றும் கற்றவர் கருத்து

குறளையுள் நட்பளவு தோன்றும் உறலினிய
சால்பினில் தோன்றும் குடிமையும்-பால்போலும்
தூய்மையில் தோன்றும் பிரமாணம் இம்மூன்றும்
வாய்மை உடையார் வழக்கு.

விளக்கவுரை

ஒருவரின் செல்வவளம் குறைகிறபோது அவரிடம் நட்புக் கொண்டவர்களின் அளவு எண்ணிக்கை தெரிய வரும். ஒருவரிடம் அமைந்திருக்கின்ற பெருந்தன்மை யைக் கொண்டு அவருடைய குலப் பெருமை புரியும். வெள்ளை மனம் கொண்டவர் நிறைவு குணம் உடைய வர். இம்மூன்று பெரியோர் கூறும் கருத்துக்களாகும். செல்வம் குறையும்போது தான் உண்மையான நண் பர்கள் தெரியவரும். செல்வ வளம் இருக்கும் போது பலாப் பழத்தை ஈ மொய்ப்பதைப் போல் மொய்ப் பார்கள். செல்வவளம் வற்றுகிறது என்று தெரிந்தால் உண்மையான நண்பர்கள் மட்டுமே, மிஞ்சுவார்கள். மற்றவர்கள் விலகுவார்கள். எதிரிகளிடமும் இரக்கம் காட்டுதல், எல்லோரையும் சமமாக மதித்தல் ஆகிய பண்பு நல்ல குலத்தில் பிறந்தவர்களிடம் மட்டுமே விளங்கும். எவருக்கும் தீமை நினைக்காத வெள்ளை உள்ளம் கொண்டவர்கள்தான் இந்த உலகில் நிறை குணம் உள்ளவர்கள். இந்த நிறை குணம்தான் இறைவ னிடம் நெருங்கச் செய்யும் அற்புத குணம் என்பது பொருளாகும்.

அ.பொ.

குறளையுள்-குறைவுபட்ட இடத்து. உறல்-சேர்தல். இனிய சால்பு-மேலான பெருங்குணம். குடிமை-குடிப்புகழ். பிரமாணம்-அளவு. வாய்மை-மெய்ம்மை. வழக்கு-சொல்.

பொருள் சுருக்கம்

பணத்தால் நட்பும், பெருந்தன்மையால் குடிப் புகழும், தூயமனத்தால் குணநிறைவும் கண்டறியப்படும் என்பர் மெய்யரிவுடைய மேலோர்.

38. இம்மூன்றும் செல்வத்தை அழிப்பவை

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்-முன்னிய
பல்பொருள் வெஃகும்-சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

விளக்கவுரை

தன்னைத் தானே வியந்து பாராட்டிக் கொள்ளும் கர்வம், பணிவு இல்லாமல் வீண் கோபம் கொள்ளுதல், அடைய விரும்பும் பொருள்களை தனக்குரியதாக ஆக்கிக் கொள்ளும் கெடுமதி ஆகிய இம்மூன்றும் செல்வத்தை சீரழித்து விடும் படைக்கலன்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. நம்மை மற்றவர்கள்தான் புகழ வேண்டுமே ஒழிய நமக்கு நாமே புகழ்ந்து ஆணவம் கொள்ளக்கூடாது. இந்த ஆணவம் செல்வ செழிப்பை அழிக்கும். மற்ற எல்லா சிறப்புகளையும் அழிக்கும். நாம் விரும்பும் பொருள்களை எப்படியும் அடையாளம் என்று நினைக்கும் கெடுமதி கேட்டினையே தரும். பங்காளி சொத்தை தனக்குரியதாக ஆக்க முயன்ற துரியோதனன் அழிந்தான். மாற்றான் மனைவியார் சீதாபிராட்டியை தனக்குரியவனாக ஆக்க முயன்ற ராவணன் அழிந்தான். ஆகவே, இந்த கெடுமதி கேட்டினையே தரும். கோபம் என்பதுகுடியை கெடுக்கும். கோபத்தால் செல்வத்தை இழந்தோர், வாழ்க்கையை இழந்து சிறையில் இருப்போர் பலர். ஆகவே, கோபத்தை கைவிடவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வியந்து-பெருமைப்படுத்திக் கொண்டு. தருக்கல்-ஆணவம் கொள்ளுதல். தாழ்வின்றி-அடக்கம் கொள்ளாமல். வெகுளி-சினம். முன்னிய-எண்ணிய. வெஃகும்-கவரக் கருதும்.

பொருள் சுருக்கம்

தன்னைத்தானே புகழ்ந்து ஆணவம் கொள்ளுதல் வீண்கோபம் கொள்ளுதல், பிறர் பொருளைக் கவர நினைக்கும் துர்புத்தி ஆகிய இம்மூன்றும் செல்வத்தை அழிப்பவை.

39. இம்மூன்றும் நல்லவர் செய்யமாட்டார்

புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டீர்த் தோய்தல்
கலமயக்கும் கள்ளுண்டு வாழ்தல்-சொலை முனிந்து
பொய்மயக்கம் சூதின்கண் தங்கல் இம்மூன்றும்
நன்மை இலாளர் தொழில்.

விளக்கவுரை

பொருளுக்கு உடலை விற்கும் விலை மகளிரோடு கூடி மகிழ்தல். ஒருவர் குடித்த எச்சில் கலத்தில் மற்றவர்களும் கலத்தில் வேறுபாடு இன்றி கள் குடித்தல். பெரியோர் சொற்களை மீறி சூதாட்டத்தில் ஈடுபடுதல் ஆகிய இம்மூன்றையும் நல்லவர் செய்ய மாட்டார்கள். தீயவர்களே செய்வார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. விலை மாதுவுடன் சேர்தல் இகழ்ச்சியைத் தரும். உடல் நலனை கெடுக்கும் அதேபோல் கள் குடித்தால் மூளை மழுங்கும். தீயசெயல்களை செய்விக்கும். சூதாட்டம் சொத்துக்களை அழித்து வறுமையைக் கொண்டு வரும். ஆகிய இம்மூன்றையும் தீயவர்களே செய்வார்கள். நல்லவர்கள் ஒருபோதும் செய்யமாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

புலை-இழிந்த. மயக்கம்-மனம் மயங்குதல். பொருட் பெண்டிர்-விலை மகளிர். தோய்தல்-தழுவுதல். சொலை-சொற்களை. முனிந்து-வெறுத்து. பொய் மயக்கம்-பொய்யான மனோபாவம்.

பொருள் சுருக்கம்

வேசிகளிடம் உறவு, கள்ளுண்ணல், பெரியோர்களின் அறிவுரையை மீறி சூதாட்டத்தில் ஈடுபடுதல் ஆகிய மூன்றும் தீயவர்களின் செய்கைகளாகும். நல்லோர் ஒருபோது இச்செயல்களை செய்யமாட்டார்கள்.

40. இம்மூன்றும் அறிவாளிகளின் செயல்கள்

வெகுளி நுணுக்கும் விறலும் மகளீர்கட்கு
ஒத்த ஒழுக்கம் உடைமையும்-பாத்துண்ணும்
நல்அறிவாண்மை தலைப்படலும் இம்மூன்றும்
தொல் அறிவாளர் தொழில்.

விளக்கவுரை

பெருகி வரும் கோபத்தை அடக்கும் ஆற்றல், பெண்களுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி ஒழுக்கம் காத்தல், பதுத்துண்டு வாழ்தல் ஆகிய மூன்று குணங்களும் அறிவாளிகளின் சிறப்பு என்று திரிகடுகம் கூறுகிறது.

கோபம் என்பது அழிவுக்க வழிவகுக்கும். அந்த அழிவை தடுக்க வேண்டுமானால் கோபத்தை அடக்க வேண்டும். கோபம் அடங்க வேண்டுமானால் மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சிவேண்டும். இப்பயிற்சிகளை சான்றோர்களான அறிவாளிகளே செய்வார்கள். மேலும் பெண்கள் ஒழுக்கத்தையே விரும்புவார்கள். ஆகவே, பெண்கள் மகிழும்படி ஒழுக்கத்தை மேற்கொண்டால் குடும்பம் கோயிலாக மாறும். அன்பு பெருகும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வெகுளி–சினம். நுணுக்கும்–அடக்கும். விறல்–வலிமை. ஒத்த–இசைவான. பாத்துண்ணும்–பகுத்துண்ணும். தலைப்படல்–ஈடுபடல். தொல்லறிவாளர்–அறிவால் மூத்தோர்.

பொருள் சுருக்கம்

கோபத்தை கட்டுப்படுத்தி அடக்குதல், பெண்கள் மகிழும்படி ஒத்து வாழ்தல், பகுத்துண்டு வாழ்தல் ஆகிய மூன்று குணங்களும் அறிவாளிகளின் சிறப்பு குணங்களாகும்.

41. இம்மூன்றும் தலையாய பண்புகள்

அலந்தார்க்கு ஒன்று ஈந்தபுகழும் துளங்கினும்
தன்குடிமை குன்றாத் தகைமையும்–அன்போடி
நாள்நாளும் நட்டார் பெருக்கலும் இம்மூன்றும்
கோள்வியுள் எல்லாம் தலை.

விளக்கவுரை

வறுமையால் துன்பப்படுகிறவர்களுக்கு ஒன்றைக் கொடுத்து உதவுவதால் வரும் புகழும், துன்புற்று வாழும் காலத்திலும் தன்குலப் புகழ் கெடாது வாழும் தன்மையும் அன்பு கொண்டு நண்பர்கள் கூட்டத்தை பெருக்கிக் கொள்வதும் ஆகிய மூன்றும் உயர் பண்புகள் யாவற்றிலும் தலையாய பண்புகள் என்று திரிகடுகம் கூறுகிறது.

வறுமையால் வாடுபவர்களுக்கு உதவுவது நம் புண்ணிய கணக்கை உயர்த்துகிறது. புண்ணிய கணக்கு உயர்வதால் தீவினை அழிகிறது. தீவினை அழிந்தால் தெய்வீகம் வருகிறது. மனிதன் வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் நாணயத்தின் இருபக்கங்கள் போல வரும். துன்பம் வரும்போது மனதம் தளராமல் தன் உயர் பண்புகளை விடாமல் காத்தால் அத்துன்பம் தானே விலகி ஓடும்.

தங்கத்தை நெருப்பில் போடுவதால் அது மேலும் ஜொலிக்கிறது. அதேபோல் துன்பத்திலும் உயர் பண்புகளை விடாது காப்பது பெரும் புகழைப் பெற்றுத் தரும். சத்சங்கம் என்பதுதான் நண்பர்கள் கூட்டம். நல்ல குணங்களையுடைய நண்பர்களை பெருக்குவதால் பல நன்மைகள் உண்டாகும். தீய சகவாசம் கூடாது என்பது உட்கருத்து.

அ.பொ.

அலந்தார்-வருத்தப்படுபவர். ஈந்த-தந்துதவிட. துளங்கினும்-கலக்க முற்றாலும். குடிமை-குலஒழுக்கம். குன்றா-குறையாத. தகைமை-நல்ல தன்மை. அன்பு ஓடி-அன்பு கொண்டு.

பொருள் சுருக்கம்

பிறர் துன்பப்படும்போது உதவி செய்தல், தான் துன்பம் அடையும் காலத்தில் நல்ல உயர் பண்புகளை கைவிடாமல் இருத்தல். சத்சங்கத்தை பெருக்குதல் ஆகிய இம்மூன்றும் தலைசிறந்த நற்பண்புகளாகும்.

42. இம்மூன்றும் வேளாளர்க்கு அழகு

கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினிதும் பார்ப்பனரைத் தீப்போல்-ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல் இம்மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு.

விளக்கவுரை

சூதாடி பெற்ற செல்வத்தை விரும்பாதிருத்தல். பார்ப்பனரிடம் தீப்போல் நினைத்து பழகுதல் (தீயை மிகவும் நெருங்கினால் சுடும். மிகவும் விலகினால் குளிர் நீங்காது. அதேபோல் பார்ப்பனரிடம் அளவோடு பழக வேண்டும் என்பதாம்). உழவுத் தொழிலை சிறப்பாக செய்தல் ஆகிய மூன்றும் வேளாளர்குடி மக்களுக்கு அழகு என்று திரிகடுகம் கூறுகிறது.

சூதாடும்போது சிலசமயம் வெற்றிக் கிடைக்கலாம் அதை நம்பி அச்செல்வத்தை விரும்பினால் தோல்வி ஏற்பட்டு பணம் காலியாகி விடும். ஆகவே சூதாடக் கூடாது. சூதாடும் பணத்தை விரும்பவும் கூடாது. பார்ப்பனர் பற்றி நல்லாதனார் கூறுகிறார். அவர்களை மிகவும் நெருங்கவும் கூடாது. அதிகம் விலகவும் கூடாது என்று தீ போல பழக வேண்டும் என்பதை மேலே விளக்கியிருக்கிறோம்.

எதனால் அவ்வாறு ஆசிரியர் கூறுகிறார் என்பது தெளிவாகவில்லை. எல்லா குலத் திலும் நல்லோர், தீயோர் உண்டு. ஆகவே, பார்ப்பனர் பற்றி கூறுவதை அப்படியே விட்டு விடுவோம். உழவுத் தொழிலை கண்ணும் கருத்துமாக செய்தால் விளைச்சல் பெருகும். துன்பமின்றி வாழ்க்கையை நடத்தலாம். பிறர்க்கும் உதவி செய்து புகழுடன் வாழலாம் என்பது கருத்து.

அ.பொ.

கழகத்தால்-சூதாட்டத்தால். காமுறாமை-விரும்பாமை. ஒழுகல்-நத்தல். உழவின்கண்-பயிர்த் தொழிலில். காமுற்று-விரும்பி. வேளாண்குடி-வேளாளர் குலம்.

பொருள் சுருக்கம்

சூதாட்டத்தால் வரும் பணத்தை விரும்பக்கூடாது. பார்ப்பனரிடம் எச்சரிக்கையாகப் பழக வேண்டும். வேளார்கள் உழவுத் தொழிலை சிறப்பாக செய்ய வேண்டும்.

43. இம்மூன்றும் முக்திக்கு வித்தாகும்

வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை அடங்குதல் திப்பிரயமாம்-பொய்இன்றி
நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்தின் தீர்ந்த பொருள்.

விளக்கவுரை

ஐம்புலன்களால் வரும் ஆசையை அடக்குதல் என்பது இப்பிறப்பில் பெரும் செல்வம் பேறாகும். ஐம்புலன்களின் செயல்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவற்றின் வழி செல்லவிடாமல் அடக்கி ஆளுதல் அடுத்த பிறப்பில் தெய்வபிறப்பை உருவாக்கும் பொய்யாக இல்லாமல் உண்மையாகவே மனம் அடங்கினால் முக்தி வரும். இம்மூன்றும் பொய்யில்லாத மெய்ப் பொருள் என்று திரிகடுகம் கூறுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் லௌகிக சுகத்தை விரும்பி அலைகின்றன. அவைகளை அடட்ககி கட்டுப்படுத்தினால் நாம் தெய்வீகமானவர்கள என்ற உணர்வுவெளிப்படும். அடுத்த பிறவியில் தெய்வீக பிறப்பு வரும். அதன் காரணமாக மரணத்தை வெல்லும் உபாயம் வரும். மனம் அடங்குதலே முக்தி. இப்பிறவியிலேயே மனம் முழுவதும் அடங்கினால் ஜீவன் முக்தி பெறலாம்.

அ.பொ.

வாயின்–ஐம்பொறி வழியாக. துப்புரவு–பிறவிபேறு. மாசற்ற–குற்றமற்ற. திப்பியமாம்–தெய்வத் தன்மை உடையதாம். நெஞ்சம் அடங்கதல்–மனம் அடங்குதல்ல. வீடாகும்–முக்தி அளிக்கும்.

பொருள் சுருக்கம்

ஐம்புலன்களால் வரும் ஆசையை அடக்கவேண்டும். ஐம்புலச் செயல்களையும் அடக்க வேண்டும். மனத்தை அலையவிடாமல் அடக்கவேண்டும். இதனை பயிற்சியாக செய்தால் முக்தி வரும்.

44. இம்மூன்றும் நோய்போல துன்பம் தரும்

விருந்தின்றி உண்ட பகலும் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக கங்குலும்-இல்லார்க்குஒன்று
ஈயாது ஒழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே உரன் உடையார்க்கு.

விளக்கவுரை

விருந்தினர் இல்லாத பகல் உணவு, அழகிய அணி, மணிகள் புனைந்த மனைவியுடன் கூடி மகிழாத இரவுப் பொழுது, ஏழை எளியவர்களுககு எதுவும் கொடுக்காத காலைப் பொழுது ஆகியவை அறிவில் சிறந்த பெருமக் களுக்கு நோய் போல துன்பம் தரும் என்று திரிகடுகம் கூறுகிறது.

பகலில் விருந்தினரோடு உண்ணவேண்டும். இரவில் மனைவியுடன் கூறவாழவேண்டும். காலையில் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பது கருத்து. விருந்தினரைப் நாம் போற்றினால் தேவர்கள் நம்மை விருந்தாளியாக ஏற்க காத்திருப்பார்கள். மனைவியோடு கூட வேண்டும். மற்ற பெண்களை விரும்பக்கூடாது. ஏழை, எளியவர்க்கு உதவி செய்வதால் நம் வினைகள் அழிகின்றன. ஏழை, எளியவர்களாக இறைவனே நிற்கிறான். நம் புண்ணிய கணக்கை உயர்த்த இறைவன் நமக்கு வழிகாட்டுகிறான் என்பது பொருளாகும்.

அ.பொ.

திருந்திழையார்–திருத்தமான எழில்நிறைந்த அணிமணிகள் அணிந்த பெண். புல்லா–தழுவி மகிழாமல். புடை பெயரா–நீங்காத. கங்குல்–இரவு. ஈதல்–கொடை. ஒழித்தகன்ற–முடிந்துபோன. உரன் உடையார்–அறிவுடையார்.

பொருள் சுருக்கம்

விருந்தினருடன் உண்ணாத பகல் உணவு, மனைவி யுடன் கூடி மகிழாத இரவு, ஏழைகளுக்கு உதவாமை ஆகிய குறைகள் நோய்போல் பற்றி துன்பம் தரும்.

45. இம்மூவர் நரகம் செல்வர்

ஆற்றானை ஆற்றென்று அலைப்பானும் அன்பின்றி
ஏற்றார்க்கு இயைவ கரப்பானும்–கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானம் இம்மூவர்
நிரயத்துச் சென்றுவீழ் வார்.

விளக்கவுரை

ஒன்றை செய்ய முடியாத நிலையில் இருக்கும் உறுதியும் வலிமையும் இல்லாதவன், திறமையும் இல்லாதவன் ஆகிய ஒருவனை அந்த செயலைச் செய்யுமாறு வற்புறுத்துபவன், உள்ளத்தில் எள்ளளவும் அன்பில்லாம் மற்றவர்க்கு கொடுக்காமல் பொருளை மறைப்பவன், ஒருநாள் யமன் வந்து உயிரை கொணடு போவான் என்று வாழ்நாளில் எண்ணிப் பார்க்காதவன் ஆகிய மூவரும் நரகத்தில் வீழ்வார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

ஒருவனால் செய்ய முடியாத செயலை செய்யச் சொல்வது குற்றம். ஏனெனில் செயலும் வெற்றி பெறாது. வீண் விரயம் ஏற்படும். கால விரயமும் ஏற்படும். மன உளைச்சலும் வரும் என்பதாகும். மற்றவர்களுக்கு கொடுக்காமல் பொருளை மறைப்பவன் தீவினை மூட்டையை ஏற்றிக் கொள்கிறான். அந்த தீவினை மூட்டைக்கான துன்பத்தை அனுபவிக்காமல் அவ் வினை அகலாது. செக்குமாடு போல் வினைகளிலேயே உழன்று கொண்டிருந்தால் மனிதனுக்கு சொந்தமான தெய்வீக நிலையை எப்போது அடையமுடியும்? ஆகவே, பிறருக்கு கொடுப்பவனே விவேகி என்பதாகும். எமன் எல்லோரையும் கவர்ந்து செல்வான் என்ற உண்மையை எண்ணிப் பார்க்காமல் சுற்றியுள்ள சகோதர மக்களை வஞ்சிப்பவன், துரோகம் செய்பவன் ஆகியோர் நாக்கில் வீழ்ந்து பெருந்துன்பம் அடைவார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆற்றான்–முடியாதவன். ஆற்றென்று–செய்யச் சொல்லி. அலைப்பான்–வற்புறுத்துபவன். ஏற்றார்க்கு–பிச்சை எடுப்பவர்க்கு. இயைவ–முடிந்ததை. கரப்பாளன்–மறைப்பவனும்.

பொருள் சுருக்கம்

ஒருகாரியத்தை செய்துமுடிக்கும் திறன் இல்லாத வனை அக்காரியத்தை செய்யும்படி தொந்தரவு செய்வது, இல்லாதவர்க்கு உதவிசெய்யாமல் இருப்பது. மரணத்தை சிந்தித்து நல்ல செயல்களை விரைந்து செய்யாமல் இருப்பது ஆகியவை நரகத்தில் சேர்க்கும்.

46. இம்மூன்றும் பயனில்லாதவை

கால்தூய்மை இல்லாக் கலிமாவும் காழ்கடிந்து
மேல்தூய்மை இல்லா வெங்களிறும்-சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளி இம்மூன்றும்
குறுகார் அறிவுடையார்.

விளக்கவுரை

நடையில் ஒழுங்கு இல்லாத குதிரை, கட்டுத்தறியை முறித்துக் கொண்டு எவரும் மேல் அமர்ந்து செலுத் தாதபடி கோபம் முரண்டு யானை, கல்வி கற்க வரும் மாணவர்களிடம் சூத்திரம், பகை, கோபம் ஆகியவற்றை காட்டும் ஆசிரியன் உள்ள பள்ளி ஆகிய மூன்றும் அறிவுள்ளவன் நெருங்க நினைக்காத இடங்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

நடையில் ஒழுங்கில்லாத குதிரை எந்த நேரத்திலும் சவாரி செய்பவனை கீழே தள்ளி காயப்படுத்தும். மூர்க்கத்தனமான யானை எதற்கும் பயன்படாது. மாணவர்களிடம் கோபம் கொள்ளும் ஆசிரியனால் பாடங்களை சரியாக கற்பிக்க இயலாது. ஆகவே, அறிவுள்ளோர் இப்படிப்பட்ட இடங்களுக்கு செல்ல மாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

கால்-நடை. தூய்மை-ஒழுங்கு. காழ்-கட்டுத்தறி. கடிந்து-முறித்துக் கொண்டு. மேல்தூய்மை-மேலே அமர்ந்து செல்ல இயலாத வெங்களிறு. சீறி-ஆத்திரமடைந்து.

பொருள் சுருக்கம்

நடையில் ஒழுங்கு இல்லாத குதிரை, மூர்க்கதனமான யானை, கோபம், ஆத்திரம் உள்ள ஆசிரியன் ஆகிய நிலை பயனற்றது. அறிவுடையோர் இங்கு செல்லமாட்டார்கள்.

47. இம்மூன்றும் பாதுகாத்துக் கொள்ளக்கூடியவை

சில்சொல் பெருந்தோள் மகளிரும் பல்வகையும்
தாளினால் தந்த விழுநிதியும்-நாடோறும்
நாத்தளிர்ப்ப ஆக்கிய உண்டியும் இம்மூன்றும்
காப்பிகழல் ஆகாப் பொருள்.

விளக்கவுரை

இனிமையாக பேசும் பருத்த தோள்களையுடைய பெண்கள், பல நல்வழிகிளல் ஈட்டிய செல்வம், அன்றாடம் நாக்கில் நீர் ஊறம் வண்ணம் சமைக்கும் உணவு ஆகிய மூன்றும் காப்பாற்றி பாதுகாக்கக் கூடியவை என்று திரிகடுகம் கூறுகிறது. இன்மையாக பேசும் பெண்கள் நல்ல குணவதிகளாகவும் இருப்பார்கள். அப்படிப்பட்ட பெண்ணை வாழ்க்கைத் துணையாக பெற்ற ஒருவன் அவனை அன் புடன் வசப்படுத்திக் கொள்ளவேண்டும்.

திரைகடலோடியும் திரவியம் தேடு என்பது தமிழரின் கொள்கை. அதுபோல் பல வழிகளில் சம்பாதித்த செல்வத்தை பொறுப்புடன் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஊதாரித்தனமாக செலவழித்து இழந்து விடக் கூடாது. உண்ணும் உணவு சுவையாக இருந்தால் அதுஒரு தனிஇன்பம் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட நல்வாய்ப்பு வாய்க்கும் பட்சத்தில் அதனை தவறவிடக்கூடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

சில்–மென்மை. சிலதாள்–முயற்சி. தந்த–தேடிய. விழுநிதியம் – உயர்நத் செல்வம். நாத்தளிர்ப்ப–நாக்கில் எச்சில் ஊற. உண்டி– உணவு. காப்பு–காப்பாற்றுதலில்.

பொருள் சுருக்கம்

பண்பு நிறைந்த பெண், உழைத்து ஈட்டிய செல்வம். சுவையுடன் பக்குவமாக சமைத்த உணவு ஆகிய மூன்றும் காத்துக் கொள்ளக்கூடியவை.

48. இம்மூவர் உண்மை அறிந்தவர்

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்து
சோறென்று கூழை மதிப்பானும்-ஊறிய
கைப்பதனைக் கட்டிஎன்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்.

விளக்கவுரை

தன்னை ஒருவன் ஏசினாலும் அதை இன்சொல் லாக கொள்பவன், நெய்விட்டு ஆக்கிய நெய்சோறு என்று கூறி பருகுவதற்கு கூழ் தந்தாலும் அதை ஏற்று போற்றுபவன். கசப்பான ஒன்றைத் தந்தாலும் அதை வெல்லக்கட்டி என்று நாக்கில் எச்சில் ஊற உண்டவன், ஆகிய மூவரும் மெய்பொருளாகிய இறைவனை அறியும் பக்குவம் பெற்றவர்கள என்று திரிகடுகம் கூறுகிறது.

இறைவனை காண ஆவல் உள்ளவர்கள் ஏச்சுக்களை பொருட்படுத்தமாட்டார்கள். போற்றுதல்களையும் ஏற்கமாட்டார்கள். எவ்வளவு எளிமையான உணவு தந்தாலும் அதை தேவாமிர்தமாக பருகுவார்கள். கசப்பான பொருளைத் தந்தாலும் வெல்லக் கட்டியை சாப்பிடுவதுபோல விரும்பி சாப்பிடுவார்கள். ஏனெனில் மனத்தளவில் இவர்கள் பற்றினை நீக்கியவர்கள். பற்றற்றாளாகிய இறைவன் மீது மட்டும் பற்று வைத் திருப்பவர்கள். ஆகவே, இத்தகைய குணம் உள்ளவர்கள மெய்ப் பொருளை அறியும் தகுதி வாய்ந்தவர்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

வைத்தனை-வசவுகள். பெய்து-இட்டு. மதிப்பான்-ஏற்றுப் போற்றுபவன். கைப்பு-கசப்பு. கட்டி-வெல்லக்கட்டி. மெய்ப்பொருள் - பரம் பொருள்.

பொருள் சுருக்கம்

ஒருவன் திட்டினாலும் அதை இனிய வையாக ஏற்பது எளிய உணவையும் விரும்பி ஏற்பது, கசப்பு பொருளையும் இனிப்பாக கருதி சுவைத்துண்பது ஆகிய பக்குவப்பட்ட குணம் உடையவர் மெய்ப்பொருளை அறியும் தகுதி வாய்ந்தவர்.

49. இம்மூவர் இப்பிறவிக்கு உதவமாட்டார்கள்

ஏவாது மாற்றும் இளம்கிளையும் காவாது
வைதுஎள்ளிச் சொல்லும் தலைமகனும்-பொய்தொள்ளி
அம்மனை தேய்க்கும் மனையாளும் இம்மூவர்
இம்மைக்கு உறுதி இல்லார்.

விளக்கவுரை

பெற்றோர் கட்டளையை ஏற்று செய்யாத மகன், மனைவியை போற்றாமல் இகழும் கணவன், பொய்யை தேடி கண்டு பிடித்து தான் வாழ வந்த வீட்டின் பெருமையை அழிகின்ற மனைவி ஆகிய இப்பிறவிக்கு துணையாக ஆகமாட்டார்கள். அதாவது, உதவமாட்டார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பது வேதவாக்கு. இதை மீறும் மகன் உதவாக்கரை என்பதாகும். வீட்டுக்கு வந்த குலமகளான இல்லத்தரசியை எப்போதும் இகழ்ந்து பேசக் கூடிய கணவன், பொய்களை தேடி கண்டுபிடித்து புகுந்த வீட்டின் பெருமைகளை குலைக்கின்ற மனைவி ஆகியோர் இல்லறத்திற்கு தகுதியற்றவர்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஏவு-கட்டளையிடும. ஆதும்-எதையும். வைது-திட்டி. எள்ளி-இகழ்ந்து. மனை-வீடு. தேய்க்கும்-அழிக்கும். இம்மை-இப்பிறவி. உறுதி-உற்றதுணை.

பொருள் சுருக்கம்

தாய், தந்தை சொல்லை மதிக்காத பிள்ளை, நல்ல குணவதியான மனைவியை இகழும் கணவன், புகுந்த வீட்டு பெருமையை குலைக்கும் மனைவி ஆகிய மூவரும் இப்பிறப்பில் உதவமாட்டார்கள்.

50. இம்மூவர் பாவிகள்

கொள்பொருள் வெஃகிக் குடிஅலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழைஅருக்கும் கோள்.

விளக்கவுரை

மக்களை துன்புறுத்தி செல்வத்தைப் பெறும் அரசன், உள்ளதை உள்ளபடி கூறாமல் பொய் பேசும் மக்கள், மனைவி என்ற எல்லையைமீறி தான் தோன்றித்தனமாக நடக்கும் பெண்கள் ஆகிய மூவரும் பாவிகள் என்று திரிகடுகம் கூறுகிறது.

விரைந்து பெய்யும் மறையை தடுக்கும் கோள்கள் என்றும் அது சுட்டிக்காட்டுகிறது. மக்களுக்கு தெய்வம் போன்றவன் அரசன். அத்தகைய அரசன் கொடுங் கோலனாகி மக்களை வருத்தி பொருள் பறித்தால் அவன் தெய்வம் அல்ல. பாவி, மனைவி என்பவள் கணவனுக்குக் கட்டுப்பட்டவன். அந்த எல்லையை மீறுபவன் மனைவி அல்ல... பாவி. உண்மையை திரித்து பேசும் மக்கள், மக்கள் என்ற தகுதியை இழந்த பாவிகள் என்பது பொருளாகும்.

அ.பொ.

கொள்–கொள்ளுகின்ற. வெஃகி–விரும்பி. குடி–குடிமக்கள். அலைக்கும்–வருத்தும். சலமொழி–பொய் சொற்கள். கோள்–கிரகம்.

பொருள் சுருக்கம்

மக்களை புண்படுத்தி செல்வம் பறிக்கும் கொடுங் கோல் அரசன், மனைவி என்ற எல்லையை மீறி அதர்ம வழி செல்பவன், பொய்கூறும் மக்கள் ஆகியோர் பாவிகள்.

51. இம்மூவர் குணம் இது

தூர்ந்தொழுகிக் கண்ணும் துணைகள் துணைகளே
சார்ந்தொழுகிக் கண்ணும் சலவர் சலவரே
ஈர்ந்தகல் இன்னாக் கயவர் இவர்மூவர்
தேர்ந்தக்கால் தோன்றும் பொருள்.

விளக்கவுரை

வறுமை வந்தபோது துணைக்கு வருபவர் உறவினர் களே ஆவர். கருத்து ஒத்தவராக பழகினாலும் பகைவர் பகைவரே ஒருவருக்கு துன்பம் தருகின்ற கீழி மக்கள் இரண்டாகப் பிளக்கப்பட்ட கல் போன்றவர்கள். இவர்கள் ஒன்று சேரமாட்டார்கள். மனிதனை வறுமை சூழும்போது உதவி செய்ய உறவினர்களே முன்வரு வார்கள். நண்பர்கள் கூட உதவலாம். அது சொற்பமே. ஆபத்துக்கு பெரும்பாலும் துணை நிற்பவர்கள் உறவி னர்கள் என்பதால் அவர்களை பகைத்துக் கொள்ளக் கூடாது. பகைவர்கள் இருவர் கருத்து ஒத்து பழகினாலும் உள்ளே பகைமை நிறைந்திருக்கும். காலத்தை எதிர் பார்த்து பழிவாங்க அவர்கள் காத்திருப்பார்கள். ஆகவே, எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சுயநலம், நயவஞ்சகம், பொறாமை நிறைந்தவர்கள் கீழ்மக்களாகும். இரண்டாக பிளக்கப்பட்ட கல் ஒன்று சேராது. அது போல் கீழ்மக்கள் நல்லபுத்தி கூறினாலும் ஏற்கமாட் டார்கள். ஒன்றுசேரமாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

தூர்ந்து-வருமானம். குறைந்து. ஒழுகக் கண்ணும்-வாழும் சூழலில். சலவர்-பகைவர். ஈர்ந்த-பிளவுபட்ட. இன்னா-துன்பம். கயவர்-கீழ்மக்கள்.

பொருள் சுருக்கம்

வறுமைத் துன்பம் சூழும்போது உதவ வருபவர் பெரும்பாலும் உறவினரே. சேர்ந்து பழகினாலும் எதிரிகள் எதிரிகளாகவே இருப்பர். தீயவர்களை கீழ்மக்கள் ஒன்றுபடமாட்டார்கள்.

52. இம்மூன்றும் எழிலானது

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை-நண்ணும்
மறுமைக்கு அணிகலம் கல்வி இம்மூன்றும்
குறியுடையார் கண்ணே உள.

விளக்கவுரை

கண்களுக்கு அழகு சேர்ப்பது கனிவான பார்வை. கணவனால் விரும்பப்படும் பெண்ணுக்கு அழகு சேர்ப்பது நாணம். மறுபிறப்புக்கு அழகு கல்வி கேள்விகளில் சிறந்திருந்தன. இம்மூன்றும் ஒரு லட்சியத்தை கொண் டுள்ளவர்களிடம் மட்டுமே இருக்கும் என்று திரிகடுகம் கூறுகிறது.

கருணையுடன் பார்க்கும் பார்வை ஒன்றுதான் கண்ணுக்கு அழகு மை தீட்டுவது போன்ற புறச் சாதனங்கள் நிலையற்றவை ஒருவரின் கண்களைப் பார்த்தே அவருடைய குணங்களை அறிவாளிகள் அறிந்து கொள்வார்கள். அழகு என்பதே புறத்தில் இல்லை. அகஅழகுதான் உண்மையனி அழகு. அழகான தோற்றம் என்று நாம் கூறும் ஆண்கள், பெண்கள் அக அழகு அற்றவர்களாக இருந்தால் யோகியர்களின் கண்களுக்கு

விலங்கு முகமாகவே அவர்கள் தோன்றுவார்கள். ஆகவே, பிற உயிர்களை கருணையுடன் பார்ப்பதுதான் கண்களுக்கு அழகு.

ஒருபெண்ணுக்கு அழகு நாணம்தான். கணவனுக்கு எதிராக பேசுபவர்கள், கணவனுக்கு பணிவிடை செய் யாமல் ஆணவமாக நடப்பவர்கள் வெளித்தோற்றத்தில் பணிவிடை செய்யாமல் ஆணவமாக நடப்பவர்கள் வெளித்தோற்றத்தில் எவ்வளவு அழகு பெற்றிருந்தாலும் சுவலட்சணமாணவர்களே ஆகும். மறுபிறப்பில் நல் லொழுக்கம் முளளவர்களாகவும், இறைபக்தி கொண்ட வர்களாகவும் விளங்கவேண்டுமானால் இப்பிறப்பில் மெய்ஞான நூல்களை கற்கவேண்டும். கற்றபடி செயல்பட முயலவேண்டும். அப்படி செய்தால் இறைவனை காணும் விதத்தில் மறுபிறப்பும் அமையும்.

அ.பொ.

அணிகலம்-அழகு சேர்க்கும் ஆபரணங்கள். கண்ணோட்டம் - கனிவான பார்வை. காமுற்ற-விரும்பிய. நாணுடைமை-பழிபாவங்களுக்கு பயம் கொள்ளுதல். நண்ணும்-அடையும். மறுமை-மறுபிறப்பு. குறி-கொள்கை.

பொருள் சுருக்கம்

கண்களுக்கு அழகு கருணைப் பார்வை. கணவனால் விரும்பப்படும் பெண்களுக்கு அழகு நாணம். மறுபிறப் புக்கு அழகு சேர்ப்பது ஆன்மிக பொக்கிஷய நூல்களில் தெளிவான பயிற்சி பெற்றிருத்தல்.

53. இம்மூன்றும் இவர் அறியாதவை

குருடன் மனையாள் அழகும் இருள்தீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும்-பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணின் தெரியாப் பொருள்.

விளக்கவுரை

கண்பார்வை இல்லாதவனின் வாழ்க்கைத் துணைவியின் அழகு, கற்கவேண்டிய நூல்களை கற்காமல் ஒருவன் பேசும் சொற்கள், இசை, ஞானம் இல்லாதவன் கேட்கும் யாழ், இசை ஆகிய மூனறும் அவற்றின் அருமை தெரியாதவரிடம் சிக்கியதாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

மனைவி அழகாக இருந்தால் கண்பார்வையில்லாத கணவனால் அந்த அழகை ரசிக்கமுடியாது. ஆகையால், அவன் அழகின் அருமை தெரியாதவனாகிறான். எந்த விஷயமாக இருந்தாலும் சத்தியத்தை அடிப்படையாக கொண்டிருக்கவேண்டும். அந்த சத்தியத்தை உணர்த்தும் மெய்நூல்களை கற்காமல் அதைப்பற்றி பேசும் சொற்கள் பயன்படாது என்பதாகும். இசை ஞானம் என்பது ஒரு வரப்பிரசாதம். அதை அறியாதவர் யாழ் இசையை வெறுமனே கேட்க முடியுமே தவிர, அதன் அருமையை புரிந்து ஆனந்தம் அடையமுடியாது என்பது பொருளாகும்.

அ.பொ.

இருள்–மயக்கம். சந்தேகம். கதழ்ந்துரை–விரைவாகப் பேசுதல். பற்றிய–பொருந்திய. பண்–இசை (இராகம்). யாழ்–யாழிசை. எண்ணின்–நினைத்துப் பார்த்தல்.

பொருள் சுருக்கம்

பார்வையற்றவனின் மனைவி பெற்றிருக்கும் பேரழகும், கல்வி கற்பாதவனின் வெறும் பேச்சும் இசை, ஞானம் அறியாதன் கேட்கும் யாழிசையும் அம்மூவருக்கும் அருமை தெரியாதனவாகும்.

54. இம்மூன்றும் அறிவிலிகளின் செயல்கள்

தன்பயம் தூக்காரைச் சார்தலும் தாம்பயவா
நன்பயம் காய்வின்கண் கூறலும்–பின்பயவாக்
குற்றம் பிறர்மேல் உரைத்தலும் இம்மூன்றும்
தெற்றென இல்லார் தொழில்.

விளக்கவுரை

தனக்கு நன்மை தருவதை நினைத்து அதற்கு உதவாதவரை சேர்ந்திருப்பது ஒருவர் கோபம் கொண்டிருக்கும் நேரத்தில் அவர் முன்பு பயனில்லாத சொற்களை சொல்வது. ஒரு பயனும் தராத வீணான குற்றச் சாட்டுக்களை பிறர் மீது சுமத்துதல் ஆகிய மூன்றும் அறிவிலிகளின் செயல்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. தனக்கு எந்த நன்மையும் செய்ய முடியாதவரிடம் சேர்ந்து காலத்தை விரயமாக்குவது விவேகமான அல்ல. பொருள் விரயம், காலவிரயம் போன்றவை ஏற்படுமே ஒழிய எந்த நன்மையும் இச்செயலால் கிடைக்காது.

கோபம் கொண்ட ஒருவன் முன் அதை தணிக்கும் சொற்களையே கூறவேண்டும். பயனில்லாத சொற்களை கூறினால் கோபம் அதிகரித்து சம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட நேரும். எரியும் தீயை அணைக்க நீரை தான் கொட்டவேண்டும். எண்ணெய் வார்க்க கூடாது என்பது உட்கருத்து. ஒருவர்மீது இல்லாத பழிகளை சொன்னால் அவை திரும்பிய அஸ்திரமாகவே நம்மீதே பாயும். இதுவே இயற்கை நியதி இதையே விதி என்கிறோம். நெல் விதைத்தால் நெல்விளையும். முள்விதைத்தால் முள்தான் வளரும். ஆகவே, பொய்யான பழிச் சொற்களை சொல்லக்கூடாது என்பது கருத்து.

அ.பொ.

தம்பயன்–தனக்கு வரும் பலன். சார்தல்–சேருதல். காய்வு–சினம். தெற்றென–தெளிவாக. தொழில்–செயல்.

பொருள் சுருக்கம்

ஒரு பயனும் செய்ய முடியாதவனிடம் சேர்ந்து காலத்தை வீணாக்குதல், கோபம் கொண்டவன் முன்பு மேலும், அவனுக்கு கோபம் ஏற்படும்படி பொருந்தாத வார்த்தைகளை கூறுதல். பிறர்மீது பழிசுமத்துதல் ஆகிய மூன்றும் அறிவற்றவர்களின் செயல்களாகும்.

55. இம்மூவரும் உளவாளிகள்

அருமறை காவாத நட்பும் பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும் யாண்டானும்
செற்றம் கொண்டாடும் சிறுதொழும்பும் இம்மூவர்
ஒற்றாள் எனப்படு வார்.

விளக்கவுரை

ரகசியமாக காக்கச் சொன்ன விஷயத்தை காப்பாற்றாமல் வெளிப்படுத்திய நண்பன், கணவரின் பெருமைகளைப் பற்றி பேசாமல் குறைகளையே கூறும் பெண்ணும், எந்த இடத்திலும் முதலாளியை (தலைவனை) இகழ்ந்து பேசும் வேலைக்காரர்களும் ஒற்றர்கள் அதாவது, உளவாளிகளுக்கு நிகரானவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

உளவாளிகள்கூட இருந்தே குழிபறிப்பவர்கள் அத்தகைய உளவாளிகள் இந்த உலகில் இருப்பதை நல்லாதனார் படம் பிடித்துக் காட்டுகிறார். ரகசியம் என்று சொல்லியும் அதை காக்காமல் வெளிப்படுத்தும் நண்பன் உண்மையானவனாக இருக்க முடியாது. சிக்கல்களில் நம்மை சிக்கவைத்து விட்டு அவன் எந்த நேரத்திலும் விலகி ஓடுவான். ஆகவே, இத்தகையவரிடம் எச்சரிக்கை இருக்க வேண்டும்.

கணவனின் பெருமைகள் மிகுந்திருந்தும் அமைகூறாமல் சதா குற்றங்களை கூறும் மனைவி நல்ல குடும்பத்தை சேர்ந்தவளாக இருக்கமாட்டாள். அவளை கட்டுப்படுத்தி வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். முதலாளியிடம் சம்பளம் வாங்கி வாழ்க்கையை நடத்தும் வேலையாட்கள் அந்த முதலாளியை கேவலமாக பேசுவது தரமற்றது. அவர்கள எந்த நேரத்திலும் முதலாளியை காட்டி கொடுப்பார்கள். அந்த வேலையாட்கள் கண்காணிக்கவேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

அருமறை–அரிய இரகசியம். விட்டொழிந்த–விட்டுவிட்ட. யாண்டும்–எங்கும். செற்றம்–சினம். சிறு–சிறுமை. தொழும்பு–பணியாள். ஒற்று–உளவறிவோர்.

பொருள் சுருக்கம்

இரகசியத்தை காப்பாற்றாத நண்பன், கணவனை எப்போதும் குறை கூறும் மனைவி, தலைவனை இழிவு படுத்தி பேசும் வேலையாட்கள் ஆகிய இம்மூவரும் உளவாளிகளுக்கு நிகரானவர்கள் என்று அடையாளம் காணவேண்டும்.

56. இம்மூன்றும் தரும் நெறி தொடர உதவும்

முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு–வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தல் இம்மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு.

விளக்கவுரை

வாலிப பருவத்திற்கு முந்தியதான இளமை பருவத்தில் கல்வி கற்க வேண்டும். இறுதிவரை தாய், தந்தையை வணங்கி போற்றி வரவேண்டும். நல்லொழுக்க நெறி நிற்கவேண்டும். இம்மூன்று செயல்களும் தருமநெறி தொடர்ந்துவரச் செய்யும் வழிகளாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

இளமையில் கற்கும் கல்வி என்பது கல்லில் பொறித்த எழுத்துக்களைப்போல் உறுதியாக இருக்கும். இளமையில் சத்தானஉணவு உண்பவர்கள் முதுமை காலத்திலும் உறுதியாக இருப்பார்கள். அதுபோல் இளமையில் கற்கும் கல்விதான் முதுமைவரை எல்லா சவால்களையும் முறியடிக்கும் திறனை கொடுக்கும். தாய், தந்தையை மதித்து வணங்கி வந்தால் தெய்வம் அத்தகையவர்களை

சூழ்ந்து கொள்ளும். அப்படிப்பட்டவர்கள் செய்யும் குற்றங்களைகூட களைந்து பெற்றோரை மதித்த காரணத்திற்காக துணைநிற்கும் இதனை நீங்கள் அனுபவரீதியாக அறியலாம்.

நல்லொழுக்கம்தான் நம் திரையை நீக்குகிறது. நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள். இதை அறிய முடியாமல் திரையாக மறைப்பது தீய ஒழுக்கமும், தீய செயல்களும்தான் இந்த தீமைகளை அகற்றி நல்லொழுக்கத்தில் மனிதன் நிலைபெற்றால் திரை விலகும். நாமே தெய்வம் என்ற உண்மையை அறிவோம்.

அ.பொ.

முந்தை-வாலிப பருவத்திற்கு முந்தைய மாணவப் பருவம். எழுத்து-கல்வி. பிற்பாடு-பின்னர். பெருநெற்-உயர்வான நடைமுறை. விழுப்பம்-மேன்மை. நெறி-வழி. தூராவாறு-அடைபடாத வாறு.

பொருள் சுருக்கம்

இளமையில் கல்வி கற்கவேண்டும். பெற்றோரை வணங்கி போற்றவேண்டும். எப்போதும் ஒழுக்கநெறி நிற்கவேண்டும்.

57. இம்மூன்று துன்பம் தருபவை

கொட்டி அளந்தமையாப் பாடலும் தட்டித்துப்
பிச்சை புக்குண்பான் பிளிற்றலும்-துச்சிருந்தான்
ஆளும் கலம் காமுறுதலும் இம்மூன்றும்
கேள்வியுள் இன்னா தன.

விளக்கவுரை

தட்டும் தாள இசைக்கு தகுந்தவாறு அமையாத பாடல், கைதட்டி பிச்சை எடுத்து உண்பவனின் உளறல்

வார்த்தைகள் ஒட்டுக்குடி இருப்பவன், தான் உள்ள வீட்டுக்கு உரியவரின் பொருள்களை அடைய விரும்பு வது ஆகிய மூன்றும் துன்பத்தை தரக்கூடியவை என்று திரிகடுகம் கூறுகிறது. இசைக்கு ஏற்ப பாடல் வேண்டும். அல்லது பாடலுக்கு ஏற்றபடி இசை வேண்டும்.

இதில் எது மாறுபட்டாலும் பாடல் சரியாக அமை யாமல் துன்பத்தை கொண்டு வரும். பிச்சைக்காரன் பேசும் உளறல் வார்த்தைகளால் அவன் அவமதிக்கப் படுவான். அதனால் அடியும் வாங்கும் சூழல் வரும் என்பதாகும். வீட்டுக்கு சொந்தக்காரன் வீட்டில் குடிஇருந்து கொண்டு அவருக்கு சொந்தமான பொருள் களை விரும்புவது ஆபத்தை விளைவிக்கும். அவனின் அற்ப செயல் விரையில் வெளிப்பட்டு வெளியேற்றப்படு வான். அல்லது சிறை துன்பத்திற்கு ஆளாவான் என்பது பொருளாகும்.

அ.பொ.

கொட்டி–தாளம். தட்டி–கைதட்டி. துப்பு–உணவு. பிச்சைபுக்கு – பிச்சை எடுத்து. பிளிற்றல்–பிதற்றுவது. துச்சு–இருப்பிடம்.

பொருள் சுருக்கம்

இசைக்கு தகுந்தவாறு அமையாத பாடல். பிச்சைக் காரனின் உளறல் சொற்கள், வீட்டுக்கு உரியவரின் பொருட்களை அடைய விரும்பும் குடித்தனக்காரன் இம்மூன்றும் துன்பத்தை விளைவிக்கும்.

58. இம்மூன்று இளவரசன் கடமைதான்

பழமையை நோக்கி அளித்தல் கிழமையால்
கேளிர்உவப்பத் தழுவுதல்-கேளிராய்த்
துன்னிய சொல்லால் இனம்திரட்டல் இம்மூன்றும்
மன்னர்க்கு இளையான் தொழில்.

விளக்கவுரை

நெடுங்காலம் நண்பராக இருப்பவர்க்கு உதவி செய்தல், உறவினர்களை பாசத்தோடு நேசித்தல், உறவினர்களாய் சூழ்ந்தவர்களை மனம் மகிழப் பேசி அக்கூட்டத்தைப் பெருக செய்தல், ஆகிய மூன்றும் இளவரசனின் கடமை என்று திரிகடுகம் கூறுகிறது.

நீண்டகாலம் நண்பராக இருப்பவர் நேர்மையான வராகவே இருப்பார். ஆகவே, அவருக்கு தேவையான உதவிகளை இளவரசன் செய்ய வேண்டும். உறவினர் களை உள்ளன்போடு நேசிப்பது சீரியபண்பாகும். அந்த பண்புடையவனாய் இளவரசன் இருக்கவேண்டும். சுற்றத்தினரை மகிழவைத்து அந்த கூட்டம் பெருகும்படி செய்வது வலிமையை சேர்க்கும். ஆகவே, இம்மூன்றும் இளவரசனின் கடமைகள் என்று கூறப்பட்டது.

அ.பொ.

பழமை-பலநாள் பழக்கம். கிழமை-உரிமை. கேளிர்-உறவினர். உவப்ப-மகிழ, தழுவுதல்-அரவணைத்தல், துன்னிய-நெருக்கமாக. இளம்-உறவினர் கூட்டம். பெருக்கல்-பெருகச் செய்தல்.

பொருள் சுருக்கம்

நெடுங்காலமாக நண்பராக இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்யவேண்டும். உறவினர் களை பாசத்தோடு நேசிக்க வேண்டும். உறவினர்கள் கூட்டத்தை மகிழ்வித்து பெருகச் செய்ய வேண்டும். இம்மூன்றும் மன்னர்க்கு இளையான் ஆகிய இளவரச னின் கடமைகளாகும்.

59. இம்மூன்றும் நிலையற்றவை

கிளைஞருக்கு உதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்-இளையானாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

விளக்கவுரை

தனது உறவினர்களுக்கு ஆபத்து காலத்தில் கொடுத்து உதவாத செல்வம், பயிர் முற்றி அறுடைக்கு தயாராக இருக்கும் காலத்தில், கள்வர்கள், ஆடு, மாடு களால் பயிருக்கு ஆபத்து வரும். அதை அறிந்து பாது காக்காத உழவுத் தொழில், இளம் வயதிலேயே மது அருந்தி பழகி விட்டவனின் குலப் பெருமை ஆகிய மூன்றும் இருப்பது போல் தோன்றி அழிந்து விடும் என்று திரிகடுகம் கூறுகிறது.

உறவினர்களுக்கு உதவாத செல்வம் தீயவினை களை தோற்றுவிக்கும். பாவவினை சேரும். அதனால் செல்வம் அழியும். அறுவடைக்கு தயாராக இருக்கும் கதிர்களை பாதுகாக்காமல் செய்யும் உழவுத் தொழில் நஷ்டம் ஏற்பட்டு திரும்பவும் உழவுத் தொழிலை தொடராத நிலைக்கு தள்ளப்பட்டு அழியும் இளமை யிலே மது அருந்தி பழகியவன் உழைக்க மாட்டான். இருக்கும் சொத்தை இழப்பான். அனைவராலும் ஏசப் படுவான். அதனால், அவன் குடிப் பெருமையும் அழியும் என்பதாம்.

அ.பொ.

கிளைஞர்-உறவினர். பைங்கூழ்-பசிய பயிர். விளைவின்கண்-அறுவடைக்கு தயாராகும் சூழலில். போற்றுதல்-ஆபத்து நேராமல் பாதுகாப்பது. குடிமை-குடிப்புகழ்.

பொருள் சுருக்கம்

உறவினர்க்கு ஆபத்து காலத்தில் உதவாத செல்வம், அறுவடை காலத்தில் பாதுகாக்கப்படாத உழவுத் தொழில், இளமையிலேயே குடிப்பழக்கத்திற்கு ஆளான வனின் குலப் பெருமை ஆகிய மூன்றும் நிலையின்றி அழிந்து போகும்.

60. இம்மூன்றும் பிறவித் துன்பம் தரும்.

பேய்ப்பிறப்பில் பெரும் பசியும் பாஅய்
விலக்கின் பிறப்பின் வெருவும்-புலந்தெரியா
மக்கள் பிறப்பின் நிரப்பிடும்பை இம்மூன்றும்
துக்கப் பிறப்பாய் விடும்.

விளக்கவுரை

மனிதராய் பிறந்தும் அளவின்றி உண்பதில் பேயைப் போல திரிகின்றவர்களின் அடங்கா பசி, விலங்குகளின் அச்ச உணர்வு, அறிவுத் திறம் பெறாத மனிதர்களின் வறுமை ஆகிய மூன்றும் பிறவித் துன்பங்களை கொண்டு வரும் என்று திரிகடுகம் கூறுகிறது. பெருந்தீனி உண்பவன் அறிவு மழுங்கியவனாகவே இருப்பான். ஏனெனில் உணவை ஜீரணம் செய்வதற்கே உடலுறுப்புகள் செயல் பட்டால் அறிவு எப்படி வளரும்? ஆகவே பெருந்தீனி தின்பவன் துன்பம் அடைவான். எந்த நேரத்திலும் நாம் வேட்டையாடப்படுவோம் என்ற சூழலில் இருப்பவை விலங்குகள்... பறவைகள் முதலானவை இந்த அச்ச உணர்வு பிறவித் துன்பத்தைக் கொண்டு வரும் அறிவுத் திறம் பெற்றிராத மனிதர்களால் செல்வத்தை ஈட்ட முடியாது. அறிவுத் திறம்மிக்கவர்கள் சறுக்கி விழுந்தா லும் அறிவுத் திறனின் வலிமையால் எழுந்து விடு வார்கள். வறுமையை விரட்டுவார்கள். ஆனால் அறிவற் றவர்களால் அப்படி செய்ய இயலாது என்பது பொரு ளாகும்.

அ.பொ.

எய்தாமல்–வரவிடாமல். முற்காத்தல்–முன்கூட்டியே காத்தல். வைகலும்–அன்றாடம். மாறு–பகை. ஏற்கும்–கொண்ட. சீரேற்ற–சீர்ஏற்ற புகழ் உடைய. பேரமைச்சர்–பெருமைக்குரிய மந்திரி.

பொருள் சுருக்கம்

பெருந்தீனி தின்பவன்; அச்ச உணர்வு கொண்ட விலங்குகள் அறிவாற்றல் பெறாத மனிதர்கள் ஆகிய இம்மூவர் பிறவித் துன்பத்திற்கு ஆளாவார்கள்.

61. இம்மூன்றும் மந்திரியின் கடமை

ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்
எய்துவது எய்தாமை முற்காத்தல்-வைகலும்
மாறேற்கும் மன்னர் நிலைஅறிதல் இம்மூன்றும்
சீரேற்ற பேரமைச்சர் கோள்.

விளக்கவுரை

ஐம்பொறிகள், புலன் இச்சைகளை கட்டுப்படுத்தி வாழ்தல் வரவுள்ள தீமையை முன்கூட்டியே அறிந்து தடுத்து நிறுத்தல், நாளுக்கு நாள் மாறுபடும் பகை அரசர்களின் நிலையை உடனுக்குடன் அறிந்து வைத்திருத்தல் ஆகிய மூன்றும் அமைசனின் லட்சியமாக இருக்க வேண்டும் என்று திரிகடுகம் கூறுகிறது. புலன் இச்சைகளில் மூழ்கி கிடக்கும் மந்திரியால் நுட்பமானவற்றை சிந்திக்க முடியாது. உடனுக்குடன் முடிவு எடுக்க முடியாது. அதனால் அரசு கல, கலக்கும் தீமை தொடரும். தனக்கு எதிரிகளால் வரக்கூடிய ஆபத்தை ஒற்றர்கள் மூலமாகவும் வேறுவழிகளிலும் கண்டறிந்து அமைச்சன் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மன்னனையும், நாட்டையும் காக்க முடியும். பகை அரசர்கள் திட்டங்களை மாற்றிக் கொண்டே இருப்பார்கள். அதனை உடனுக்குடன் அறிந்து பதிலடி கொடுக்கும் வகையில் திட்டங்களை தீட்ட வேண்டியதும் அமைச்சனின் கடமையாகும்.

அ.பொ.

ஐ-ஐந்து, அறிவு-புலனிச்சை. தம்மை அடைய-தமக்கு அடங்க. ஒழுகுதல்-நடத்தல். எய்தாமல் வரவிடாமல்.

பொருள் சுருக்கம்

புலடைக்கத்துடன் எச்சரிக்கையாக வாழ்தல்; தீமை வருமுன்னே தற்காத்துக் கொள்ளும் திறம் பகை அரசர்களின் வலிமையை அறிந்து அதனை அழிக்கும் ஆற்றல் ஆகிய மூன்றும் மந்திரியின் லட்சியங்களாக இருக்க வேண்டும்.

62. இம்மூவர்க்கு புகழ் கிட்டாது.

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும் சான்றோர்முன்
மன்றில் கொடும்பாடு உரைப்பானும்-நன்றின்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இகழ்ந்துவாழ் வார்.

விளக்கவுரை

ஒருவன் தனக்கு செய்த உதவியை பாராட்டி நன்றி சொல்லாதவன் சான்றோர்கள் கூறியுள்ள சபையில் பொய் கூறுபவன். அடைக்கலம் என்று நம்பி ஒருவர் தன்னிடம் ஒப்படைத்த பொருளை அபகரிக்க நினைப்பவன் ஆகிய இம்மூவர் புகழ் பெறமாட்டார்கள் இகழ்ச்சியை அடைவார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. எந்த குற்றத்திற்கும் பிராயச்சித்தம் உண்டு செய்த நன்றி மறந்தவனுக்கு பிராயச்சித்தம் கிடையாது. அவன் புகழ் அடைய முடியாது. இகழ்ச்சியையே அடைவான். சான்றோர்கள் கூடியுள்ள சபையில் பொய் கூறுபவன் அவமானம் அடைவான். கூரிய அறிவுப் பெற்ற சான்றோர்களை பொய் கூறி ஏமாற்ற முடியாது. ஆகவே, அவன் இகழ்ச்சியை அடைவான் நம்பி ஒப்படைத்த பொருளை அபகரிக்க நினைப்பவன் திருடனை விட மோசமானவன். அவனை தீவினை பற்றும் கணக்கற்ற துன்பங்களை அனுபவிப்பான் என்பது பொருளாகும்.

அ.பொ.

தூக்கா-எண்ணாத. நாணிலி-வெட்கம் இல்லாதவன். மன்று-பொதுச்சபை. கொடும்பாடு-மாறுபாடு. உரைத்தல்-கூறுதல். அடைக்கலம்-காப்பு.

பொருள் சுருக்கம்

நன்றி மறப்பவன். பொய் பேசுபவன். அடுத்தவர் பொருளை அபகரிக்க நினைப்பவன் ஆகிய மூவரும் புகழை இழந்தவர் ஆவார்.

63. இம்மூன்றும் நன்மை தருவதில்லை

**நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை இல்லத்து இருத்தலும்-சீர்பயவாத்
தன்மை இலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல்.**

விளக்கவுரை

வரப்போகும் துன்பத்தைக் கண்டு பயப்படாதவர்களின் நட்பு, விருந்தினர்களை உபசரிக்காமல் வந்து விட்டார்களே என்று நினைக்கும் மனைவி, சிறந்த பண்பு இல்லாதவர்கள் அருகில் குடியிருப்பது ஆகிய இம்மூன்றும் நன்மையைத் தராது என்று திரிகடுகம் கூறுகிறது. எதையும் வருமுன் காக்க வேண்டும். வரப் போகும் ஆபத்தை அறியாமல் அசட்டு துணிச்சல் கொண்டவர்களின் நட்பு நமக்கு துனபத்தையே கொண்டு வரும். விருந்தினர்களை உபசரிக்காமல் இருப்பது தீவினையை சேர்க்கும். வறுமையை வரவழைக்கும். பாவமூட்டை உயரும். அதனால் அறிவு கெட்டு தீய செயல்லகளில் சிக்கி அழிய நேரும். ஆகவே மனைவி என்பவன் இன்முகத்துடன் விருந்தினரை உபசரிக்க வேண்டும். பண்பில்லாதவர் நம் குடியிருப்புக்கு பக்கத்தில் இருந்தால் பல தீமைகள் வரும். அவர்கள் செய்யும் குற்றங்களுக்காக நாமும் பதில் சொல்ல நேரும் பண்பில்லாத இடத்தில் செல்வம் வற்றும். வறமை சூழும் என்பது பொருளாகும்.

அ.பொ.

நோ-துன்பம். அஞ்சும்-பயப்படும். ஈர்வளையை-எழில் கொண்ட வளையல்கள் அணிந்த. பெண்-மனைவி. சீர்-சிறப்பு மிகு. பயவா-கொண்டிராத. அயலிருப்பு-அருகில் குடி இருப்போர்.

பொருள் சுருக்கம்

துன்பம் வருவது கண்டு பயப்படாத நட்பு விருந்துவரக் கண்டு அஞ்சும் மனைவி. பண்பில்லாதவர் அருகில் குடியிருப்பாக இருத்தல் ஆகிய மூன்றும் நன்மை தராது.

64. இம்மூன்றும் கற்புடைய பெண்களின் கடமைகள்

நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறம் செய்தலின் ஈன்றதாய்-தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்.

விளக்கவுரை

விருந்தினர்களை அன்புடன் உபசரித்து கணவனுக்கு பெருமை சேர்த்தல், இல்லற நியதி தவறாமல் குடும்ப வாழ்க்கையை நடத்திச் செல்லல்; நல்ல குணமுள்ள சந்ததிகளை பெற்றெடுத்தல் ஆகிய மூன்றும் கற்புடைய பெண்களின் கடமைகள் என்று திரிகடுகம் கூறுகிறது. விருந்தினரை அன்புடன் உபசரித்தால் செல்வ வளம் பெருகும். தேவர்கள் மகிழ்வார்கள். குடும்ப பெருமை பல மடங்கு உயரும். ஆகவே, பெண்கள் விருந்தினரை அன்புடன் போற்றி உபசரிக்க வேண்டும். இல்லற நியதி என்பது மாமனார்; மாமியார் மற்றும் குடும்ப உறுப்பினர்களை அன்புடன் உபசரித்து பணிவுடை செய்தல், வரவுக்கு தகுந்தபடி செலவு செய்து குடும்பத்தை கடனில்லாமல் கொண்டு செல்வது ஆகியவற்றை குறிக்கும். அடுத்து நல்ல குணமுடைய மக்களை பெறவேண்டும். தாயைப் போல பிள்ளை. நூலைப் போல சேலை என்று சொல்வார்கள். தாய் சிறந்த பண்புடையவனாக இருந்தால் நல்ல குணமுள்ள மக்களே பிறப்பார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஓம்புதல்-உபசரித்தல். நட்டாள்ஆம்-கணவனுக்கு துணை வாக. வைகலும்-நாள்தோறும். இல்-இல்லறம். புறஞ்செய்தல்-பாதுகாத்தல். ஈன்றதாய்-பெற்ற தாய்.

பொருள் சுருக்கம்

விருந்தினரை உபசரித்தல், இல்லற தருமப்படி குடும்பத்தை நடத்துதல், நன்மக்களைப் பெறுதல் ஆகிய மூன்றும் கற்புடைய பெண்களின் கடமைகள் ஆகும்.

65. இம்மூன்றும் தனக்குத் தானே தேடிக்கொண்ட தீமை

அச்சம் அலைகடலின் தோன்றலும் ஆர்வுற்ற
விட்டகல் கில்லாத வேட்கையும்-கட்டிய
மெய்நிலை காணா வெகுளியும் இம்மூன்றும்
தம்நெய்யில் தாம்பொரியு மாறு.

விளக்கவுரை

அலைவீசி ஆர்ப்பரிக்கும் கடல் போல் மனத்தில் கவலை, பயம் உண்டாவது, விரும்பி அடைந்ததை விட்டு பிரிய மனம் வராத ஆசை, பெரியோர் புனைந்த பாடலில் அறிவிலிகள் குற்றம் கண்டு கோபப்படுதல் ஆகிய மூன்றும் தனக்கு தானே வரவழைத்துக் கொள்ளும் தீமைகள் என்று திரிகடுகம் கூறுகிறது. அச்சம் தான் மனிதனின் முதல் எதிரி. அச்சம் தான் மரணம். அச்சம் தான் எல்லா பலவீனத்திற்கும் காரணம். ஆகவே, அச்சத்தை விரட்டியடிக்க வேண்டும். பேராசைதான் துன்பத்திற்கு வேர். இந்த வேரை முழுவதுமாக களைய வேண்டும். மனக்கட்டுப்பாட்டின் மூலம் எல்லா ஆசைகளையும் அழித்து விடலாம். பெரியோர்கள் புனைந்த பாடல்கள் மனித குலத்திற்கு நன்மை விளைவிப்பவை. அறிவிலிகள் இதை அறிய மாட்டார்கள். குற்றம் கூறி இகழ்ச்சியை அடைவார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

அச்சம்–பயம். ஆர்வு–விருப்பம். உற்ற–அடைந்த. விட்டகல்–விடுபடல். வேட்கை– விருப்பம். கட்டிய புனைந்த.

பொருள் சுருக்கம்

நீங்காத பயம், நீங்காத ஆசை. அறியாமையால் வரும் சினம் ஆகிய இம்மூன்றும் ஒருவன் தனக்குத் தானே வரவழைத்துக் கொள்ளும் துன்பம் என்னும் தீ நெருப்பாகும்.

66. இம்மூன்றும் பெருமை தராது

கொழுநனை இல்லாள் கறையும் வழிநிற்கும்
சிற்றாள் இல்லாதான் கைம்மோதிரமும்-பற்றிய
கோல்கோடி வாழும் அரசனும் இம்மூன்றும்
சால்போடு பட்ட தில்.

விளக்கவுரை

கணவன் இல்லாத பெண் வீட்டு விலங்கு ஆவதும். வேலையாள் இல்லாத முதலாளியின் கைவிரல் மோதிரமும், நீதி நெறி தவறி நாடாளும் அரசனும், ஆகிய இவை பெருமையைப் பெறாது என்று திரிகடுகம் கூறுகிறது. பெண் விட்டு விலங்கு ஆவது கணவன் இருக்கும் போது தான் பெருமை தரும். கணவனை இழந்தவன் அந்தப் பெருமையை இழந்து விட்டவன். முதலாளி என்றால் வேலைக்காரன் வேண்டும். அப்படி வேலையாள் இல்லாதவன் அணியும் மோதிரத்திற்கு மதிப்பு இல்லை என்பதாகும். அரசன் என்பவன் குடிமக்களை பாதுகாக்க வேண்டும். வரிகளை குறைக்க வேண்டும். வசதிகளை பெருக்க வேண்டும். நடுநிலையுடன் தீர்ப்பு செய்ய வேண்டும். இதனை செய்யாமல் கொடுங்கோலனாக ஆளும் அரசன் பெருமை பெற முடியாது. மக்களால் இகழப்பட்டு அரசை இழப்பான் என்பது பொருளாகும்.

அ.பொ.

கொழுநன்-கணவன். கறை-மாதவிடாய். சிற்றாள்-சிறு வேலை புரியும் வேலைக்காரன். பற்றிய-கைக்கொண்டுள்ள. கோல்-செங்கோல்.

பொருள் சுருக்கம்

கணவன் இல்லாத பெண் வீட்டு விலக்கு ஆவது, வேலையாள் இல்லாத முதலாளி, அதர்ம வழியில் அரசு செய்யும் அரசன், ஆகிய இம்மூன்றும் பெருமையை தராது.

67. இம்மூன்றும் வினைப்பயன்கள்

எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பில் தொழும்பும்
செயிர்நிற்கும் சுற்றமும் ஆகி-மயிர்நரைப்ப
முந்தைப் பழவினையாய்த் தின்னும் இம்மூன்றும்
நொந்தார் செயக்கிடந்த தில்.

விளக்கவுரை

கணவனோடு எதிர்வாதம் செய்யும் மனைவி, நல்ல பண்பும், குணமும் இல்லாத வேலைக்காரன் பகைமை பாராட்டும் உறவு மற்றும், நரை, திரை, நோய் தோன்றி உயிரை வருத்துதலும் ஆகிய மூன்றும் முற்பிறவியில் செய்த தீவினையால் விளைந்தவை என்று திரிகடுகம் கூறுகிறது. முற்பிறவியால் விளைந்தவை என்று நாம் விடக்கூடாது. முடிந்தவரை மனைவியை நல்வழியில் திருப்ப முயலவேண்டும். பண்பில்லாத போலக்காரனை நீங்க முடியும். நரை, திரை, நோய் என்பவை சான்றோர் களையும் வருத்துகிறது. ஆகவே, நோயை தீர்க்க முயல வேண்டும். இந்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என்றால் முற்பிறவியில் தீவினை என்று முடிவு செய்ய லாம்.

அ.பொ.

எதிர்நின்று–எதிர்வாதம் செய்து. இயல்பு–நற்குணம். தொழும்பு–வேலையாள். செயிர்–பகை. சுற்றம்–உறவு. தின்னும்–வாழ்நாளை கழிக்கும்.

பொருள் சுருக்கம்

கணவனோடு எதிர்வாதம் செய்பவள், குணமில் லாத வேலையாள், பகைமை பாராட்டும் உறவுகள் ஆகியவை முற்பிறவியில் செய்த தீவினைகளால் வந்தவை.

68. இம்மூன்றும் சான்றோர் குணங்கள்

இல்லார்க்கு ஒன்றுஈயும் உடைமையும் இவ்வுலகில்
நில்லாமை உள்ளும் நெறிப்பாடும்-எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க்கு உள.

விளக்கவுரை

இல்லை என்று வருவோர்க்கு கொடுத்து உதவும் செல்வவளம், நிலையாமையை உணர்ந்த ஞானம். எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாத கருணை ஆகிய மூன்றும் சான்றோர்களின் குணங்களாகும். இல்லையென்று வருவோர்க்கு உதவி செய்தல் நம் புண்ணிய கணக்கை உயர்த்துகிறது. வறுமை அடைந்தவன் வடிவில் இறைவனே நிற்கிறான் என்பதை அறிய வேண்டும். நம் தீவினைகளை அழிக்க புண்ணியம் தேவை அதற்கு வாய்ப்பு தரவே வறுமையுடையவனாகவும், நோயாளியாகவும் இமைறவன் வருகிறான் என்பதை சான்றோர்கள் அறிவார்கள். அதனால்தான் பிறருக்கு உதவும் நற்குணத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த உலக வாழ்க்கை என்பது நீர்க்குமிழி போல் நிலையற்றது. ஆகவே, உயிர் வாழும் போதே அறச் செயல்களை சான்றோர்கள் செய்வார்கள். எல்லா உயிர்களிலும் இறைவன் ஆத்ம ஒளியாக இருக்கிறான். மற்ற உயிர்களுக்கு செய்யும் தீமை. அதனால்தான் திருப்பி நம்மை தாக்குகிறது. இதை சான்றோர் அறிவர். ஆகவே, எல்லா உயிர்களிடமும் அவர்கள் கருணை காட்டுகிறார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

உடைமை–செல்வம். நெறிப்பாடு–நடை முறை அறிவு. துன்புறுவ–துன்பம் தரும்.

பொருள் சுருக்கம்

இல்லாதவருக்கு உதவுவது. நிலையாமை அறியும் மெய்ஞானம், எவ்வுயிருக்கும் தீமை செய்யாத கருணை ஆகிய மூன்றும் சான்றோர்களுக்குரிய நற்குணங்களாகும்.

69. இம்மூன்றும் பெறுவதற்கு அரியன

அருந்தொழில் ஆற்றும் பகடும் திருந்திய
மெய்நிறைந்து நீடிருந்த கன்னியும்–நொந்து
நெறிமாறி வந்த விருந்தும் இம்மூன்றும்
பெறுமாறரிய பொருள்.

விளக்கவுரை

உழுதல், வண்டி இழுத்தல், சுமைதாங்குதல் என வேலை செய்யும் காளை, அழகு நிறைந்த கன்னிப் பெண், வழி தவறி சென்று, மனம் நொந்து வரும் விருந்தினர் ஆகிய மூவரும் பெறுவதற்கு அரியன என்று திரிகடுகம் கூறுகிறது. உழவுத் தொழிலுக்கு நன்கு பணி புரியும் காளை மாடு கிடைப்பது அரிது. சில காளைகள் வாட்டசாட்டமாக இருக்கும். ஆனால், வேலை என்றால் படுத்துக் கொள்ளும். ஆகவே, பணி செய்யும் காளை கிடைப்பது அரிது எனப்பட்டது. அழகு நிறைந்த கன்னிப் பெண் மணமகளாக கிடைப்பது அபூர்வம். வெகுகாலம் மணமாகாமல் இருந்தால் சில பெண்கள் வழி தவறி செல்லக்கூடும். ஆனால், திருமணம் கால தாமதம். ஆனாலும், கன்னித் தன்மையை இழக்காத பெண் கிடைப்பது அரிது எனப்பட்டது. வழி தவறி மனம் நொந்து வரும் விருந்தினர் சொற்பம் என்பது கருத்து.

அ.பொ.

அருள் தொழில்–கஷ்டமான வேலைகள். ஆற்றும்–செய். பகடு–எருது. திருந்திய–அழகிய. மெய்–உடல் வனப்பு.

பொருள் சுருக்கம்

தொழிலுக்கு துணை செய்யும் காளை அழகிய இளம் கன்னி, வழிமாறி வருந்தி வந்த விருந்தினர் ஆகியவை பெறுதற்கு அரியன.

70. இம்மூவரே செல்வர்கள்

காவோடு அறக்குளம் தொட்டானம் நாவினால்
வேதம் கரைகண்ட பார்ப்பானம்–தீதிகந்த
ஒல்வது பாத்துண்ணும் ஒருவனம் இம்மூவர்
செல்வர் எனப்படுவார்.

விளக்கவுரை

சோலைகள், நீர்குளங்கள் அமைப்பவன். நாவினால் ஓதப்படும். வேதப் பொருளின் ஆழ, அகலம் கண்ட

பார்ப்பனன், தீமைகளை விலக்கி பகுத்துண்டு வாழ்பவன், ஆகிய மூவரும் தான் செய்வார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. பிறர் நலனுக்காக கோலைகள், குணங்கள் அமைப்பவன் இறைவனுக்கே தொண்டு செய்தவன் ஆகிறான். பிறர் நலனை மனதால் நினைப்பது கூட சிங்கத்தின் வலிமையை நமக்குத் தரும் என்பதாம். வேதப் பொருள் என்ன சொல்கிறது? நாம் அழியும் உடல் அல்ல. அழியாத ஆத்மா என்று கூறுகிறது. இந்த உண்மையை அறிந்தவனே பார்ப்பனன். பார்ப்பனன் என்றால் சுத்தமானவன். ஒழுக்கமானவன் என்பது பொருள். பகுத்துண்டு வாழ்வது தனிப் பண்பு. அவன் மனித குல மாணிக்கம். ஆகவே, அவன் செல்வந்தன் என்பதாகும்.

அ.பொ.

கா-சோலை. தொட்டவன்-தோண்டியவன். முறைகாணுதல் - முற்றாக கற்றல், தீதிகந்த-தீமையை விலக்கிட. ஒல்வது-இயன்றது. பாத்துண்ணும்-பகுத்துண்ணும்.

பொருள் சுருக்கம்

குளம் வெட்டியவன், வேதப் பொருளை அறிந்தவன். பகுத்துண்டு வாழ்பவன் ஆகிய மூவரும் தான் உண்மை யான செல்வங்கள்.

71. இம்மூன்றும் காணத் தகாதவை

உடுத்தாடை இல்லாதார் நீராட்டும் பெண்டிர்
தொடுத்து ஆண்டு அவைப்போர் புகலும்-கொடுத்தளிக்கும்
ஆண்மை உடையவர் நல்குரவும் இம்மூன்றும்
காண் அரியஎன் கண்.

விளக்கவுரை

இடையில் உடுத்தும் ஆடை இல்லாமல் நீராடுதல். பெண்கள் வழக்காடு மன்றம் சென்று சண்டையிடுதல். பிறருக்கும் கொடுத்துதவும் கொடையாளி வறுமையின் பிடியில் சிக்கியிருப்பது. ஆகிய மூன்றும் காணத் தகாதவை என்று திரிகடுகம் கூறுகிறது.

இடையில் உடுத்து ஆடையில்லாமல் நீராடுதல் என்று நாகரிகமற்றது. அருவருப்பானது. அறிவிலிகள் தான் இப்படி இருப்பார்கள். ஆகவே, ஆடையின்றி, நீராடுவதை விடவேண்டும். பெண்கள் கணவனுக்கு கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்த வேண்டுமே யொழிய வழக்காடு மன்றம் சென்று வாதாடக்கூடாது. அது பெண்மைக்கு இழுக்கு குடும்ப பெண்கள் வீட்டு உறுப் பினர்களை பொதுச் சபையில் நிறுத்த மாட்டார்கள்.

பண்பில்லாத, வெட்கமில்லாத, அடாவடித்தன முள்ள பெண்கள்தான் வழக்காடு மன்றம் செய்வார்கள். குடும்ப பெண்கள் இதைச் செய்யக்கூடாது. பிறருக்கு கொடுத்துதவும் கொடையாளி வறுமையின், பிடியில் சிக்கக் கூடாது. தருமமே வறுமையின் பிடியில் சிக்கியது போன்றது இது. ஆகவே, இக்காட்சியை என கண்கள் காணாதிருக்கட்டும் என்று நல்லாதனார் கூறுகிறார்.

அ.பொ.

நீராட்டு-நீராடுதல். அவை-சபை. போர் புகழும்-வாதாடும். நல்குரவு-வறுமை.

பொருள் சுருக்கம்

ஆடையில்லாமல் நீராடல், பெண்கள் பொதுச் சபை ஏறதல், கொடையாளி, வறுமை அடைதல் ஆகிய இம்மூன்றும் காணத் தகாதவை.

72. இம்மூன்றும் தேடிக் கொள்ள வேண்டியவை

நிறைநெஞ்சு உடையானை நல்குரவு அஞ்சும்
அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்
மறவனை எவ்வுயிரும் அஞ்சும் இம்மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள்.

விளக்கவுரை

மனதை சென்றவழி செல்ல விடாமல் அடக்கி பக்குவப் பட்டிருப்பவனை வறுமை நெருங்க அஞ்சும். அறச் செயல்களைச் செய்பவனை தீமை நெருங்க

பயப்படும். கொலைத் தொழில் செய்பவனைக் கண்டால் உயிர்கள் அனைத்தும் அஞ்சும். இவை மூன்றும் தேடிக் கொள்ள வேண்டியவை என்று திரிகடுகம் கூறுகிறது.

கொலைத் தொழில் செய்பவனை கண்டு மற்ற உயிர்கள் பயப்படும் என்று கூறியது நாமும் கொலை காரர்களாக மாறவேண்டும் என்பது அல்ல. அதர்மக் காரர்கள் பயப்படும் அளவுக்கு நம்மை தயார் செய்து கொள்ளவேண்டும் என்பதாகும். மனத்தை அலைய விடாமல் பக்குவப்படுத்தியவன் எதைக் கண்டும் கலங்காமல் பொருள் ஈட்டும் முயற்சியில் இருப்பான். ஆகவே, வறுமை அவனை நெருங்கமுடியாது. மக்கள் பணிகள் எந்த அறச் செயல்களை ஒருவன் தொடர்ந்து செய்தால் தீமை அவனை நெருங்காது. தீய சக்திகள் பாய்வதற்கு தயராக இருக்கும். நல்ல சக்திகள் என்றும் தேவதைகள் அத்தீய சக்திகளை விரட்டியடித்துவிடும்.

அ.பொ.

நிறை–நிறைவான. நெஞ்சு–மனம். நல்குரவு–வறுமை. அஞ்சும்–பயப்படும். அறம்–நற்செயல். அல்பொருள்–தீமை.

பொருள் சுருக்கம்

மனதை கட்டுப்படுத்துதல், அறச் செயல்கள் செய்தல், அதர்மம் அஞ்சும்படி தன்னை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகிய மூன்றும் ஒரு மனிதன் தேடிக் கொள்ள வேண்டியவை.

73. இம்மூவர் துணிவுடையவர்

இரந்து கொண்டு ஒண்பொருள் செய்வல் என்பானும்
பரந்து ஒழுகும் பெண்பாலைப் பாசம் என்பானும்
விரிகடல் ஊடு செல்வானும் இம்மூவர்
அரிய துணிந்து வாழ்வார்.

விளக்கவுரை

ஒருவரிடம் சென்று தன் வறுமையை, ஏழ்மையை சொல்லி அவன் தரும் பொருளைக் கொண்டு உயிர் வாழும் நிலையிலும் மிகச் சிறந்த செல்வத்தைப்

பெறுவேன். ஒன்றைச் செய்யப் போகிறேன் என்று சொல்பவன். பலரிடம் சென்று பொருளை உடலை விற்கும் விலை மகளிர் காட்டும பொய்யான அன்பை நிஜமான பாசம் என்று நினைப்பவன் விரிந்து பரந்த கடலுக்குள் எச்சரிக்கை உணர்வின்றி செல்பவன் ஆகிய மூவரும் கடினமான காரியங்களை துணிந்து செய்யக் கூடியவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

பிச்சை யேற்கும் நிலையில் இருப்பவன் செல்வன் ஆவேன் என்று சொல்வது அவன் மனஉறுதியை காட்டுவதாகும். அத்தகைய நம்பிக்கை என்பது பெரும் பாலமே. அத்தகையவர் துணிவுமிக்கவர் என்பதாகும். விலைமகளிர் பணத்திற்காக உடலை விற்பவர்கள். அவர்களிடம் உண்மையான பாசம் இருக்காது. இருப் பினும் அது உண்மையான பாசம் என்று நினைத்து விளைவுகளை எதிர்கொள்பவன் துணிவுடையவன் என்பது கருத்து. கடலில் செல்லும்போது சூறாவளிப் புயல் வீசலாம். கடல்வாழ் உயிரினங்களால் ஆபத்து நேரலாம். அவற்றைப் பொருட்படுத்தாது கடலுக்குள் செல்பவன் துணிவுடையவன் என்பதாகும்.

அ.பொ.

இரந்து-பிச்சையேற்று. ஒண்பொருள்-உயர்ந்த செல்வம். பரந்து-பலரிடம் சென்று. பாசம்-அன்பு. ஊடு-நடுவே. அரிய-அரிதான.

பொருள் சுருக்கம்

பிச்சை யேற்கும் நிலையிலும் செல்வம் பெருக்குவேன் என்று சொல்பவன். வேசியின் அன்பை உண்மை என்று நம்புபவன். கடலுக்கு முன்எச்சரிக்கை பாதுகாப்பு இல்லாமல் செல்பவன் ஆகிய மூவரும் துணிவு மிக்கவர்களாகும்.

74. இம்மூவர் ஒழுக்கமற்றவர்கள்

கொலைநின்று தின்றொழுகு வானும் பெரியவர்
புல்லுங்கால் தான்புல்லும் பேதையும்-இல்எனக்கு ஒன்று
ஈகஎன்பவனை நகுவானும் இம்மூவர்
யாதும் கடைப்பிடியா தார்.

விளக்கவுரை

கொலை செய்தவையே தொழிலாக கொண்டிருப்பவன். கற்றறிந்த பெரியார் அன்பால் தன்னை தழுவிக் கொள்ளும்போது, தானம் சான்றோர் என்று நினைத்து பெரியோர்களை தழுவ நினைக்கும் அறிவிலி, ஒன்றை தா என்று கூறி, ஒருவரிடம் சென்று கேட்டுப் பெறுபவனைப் பார்த்து ஏளனமாக சிரிப்பவன் ஆகிய மூவரும் ஒழுக்கமற்றவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது. கொலைத் தொழில் செய்பவன் இரக்கமற்றவனாகவே இருப்பான். அவன் உயிர்களை எந்த நிலையிலும் துன்புறுத்துவான். ஆகவே, அவன் தீய ஒழுக்கமுடையவன். பெரியோர்கள் மற்றவர்கள் தழுவ தகுதியுள்ளவர்கள். ஆனால், தீமைகளை செய்யும் அறிபவர்கள் தாமும் அத்தகைய சான்றோர்களாக கருதிக் கொண்டு, மற்றவர்களை தழுவமுயன்றால் இகழ்ச்நசிக்கு உள்ளாவார்கள். அத்தகையர் ஒழுக்கமற்றவர்களே. யாசகம் பெருபவனைப் பார்த்து சிரிப்பவன் மனிதாபிமானம் இல்லாதவன். மற்றவர்கள் துன்பத்தில் மகிழும் மனிதன் விலங்கு போன்றவன். ஆகவே, மேலே குறிப்பிட்ட மூவரும் ஒழுக்கமற்றவர்கள் என்று கூறப்பட்டார்கள்.

அ.பொ.

கொலை-உயிர் கொலை. ஒழுகுதல்-நடத்தல். புல்லுதல்-தழுவுதல். பேதை-அறிவில்லாதவன். இல்-இல்லை. ஈக-தருக.

பொருள் சுருக்கம்

கொலையையே தொழிலாகக் கொண்டவன் தீயவன் தன்னை சான்றோன் என நினைத்து காரியம் செய்தல், யாசகம் பெறுபவனைப் பார்த்து ஏளனமாக சிரிப்பது ஆகிய மூன்றும் ஒழுக்கமற்றவர்களின் செயல்கள்.

75. இம்மூவர் வாழ்வுக்கு துணை

வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும் உள்ளத்து
உணர்வுடையர் ஓதிய நூலும்-புணர்வின்கண்
தக்கது அறியாத் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழ்த்த மரம்.

விளக்கவுரை

பயனை எதிர்பார்க்காமல் பிறருக்கு கொடுத்து உதவும் கொடையாளியின் செல்வம், நல்ல சிந்தனை யுள்ளவர்கள் அளிக்கும் நூல் பயன், தன்னைத் தேடி வந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யும் நற் பண்பு ஆகிய இம்மூன்றும் வாழ்வுக்கு துணைபுரிபவை என்று திரிகடுகம் கூறுகிறது.

பிறருக்கு கொடுப்பவர்கள் வாழ்வில் கெடமாட் டார்கள். துன்பம் வந்தாலும் அவர்களிடம் அது நிலைக்காது. சோதனைகள் அடுக்கடுக்காக வந்தாலும் அது வலுவிழந்து ஓடும். ஆகவே, கொடை என்பது துன்பத்தை விரட்டும் அஸ்திரமாகும். நல்ல சிந்தனை யுள்ளவர்கள் என்று கூறப்படுவோர். ஆன்மிக மெய்ஞான சிந்தனையுடையவர்கள் என்பது பொருள். அந்த சிந்தனையாளர்கள் அளிக்கும் நூல்கள் கோடிக்கணக் கான மக்களின் வாழ்வை நல்ல திசைக்கு திருப்பும் வல்லமை உடையது என்பது கருத்து. தன்னைத் தேடி வந்தவர்களுக்கு உதவி செய்யும் நற்பண்பு சாத்வீக குணத்தால் வருவது இந்த குணம் தான் பிறப்பை அறுக் கும் வாள். இந்த குணம்தான் எல்லா பற்றுகளையும் நீக்கி முக்தியைத் தருவது. ஆகவே மேலே கூறப்பட்ட மூன்றும் வாழ்க்கைக்கு துணை என்று கூறப்பட்டது.

அ.பொ.

வள்ளன்மை-ஈகை குணம். உணர்வு-அறச் சிந்தனை. ஓதிய-கற்பித்த. புணர்வு-சேருதல். பொத்தின்றி-பொந்தில்லாது. காழ்த்த-வயிரம் பாய்ந்த.

பொருள் சுருக்கம்

பயனை எதிர்பார்க்காமல் கொடுத்து உதவும் செல்வம். நல்ல சிந்தனையுள்ளவர்களால் இயற்றப் பட்ட நூல். தன்னைத் தேடி வந்தவர்களுக்கு செய்யும் உதவி ஆகிய மூன்றும் வாழ்வுக்கு துணை புரிபவை.

76. இம்மூவர் போற்றற்கு அரியவர்

**மாரிநாள் வந்த விருந்தும் மனம் பிரிதாய்க்
காரியத்தில் குன்றாக் கணிகையும்-வீரியத்து
மாற்றம் மறுத்துரைக்கும் சேவகனும் இம்மூவர்
போற்றற்கு அரியார் புரிந்து.**

விளக்கவுரை

மழைக்காலத்தில் வந்த விருந்தினன், மனம் இரண்டாக வேறுபட்டு இருந்தாலும் பொருள் தந்தவர்க்கு குறை வைக்காத விலை மகளிர், வீரத்தோடு புரியும் போரில் வெற்றியையே குறியாகக் கொண்டு, தலைவன் அதற்கு மாற்றம் சொன்னாலும் மறுக்கின்ற வீரன், ஆகிய மூவரும் அவர்கள் இயல்பறிந்து போற்றுதலுக்கு அரியவர் ஆவர். என்று திரிகடுகம் கூறுகிறது. மழைக்காலத்தில் வந்த விருந்தினை போற்றி உபசரிப்பது கடினம். இருப்பினும் தன்னால் முடிந்த அளவுக்கு உபசரித்து போற்றுவது சிறந்தது. விலை மகளிர் இருமனம் கொண்டவர்களாக இருந்தாலும் பொருள் கொடுத்தவர்களுக்கு தங்கள் உடலை முழுவதுமாக தந்து திருப்திபடுத்துவார்கள். வெற்றி ஒன்றையே லட்சியமாக கொண்ட வீரன் அதிலேயே குறியாக இருப்பான். அரசனே மாற்றம் சொன்னாலும் அதை ஏற்கமாட்டான். மேலே கூறப் பெற்ற மூவரும் போற்றுதற்கு அரியர் என்பதாகும்.

அ.பொ.

பிறிதாக-வேறாக. கணிகை-விலைமகளிர். வீரியம்-வீரம். சேவகன்-வீரன்.

பொருள் சுருக்கம்

மழைக் காலத்தில் வந்த விருந்தினன், இருமனமுள்ள விலைமகளிர், தலைவன் பகைமேல் கொண்ட மாற்றம் மறுக்கும் வீரம் ஆகிய மூவரும் காத்தற்கு அரியவர் ஆவார்.

77. இம்மூன்றும் உயர்குடி பிறந்தவர்க்கு அடையாளம்

கயவரைக் கைஇகந்து வாழ்தல் நயவரை
நள்ளிருளும் கைவிடா நட்டொழுகல்-தெள்ளி
வடுவான வாராமல் காத்தல் இம்மூன்றும்
குடிமாசு இலார்க்கே உள.

விளக்கவுரை

தீயவர்களை விட்டு விலகி வாழ்தல், நல்லவர்கள் நள்ளிரவில் வந்தாலும் அவர்களை கைவிடாதிருத்தல், நன்கு ஆராய்ந்தறிந்து பிறர் பழிக்கு இடம் தரக்கூடிய எதையும் செய்யாமல் தற்காத்துக் கொள்ளுதல் ஆகிய இம்மூன்றும் உயர்குடி பிறந்தவர்களின் அடையாள மாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

தீயவர்களை விட்டு விலகி வாழ்வதுதான் விவேகம். சாக்கடையில் விழுந்த சந்தனம் சாக்கடையாகவே மாறும். அதேபோல் தீயவர் சகவாசம் தீமையிலேயே முடியும் என்பதாகும். அதே சமயம் நல்லவர்கள் எந்த காலத்தில் வந்தாலும் அவர்களை கைவிடக்கூடாது. நல்லவர்களை காப்பாற்றுவது தெய்வ குணத்தால் வருவது. அந்த தெய்வகுணம் முழுவதுமாக வெளிப்பட இது போன்ற நல்லலவர்களை தொடர்ந்து ஆதரிக்க வேண்டும். பழி வரும் செயல்களை எந்த நிலையிலும் செய்யாமல் இருப்பது தற்காத்துக் கொள்ளும் உயர் பண்பாகும். தற்காப்புக்காக செய்யும் போர் என்பது எந்த விதத்திலும் தீமையை தராது. ஆகவே, மேலே கூறப் பெற்ற உயர் குணங்கள் உயர்குடி பிறந்தவர்க்கு அடையாளமாகும்.

அ.பொ.

கயவர்-கீழ்மக்கள். வைஇகத்து-கைவிட்டு விலக்கி. நயவரை-நட்புக்கினியவரை. நட்டொழுகல்-நட்பு கொண்டிருத்தல். தெள்ளி-ஆராய்ந்து.

பொருள் சுருக்கம்

தீயவர்களை விட்டு விலகி வாழ்வது; நல்லோரை கைவிடாதிருத்தல். பழிக்கு அஞ்சுதல் ஆகிய மூன்று குணங்களும் நல்லகுடியில் பிறந்தவர்களுக்கான அடையாளங்களாகும்.

78. இம்மூன்றும் தவசீலர் லட்சியம்

தூய்மை உடைமை துணிவாம் தொழிலகற்றும்
வாய்மை உடைமை வனப்பாகும்-தீமை
மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினார் கோள்.

விளக்கவுரை

மனத்தில் பொறாமை, ஆசை, கோபம் எதுவும் இல்லாத தூய்மை, நற்செயல்களை விரித்துரைக்கும் திறன், மனத்தால், சொல்லால், செயலால் பிறருக்கு தீமை செய்யாமல் இருத்தல் ஆகிய மூன்றும் தவசீலர்களின் லட்சியம் என்று திரிகடுகம் கூறுகிறது.

மனதை ஒருநிலைப்படுத்தி தவம் செய்வோரிடமிருந்து ஆசை, கோபம், பொறாமை ஆகிய தீயசக்திகளை விலகி விடும். நல்ல செயல்களை விரித்துரைக்கும் திறன் என்பது தவத்தால் சித்தியாகிறது. அதேபோல் மனத்தால், சொல்லால், செயலால் எவ்வுயிர்க்கும் தீமை செய்யாமலிருக்கும் நற்குணம் தவத்தால் வருகிறது. ஆகவே, தவம் என்பது நெருப்புக் களம் போன்றது. எல்லா தீமைகளையும் அந்த நெருப்பின் மூலமாக சாம்பலாக்கிவிட முடியும் என்பது பொருளாகும்.

அ.பொ.

தூய்மை-மாசில்லாத தன்மை. துணிவு-முடிந்த முடிவு. தொழில்-நற்செயல். அகற்றும்-விரிவாக்கும். வாய்மை-மெய்ம்மை. வனப்பு-எழில். தமக்கு-எழுச்சி.

பொருள் சுருக்கம்

மனத்தூய்மை, வாய்மை, தீமையை மனத்தாலும், வாயாமலும் நினையாமலும், கூறாமலும் இருத்தல் ஆகிய பண்பு தவசீலர்களுக்குரியதாகும்.

79. இம்மூவரும் நோய் துன்பம்

பழிஅஞ்சான் வாழும் பசுவும் அழிவினால்
கொண்ட அருந்தவம் விட்டானும்-கொண்டிருந்து
இல்அஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்
நெல்உண்டல் நெஞ்சிற்குழர் நோய்.

விளக்கவுரை

பிறர்பழித்தலுக்கும், ஏனைத்திற்கும் பயப்படாமல் வாழும் பசுவைப் போன்றவனும் துன்பம் வரும் போது தவத்தை கைவிடுபவனும் தனைவிக்கு பயந்து வாழும் காளை மாட்டினைப் போன்றவனும் மனத்தை வருத்தும் நோய் துன்பம் என்று திரிகடுகம் கூறுகிறது.

பழிக்கு அஞ்சாதவன் பஞ்சம், பாதங்களையும் துணிந்து செய்வான் அப்படிப்பட்டவர்களின் சகவாசம் தீராத நோய் போல துன்பம் தரும். எந்த நிலையிலும் தவத்தை கைவிடக்கூடாது. தவம் செய்கிறவனுக்கு பல சோதனைகள் பாத்தான் செய்யும். சோதனையில் வென்றால் சாதனை பிறக்கும் இருளுக்கு பின்தான் ஜோதி வருகிறது. ஆகவே, எந்த நிலையிலும் தவத்தைத் தொடர வேண்டும். மனைவிக்கு பயந்து வாழபவன் உருப்படியான எந்த சாத்தியத்தையும் செய்து முடிக்க முடியாது. ஆகவே, மேலே கூறப்பட்ட மூவரும் நோய்க்கு துன்பம் என்று சொல்லப்பட்டார்கள்.

அ.பொ.

பழி-ஏச்சு. அழிவு-துன்பம். அருந்தவம். அரிய தவம். கொண்டிருந்த-மலனயாளாகக் கொண்ட தவம். இல்-இல்லாள். எருது-காளை.

பொருள் சுருக்கம்

பழிக்கு அஞ்சாதவன், துன்பம் வரும்போது தவத்தை கைவிடுபவன், மனைவிக்கு பயப்படுபவன் ஆகிய மூவரும் துன்பம் தரும் நோய் போன்றவர்கள்.

80. இம்மூன்றும் வீண்

முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும்-நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இசைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

விளக்கவுரை

வழிமுறை அறியாத, நெறி தவறிய நடுவு நிலை இல்லாதவன் ஏற்ற தலைமைப் பொறுப்பு மனத்தில் உறுதியும், கட்டுப்பாடும் இல்லாதவன் மேற்கொண்ட தவம். நல்லொழுக்கமில்லாதவன் செய்து கொள்ளும் அலங்காரம் ஆகிய மூன்றும் வீணானது என்று திரிகடுகம் கூறுகிறது.

பிரச்சனைகளை தீர்க்க கூடிய மதிநுட்பம், நடுவு நிலைமை தவறாமை, சொல்லாற்றல், செயலாற்றல் ஆகிய தலைமை பொறுப்பில் உள்ளவனிடம் இருக்க வேண்டிய சிறப்பு அம்சங்களாகும். இந்த சிறப்புகள் அமையப் பெறாதவன் பெற்ற தலைப்பு வீண்.

தவம் செய்வோர் மனஉறுதியும், கட்டுப்பாடும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் தவத்தின் பலனைப் பெறமுடியும். ஒழுக்கம்தான் உண்மையான அழகு. உண்மையான அலங்காரமும் அதுவே. அந்த ஒழுக்கம் இல்லாதவன் செய்யும் புற அலங்காரம் வீணானது என்பது பொருளாகும்.

அ.பொ.

முறைசெய்யான்–நடுவுநிலைநின்று நீதி வழங்காதவன். நிறை–உறுதி. தவம்–தவ ஒழுக்கம். நிறை ஒழுக்கம்–குறையில்லாத நல்லொழுக்கம். தேற்றாதான்–தெளிவாக. அறிந்துணராதவன்.

பொருள் சுருக்கம்

நடுவு நிலைமை இல்லாதவன் பெற்ற தலைமை பொறுப்பு மனஉறுதி இல்லாதவனின் தவம். நல்லொழுக்கம் இல்லாதவன் செய்து கொள்ளும் அலங்காரம் ஆகியவை வீண்.

81. இம்மூவர் ஆசையால் அழிவர்

தோள்வழங்கி வாழும் துறைபோல் கணிகையும்
நாள்கழகம் பார்க்கும் நயமிலாச் சூதனும்
வாசிகொண்டு ஒண்பொருள் செய்வானும் இம்மூவர்
ஆசைக் கடலுள் ஆழ்வார்.

விளக்கவுரை

நீர் துறையில் யார் வேண்டுமானாலும் இறங்கி நீர் அருந்தலாம். அதுபோல் செல்வம் தரும் எவருக்கும் தங்கள் உடலைத் தருவார் விலைமகளிர். அம்மகளிரும், சூதாடும் இடம் சென்று நாள்தோறும் சூதாடும் தீயவனும், வட்டி வாங்கிக் கொண்டு கடன் தந்து வட்டியால் செல்வம் பெருக்கிக் கொண்டவனும், ஆகிய இம்மூவரும் ஆசை என்னும் கடலில் சிக்கி அழிவார்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

பணத்திற்காக உடலை விற்கும் இழிகுணமுள்ள விலைமகளிர் தீவினையால் அழிவர் என்பது கருத்து. சூதாடி சொத்து அனைத்தையும் இழந்து அழிவான். வட்டியால் செல்வம் குவிப்பவன் பல்வேறு துயரங்களில் சிக்கி அழிவான்.

அ.பொ.

தோள்–இங்கு உடலை குறித்தது. வழங்கி–தந்து. துறை–நீர்த்துறை. கணிகை–விலைமகளிர். நாள்–நாள்தோறும். கழகம் சூதாடும் இடம்.

பொருள் சுருக்கம்

விலை மகளிர், சூதாடி, வட்டி வாங்கி செல்வம் சேர்ந்தவன் ஆகிய மூவரும் தீவினை என்னும் நெருப்பால் துன்பம் அடைந்து அழிவார்கள்.

82. இம்மூன்றும் நல்லோர் குணங்கள்

சான்றாருள் சான்றான் எனப்படுதல் எஞ்ஞான்றும்
தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்-பாய்ந்தெழுந்து
கொள்ளாருள் கொள்ளாத கூறாமை இம்மூன்றும்
நல்லான் வழங்கும் நெறி.

விளக்கவுரை

கற்றறிந்த பெரியோரால் மேலோன் என்று கூறப்படும் சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் அன்பு மாறாமல் பழகும் இயல்பு, தன்கருத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மீது கோபம் கொள்ளதிருக்கும் தனிப் பண்பு ஆகிய மூன்றும் நல்லோரின் குணங்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

அனைத்தும் அறிந்த கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் ஒரு மனிதனைப் பாராட்டி மேலோன் என்று கூறினால் அவன் உண்மையிலேயே மனிதருள் மாணிக்கமாகவே இருப்பான். வறுமையிலும், செல்வத் திலும் அன்பு மாறாமல் பழகுதல் என்பது பண்பட்ட மனம் கொண்டவர்களால்தான் முடியும். அப்படிப் பட்டவர் நல்லவராகவே இருப்பார். தன் கருத்தை ஏற்காவிட்டால் பாமர மனிதர்கள் கோபம் கொள் வார்கள். ஆனால் அறிவாளிகளான நல்லவர்கள் அவ்வாறு கோபம் கொள்ளமாட்டார்கள். அறியாமை யில் இருக்கிறாரே என்று உள்ளூர வருந்துவார்களே யன்றி தூற்றமாட்டார்கள் கோபத்தில் பழிக்கவும் மாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

சான்றோர்-அறிவில் உயர்ந்தோர். எஞ்ஞான்றும்-எப்போதும். தோய்ந்தார்-அன்பு கொண்டு பழகுவர். பாய்ந்தெழுந்து-சினம் கொண்டவர். கொள்ளார்-ஏற்காதவர். கொள்ளார்-உடன்பாடில்லாத.

பொருள் சுருக்கம்

கற்றவர்களின பாராட்டு, எந்த நிலையிலும் அன்பு மாறாமல் பழகுதல், தன் கருத்தை ஏற்காதவர் மீது கோபம் கொள்ளாமல் இருக்கும் உயர் குணம் ஆகிய இம்மூன்றும் நல்லவர்களின் குணங்களாகும்.

83. இம்மூன்றும் ஒப்புரவிற்கு வழிகள்

உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்லாகும்
நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும்
செப்பம் உடையார் மழைஅனையார் இம்மூன்றும்
செப்பநெறி தூரா வாறு.

விளக்கவுரை

கடல் பரப்புகளில் உப்பலைகளில் குவித்து வைக்கப்பட்ட உப்புக் குவியல்கள் மீது நீர் விழுந்தால் கரைந்து மறையும். நட்புணர்வு என்னும் செழிப்பான முளை பொய் என்னும் நெருப்பில் கருகி மறைந்து விடும். தீமை தவிர்த்தல், நட்பை வளர்த்தல், ஒப்புரவுடன் ஒழுகுதல் ஆகிய மூன்றும் நல்ல பாதை அடைபடாமல் பார்த்துக் கொள்ளும் குணநலன்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

உப்பின் நீர் படியாது நட்பு பொய்யால் கருகி அழியும். நல்வினைகள் நல்வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் பாதை பொய் பேசுவது தீவினையால் வருவது. நல்வினைகள் புண்ணியத்தால் வருபவை. ஆகவே, நற்செயல்களை மலைபோல் குவித்து தீவினைகளை அழிக்க வேண்டும் என்பதாம்.

அ.பொ.

பெருங்குப்பை–குவியல். செழு–செழுமையான. உயிர்ப்புடைய முளை–வித்தில் (முளைக்கும்) முளை வழங்கி–பேசி. செல்வம். ஒப்புறவு, சிறந்த. நெறி–வழி.

பொருள் சுருக்கம்

உப்பில் நீர் படியாமை. நண்பர்களிடம் பொய் சொல்லாதிருத்தல். வாழ்வில் ஒப்புரவு இம்மூன்றும் நல்லிணக்க வழி செலுத்தும் பாதைகளாகும்.

84. இம்மூவர் வறுமைக்கு அடையாளமானவர்கள்

வாய் நன்கமையாக் குளனும் வயிறாரத்
தாய் முலைஉண்ணாக் குழவியும்-சேய்மரபில்
கல்வி மாண்பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்.

விளக்கவுரை

நீர் வந்து சேரும் வழி நன்றாக இல்லாத குளம், வயிறு நிரம்பும்படி தாய் மார்பில் வாய் வைத்து பால் குடிக்காத குழந்தை, மிக உயர்ந்த முறையில், மிக சிறந்த நூல்களை கற்றுணர்ந்தவர் என்னும் பெருமைக்கு ஆளாகாத மனிதர்களின் அறிவின்மை, ஆகிய இம்மூன்றும் வறுமைக்கு அடையாளம் என்று திரிகடுகம் கூறுகிறது.

நீர் வந்து சேரும் வழி நன்றாக இல்லாத குளம் என்று கூறியது. மழைநீர் அல்லது வாய்க்கால் வழியாக ஓடிவரும் நீர் வந்து குளம் நிறையும். குளத்துக்கு நீர்வரும் வழி சரியாக இல்லாவிட்டாலோ, அல்லது தடை இருந்தாலோ குளம் நிரம்பாது என்பது பொருளாகும். தாய் மார்பில் பால் சரிவர இல்லையானால் குழந்தையின் வயிறு நிரம்பாது. பால் சுரக்காமைக்கு காரணம் வறுமை என்பது உட்கருத்து. நல்ல மெய்ஞான நூல்களை கற்பவர்கள் இந்த உலகில் பெருமையோடு வாழ்வார்கள். அவ்வாறு கற்காதவர்கள் அறிவிலிகள் என்பதாம்.

அ.பொ.

வாய்-வரும்வழி. குளன்-குளம். வயிறார-வயிறு நிறைய. குழவி-குழந்தை. சேய்மரபு-உயர்ந்த முறை. மாண்பு-சிறப்பு. நல்குரவு-வறுமை.

பொருள் சுருக்கம்

நீர்வரத்து அமையாத குளம், தாய்ப்பால் உண்ணாத குழந்தை, நல்ல நூல்களை கற்காத மனிதரின் அறிவற்ற தன்மை ஆகிய மூன்றும் வறுமையின் அடையாளங்களாகும்.

85. இம்மூன்றும் உளவாளிகளின் குணங்கள்

எள்ளப்படும் மரபிற்றாகலும் உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும் முட்டின்றி
உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும் இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்றாள் குணம்.

விளக்கவுரை

பகைவர் அஞ்சும்படியான முறைகளை வருத்தலும், பகை நாட்டில் நடைபெறும் நன்மை, தீமைகளை அறியும் கூர்மையான அறிவும்தான் அறிந்தவற்றை மன்னனிடம் தெளிவாக கூறும் சிறந்த அறிவும் திறமையான உளவாளிகளின் தகுதிகளாகும் என்ற பொருளில் திரிகடுகம் கூறுகிறது.

பகை நாட்டவர் பயந்து நடுங்கும்படி திட்டங்கள் இருக்க வேண்டும். பகை நாட்டில் இருக்கும் பலம் என்ன? பலவீனம் என்ன என்பதை மிக சரியாக கணிக்கும் அறிவுத் திறன் வேண்டும். பகை நாட்டின் ரகசியங்களை அறிந்தனர் தன் அரசனிடம் தெளிவாக கூறும் தெளிந்த சொல்லாற்றல் இருக்க வேண்டும். இம்மூன்றும் சிறந்த உளவாளிகளின் குணங்கள் என்பதாகும்.

அ.பொ.

எள்ளப்படும்-வருந்தச் செய்யும். மரபு-முறை. கூர்மை-நுட்பமான அறிவு. முட்டின்றி-தடையின்றி. உள்பொருள்-அறிந்தவற்றை. ஒள்ளிய-உயர்ந்த.

பொருள் சுருக்கம்

பகைவரை அஞ்ச செய்யும் திட்டங்களும். அந்நிய நாட்டு நடப்புகளை சரியாக கண்டுபிடித்துண்டும்

திறனும். தான் அறிந்ததை அரசனிடம் தெளிவாக கூறும் சொல்லாற்றலும் திறமையான உளவாளிகளின் குணங்களாகும்.

86. இம்மூன்றும் துன்பம் தரும்

அற்புப் பெருந்தளை யாப்பு நெகிழ்ந்தொழில்
கற்புப் பெரும்புணை காதலின் கைவிடுதல்
நட்பின் நயநீர்மை நீங்கல் இவைமூன்றும்
குற்றம் தரூஉம் பகை.

விளக்கவுரை

அன்பாகிய பாசப் பிணிப்பு கெடுவதுக் கல்வி அறிவாகிய பெரிய துணையை பொருள் அல்லது வேறு ஒன்றின் மீது வைத்தவிருப்பதால் கைவிடுதல், நட்பு காரணமாக நடுவுலைரைம தவறுதல் ஆகிய மூன்றும் ஒருவருக்கு துன்பம் தரும் பகை குணங்களாகும். ஒருவர் மீது பாசம் வைத்தால் அது நிலையாக இருக்க வேண்டும். அந்த பாசம் குறைந்தால் கெடுதல் வரும். சம்பந்தப்பட்டவர் மனஉளைச்சலால் துன்பம் அடைவார் என்பது கருத்து. சிறந்த கல்வி என்பது பெரிய படை பலம் போன்றது. செல்வம், அல்லது வேறு பொருள் காரணமாக இக்கல்வியை கைவிடுதல் அறியாமை. வாழ்க்கை என்னும் சூறாவளியில் சிக்கி துன்பத்தை தரக்கூடிய செயல் இது. நடவு நிலைமை என்பது மிக வலிமை வாய்ந்தது. நட்பு உறவு என்று பார்க்காமல் நடுவுநிலைமை தவறாமல் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டும். இல்லாவிடில் பழிவரும். துன்பம் வரும். தீவினைப் பற்றும் என்பதாகும்.

அ.பொ.

அற்பு–அன்பு. தளை–பிணிப்பு. கட்டு–நெகிழ்தல். கற்பு–கற்ற கல்வி. புணை–தெப்பம். காதலின்–விருப்பத்தால். கைவிடுதல்–விட்டு விலகுதல்.

பொருள் சுருக்கம்

பாசத்தை குறைப்பது, கல்வி கல்லாளம். நடுவு நிலைமை தவறுதல் ஆகிய மூன்றும் துன்பம் தருபவை யாகும்.

87. இம்மூவர் மூடர்கள்

கொல்வது தானஞ்சான் வேண்டலும் கல்விக்கு
அகன்றஇனம் புகுவானும் இருந்து
விழுநிதி குன்றுவிப் பானும் இம்மூவர்
முழுமக்கள் ஆகற்பா லர்.

விளக்கவுரை

ஒரு உயிரை கொல்ல பயப்படாமல் அதை விரும்பி செய்பவன் கல்வி அறிவில்லாத அறிவிலிகளின் கூட்டத்தில் சேர்ப்பவன். சோம்பலில் மூழ்கி முன்னோர்களின் செல்வத்தை வீண் செலவு செய்து அழிப்பவன் ஆகிய மூவரும் மூடர்களாகும் என்று திரிகடுகம் கூறுகிறது.

கொலை என்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்று. அதற்கு பிராயச்சித்தம் தேட பல பிறவிகள் எடுத்து துன்பம் அனுபவிக்க வேண்டும். ஆகவே, கொலை செய்பவன் மூடன் என்பதாகும். கல்வி அறிவில்லாத அறிவிலிகள் எதையும் ஒழுக்காக செய்து முடிக்க மாட்டார்கள். தவறான செயல்களால் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொளவ்ாக்ரள் அத்தகைய அறிவிலிகளின் கூட்டத்தில் சேருபவனும் அதே துன்ப நிலையை அடைவான் என்பது கருத்து. மலை போல் செல்வம் இருந்தாலும், சோம்பலில் காலம் கழித்தால் அந்த செல்வம் அழிந்து போகும் முயற்சியும், சுறு, சுறுப்பும் தான் செல்வத்தைப் பெருகச் செய்யும். சோம்பல் அழித்து விடும். மேலே கூறப்பட்ட தீய குணங்கள் மூடர்களுக்கு உரியவை.

அ.பொ.

வேண்டல்-விரும்புதல். அகன்று-விலகி. இளம்-கூட்டம் இருந்து- வீண் சோம்பியிருந்து. விழுந்தி-உயர் செல்வம். குன்றுவித்தல்-குறையும்படி செய்தல்.

பொருள் சுருக்கம்

அஞ்சாமல் ஒரு உயிரை கொல்லுதல், அறிவிலிகள் கூட்டத்தில் சேருதல், முன்னோர் சொத்தை அழிப்பது ஆகிய இம்மூன்றும் மூடர்களின் செயல்கள்.

88. இம்மூன்றும் உறுதி அழிப்பவை

பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்
தணிவில் பெருங்கூற்று உயிர்உண்ணு மாறும்
பிணைசெல்வ மாண்பின்றி இயங்கல் இவைமூன்றும்
புணையின் நிலைகலக்கு மாறு.

விளக்கவுரை

நோய் துன்பம் வருத்தும் போது கவலைப்படுவது, உயிர் போகும் நேரத்தில் அழுவதும், சுற்றம், நட்பு சூழ காரணமாக இருந்த செல்வம் அ ழியும் போது. கலங்குவதும் வாழக்கை கடலை கடக்க தோணியாக நின்று உதவும் மனஉறுதியை அழிப்பவை என்று திரிகடுகம் கூறுகிறது.

நோயும், மரணமும் இயற்கையானது. இதற்காக கவலைப்படுதலோ, அழவோ கூடாது. உண்மையில் நாம் உடல்கள் அல்ல. அழியாத ஆத்மா. இதை அறிந் தால் உறுதி குலையாது. அதேபோல் செல்வம் நிலை யற்றது நம் உண்மை இயல்போடு அதை ஒப்பிடும் போது தூசு அது இதை அறியாதவன் உறுதி குலைவான் என்பதாம்.

அ.பொ.

பிணி-நோய். தின்னுங்கால்-வருந்தும்போது. வருந்தாலும்-வருத்தப்படும் நிலையும். தணிவில்-குறைவின்றி. கூற்று-யமன். உண்ணுமாறும்-உயிர்போகும் வழியும். பிணை-விருப்பம்.

பொருள் சுருக்கம்

நோய் வந்தபோது கவலைப்படுதல், மரணம் வரும் போது அழுதல், செல்வம் சிதையும்போது கலங்குதல் ஆகிய மூன்றும் மனஉறுதியை சீர்குலைப் பவை ஆகும்.

89. இம்மூவர் பிறவியின் பயன் அறியாதவர்

அருளினை நெஞ்சத்து அடை கொடாதானும்
பொருளினைத் துவ்வான் புதைத்து வைப்பானும்
இறந்தின்னா சொல்கிற் பானும் இம்மூவர்
பிறந்தும் பிறந்திலா தார்.

விளக்கவுரை

கருணை மனம் இல்லாதவன், செல்வத்தை அனுபவிக்காமல் புதைத்து வைப்பவன், முறை தவறி பிறருக்கு துன்பம் செய்பவன் ஆகிய மூவரும் மனிதப் பிறப்பெடுத்தும் பிறவாதவரே என்று திரிகடுகம் கூறுகிறது.

மனிதப் பிறவி என்பது நம் உண்மையான தெய்வ வடிவை உணர்வதற்காக தரப்பட்டிருக்கிறது. கருணை மனம், செல்வத்தை வறியவர்க்கு வழங்குவது எவருக் கும் துன்பம் செய்யாத உயர்ந்த குணம் ஆகியவை இந்த லட்சியத்திற்கு துணை செய்பவை இதை அறியாதவர்கள் மனிதர்களாக பிறந்தும் பிறக்காதவர் என்பதாம்.

அ.பொ.

அருள்–கருணை. அடை கொடாதவன்–அடைந்து நிறைத்துக் கொள்ளாதவன். துவ்வான்–நுகராதவன். இறந்து–முறை தவறி.

பொருள் சுருக்கம்

கருணை மனம் இல்லாதவன். செல்வத்தை அனுப விக்காமல் புதைத்து வைப்பவன். பிறருக்கு துன்பம் செய்பவன் ஆகிய மூவரும் மனித பிறப்பெடுத்தும் அதன் பயனைப் பெறாதவர்கள்.

90. இம்மூன்றும் இனியது

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை-யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லலை இம்மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு.

விளக்கவுரை

பிறருக்கு கொடுத்து உதவுவதற்காகவே செல்வத்தைத் தேடுவது, நற்செயல்களால் மக்கள் உயர சிறந்த நூல்களை செய்தல், சொல்ல வேண்டிய விஷயங்களை கனிவுடனும், அன்புடனும் கூறுதல் ஆகிய மூன்றும் உலகம் இனிமையாக அமைய பயன் தருபவை என்று திரிகடுகம் கூறுகிறது.

சுயநலம்தான் நம் தெய்வ வடிவை மறக்கச் செய்துள்ளது. சுயநலமில்லாமை தான் நம் உண்மையான தெய்வ வடிவம். ஆகவே, பிறர் நலனே நம் நலன் என கருதி பிறருக்கு கொடுக்கவே செல்வம் தேட வேண்டும். மெய்ஞான நூல்களை இயற்றுவதன் மூலமாக மக்கள் அறநெறியில் வாழ்ந்து முக்தி பேறு பெறுவார்கள். ஆகவே, நல்ல நூல்களை எழுத வேண்டும். அன்புதான் தெய்வம். அதனால்தான் அன்பே தெய்வம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, எதை கூறுவதாக இருந்தாலும், கனிவுடனும், அன்புடனும் கூறவேண்டும் என்பதாகும்.

அ.பொ.

ஈதற்கு-கொடுப்பதற்கு செய்க. பொருளை-செல்வத்தை சேருங்கள். அறநெறி-நல்வினை. செய்க-இயற்றுக. பெருநூலை-சிறந்த நூலை. யாதும்-எதையும். இருநூலகம்-துன்ப உலகம். ஆறு-வழி.

பொருள் சுருக்கம்

பிறருக்காக செல்வம் தேடுவது, மக்கள் உயர நல்ல நூல்களை இயற்றுதல், எந்த விஷயத்தையும் கனிவுடனும், அன்புடனும் கூறுதல் ஆகியவை இனியவை ஆகும்.

91. இம்மூன்றும்தான் வாழ்வு

பெறுதிக்கண் பொச்சாந்து உரைத்தல் உயிரை
இறுதிக்கண் யாம்இழந்தோம் என்றல்-மறுவந்து
தன்உடம்பு கன்றுங்கால் நாணுதல் இம்மூன்றும்
மன்னா உடம்பின் குறி.

விளக்கவுரை

எல்லா வசதிகளையும் பெற்று, உற்றார் உறவினர் களுடன் வளமாக வாழும் போது பெற்றோருக்கும், மற்றோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் இகழ்தல், அவர்கள் இறுதி காலத்தில் ஐயோ போய் விட்டார்களே என்று வருந்துதல். தனக்கு நோய் வந்து தாக்கியபோது நல்லது செய்யாமல் வாழ்நாளை கழிதுது விட்டோமே என வருந்துதல் ஆகிய மூன்றும்தான் இந்த உலக வாழ்வாக இருக்கிறது என்று திரிகடுகம் கூறுகிறது.

வசதி கிடைத்தும் பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யாதவர்கள் பெரும் பாவ மூட்டையை ஏற்கிறார்கள். மரண காலத்தில் புலம்புவது வீண். உடல் நலம் இருக்கும்போதே அறச் செயல்களை செய்ய வேண்டும். நோய் தாக்கி விழுந்து விட்ட பிறகு புலம்புவதில் பலன் இல்லை என்பது பொருளாகும்.

அ.பொ.

பெறுதிகண்-பெற்றிருந்தபோது. பொச்சாந்து-மறதி. இறுதி-முடிவு. இழந்தோம்-தவறிவிட்டோம்.

பொருள் சுருக்கம்

வசதி இருக்கும்போது பெற்றோர்களுக்கு கடமை செய்யாமை, இறக்கும் காலத்தில் புலம்புதல். தன்னை நோய் தாக்கி விழுந்த பிறகு நற்செயல்களை செய்ய வில்லையே என்று வருந்துதல் ஆகிய மூன்றும் கலந்து தான் வாழ்வாக உள்ளது.

92. இம்மூவர் மனிதர்கள் அல்லர்

விழுத்திணை தோன்றாதவனும் எழுத்தினை
ஒன்றும் உணராத ஏழையும்-என்றும்
இறந்துரை காமுறுவானும் இம்மூவர்
பிறந்தும் பிறவாதவர்.

விளக்கவுரை

உயர்ந்த குலத்தில் பிறக்காதவன், இலக்கண இலக்கிய நூல்களை கற்றறிலாதவன், எப்போதும் முறைகேடாக பேசுபவன் ஆகிய மூவரும் மனிதராக வாழாதவர் என்று திரிகடுகம் கூறுகிறது.

உண்மை, பண்பு, இரக்கம், கருணை, பக்தி ஆகிய குணங்கள் இல்லாதவர்கள் உயர்குலத்தவர் அல்ல என்பது பொருள். இலக்கண இலக்கிய நூல்களில் பண்பாடு, அறநெறி ஆகியவை உள்ளன. அதை கற்றறியாதவன் மனித வாழ்க்கை வாழவில்லை என்பதாம். எப்போதும் முறைகேடாக மற்றவர்கள் மனம் புண்பட பேசுபவன் மனிதன் அல்ல. விலங்கு போன்றவன் என்பதாகும்.

அ.பொ.

விழு-சிறந்த. திணை-குலம். தோன்றுதல்-பிறத்தல். எழுத்து-இலக்கண இலக்கிய நூல்கள். உணரா-கற்காத. ஏழை-வறியவன். இறந்துரை-வரம்பு மீறிய பேச்சு.

பொருள் சுருக்கம்

உயர்ந்த குலத்தில் பிறக்காதவன், இலக்கண இலக்கிய நூல்களை கற்காதவன் எப்போதும் முறை தவறி பேசுபவன் ஆகிய மூவரும் மனித உருவில் பிறந் திருந்தாலும் மனிதர்கள் அல்ல.

93. உயிர்க்கு ஏழ்மை இம்மூன்றும்

இருளாய்க் கழியும் உலகமும் யாதும்
தெரியாது உரைக்கும் வெகுளவும்-பொருளல்ல
காதல் படுக்கும் விழையும் இவைமூன்றும்
பேதைமை வாழும் உயிர்க்கு.

விளக்கவுரை

இந்த உலகம் அறியாமை நிறைந்தவர்களால் சூழப் பட்டிருக்கிறது. வீணாக கோபம் வெளிப்படுகிறது. அற்பமான பொருள்களில் ஆசை வைத்து அலைகிற சூழல் உள்ளது. இம்மூன்றும் உயிர்க்கு ஏழ்மை என்று திரிகடுகம் கூறுகிறது.

உயிர்க்கு ஏழ்மை என்பது ஆன்மிக உலகத்தை நோக்கி செல்ல முடியாத தகுதியின்மையை இது குறிக்கிறது. அறியாமை, கோபம், கோபம் இம்மூன்றும் தாம் குணத்தின் அடையாளம். சத்வ குணம்தான் உயிர்க்கு செல்வம் அந்த குணத்தைப் பெற்ற பிறகுதான் உண்மையான வாழ்வு தொடங்குகிறது என்பது பொருளாகும்.

அ.பொ.

இருள்–அறியாமையாகிய இருட்டு. கழியும்–செல்லும். யாதும்–எதையும். வெகுள்வு–கோபம். காதல்–விருப்பம். விழைவு–ஆசை. ஆசை–பேதைமை.

பொருள் சுருக்கம்

அறியாமை, ஆசை, கோபம் ஆகிய மூன்றும் உயிர்க்கு ஏழ்மையாகும்.

94. இம்மூவர் ஒழுக்கம் தவறியவர்

நண்பில்லார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும்–பண்பில்
இழுக்கான சொல்லாடுவானும் இம்மூவர்
ஒழுக்கம் கடைப்பிடியா தார்.

விளக்கவுரை

நண்பராக பழகும் நல்ல குணங்கள் இல்லாதவர் களிடம் அன்புடன் பழகுவதும், வாழ்க்கை துணைவியை கைவிடும் அறிவில்லாதவனும் மூடரோடு உரையாடி மகிழ்பவனும் ஒழுக்கநெறியை மேற்கொள்ளாதவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

நட்பு பண்பு இல்லாதவர்களிடம் பழகுவது ஆபத்தை விளைவிக்கும். அன்பில்லாதவர்கள் அன்பை புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆகவே, அப்பண்பு இல்லாதவரிடம் பழகுதல் தீமையைத் தரும் வாழ்க்கைத் துணைவியை கைவிடுபவன் ஒழுக்கம் தவறியவன். ஏன்னெனில் மனைவி இல்லாமல் ஒரு மனிதன் ஒழுக்கமாக வாழமுடியாது. மனைவியை விரட்டி விட்டு ஒழுக்க கேடாக அவன் ஆவான் என்பது பொருள். மூடர் பழக்கம் உயர்வைத் தராது பெருமையைத் தராது. காலவிரயம் ஏற்பட்டு அதனால் நஷ்டம்தான் வரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

நண்பிலார்–நட்பு இல்லார். நசை–அன்பு. கிழமை–உரிமை. காப்பிகழும்–காப்பாறாது கைவிடும்.

பொருள் சுருக்கம்

நட்பு உணர்வு இல்லாதவர்களிடம் அன்பு காட்டுதல் மனைவியை கைவிடுதல். மூடரோடு கலந்துரையாடுவது ஆகிய மூன்றும் ஒழுக்கநெறியை மீறியதாகும்.

95. இம்மூன்றும் நன்மை தராது

அறிவழுங்கத் தின்னும் பசிநோயும் மாந்தர்
செறிவழுங்கத் தோன்றும் விழையும்–செறுநரின்
வெவ்வுரை நோனா வெகுள்வும் இவைமூன்றும்
நல்வினை நீக்கும் படை.

விளக்கவுரை

அறிவு மழுங்கி, நல்லதல்லாத செயல்களை தூண்டி மனதை அலைகழிக்கும் பசி நோயும். மக்களுடன் நெருங்கி மகிழ தடையாக இருக்கும் ஆசை, பகைவர் கூறுவதை சகித்துக் கொள்ள முடியாத கோபம் ஆகிய மூன்றும் நன்மையைத் தராது என்று திரிகடுகம் கூறுகிறது.

பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்பார்கள். நாணயம், வெட்கம், பெருமை எல்லாவற்றையும்

இழக்க வைப்பது பசிக் கொடுமை. அடுத்து கோபம் மக்களுடன் பேச தடையாக இருப்பது சகிக்க முடியாத கோபம், ஆசை ஆகியவற்றால் தீமையே நேரும். கோபத்தால் அதர்ம செயலில் இறங்கியவர்கள் பலர் சிறையில் அடைந்து கிடக்கிறார்கள். ஆசை வயப்பட்டு கீழான செயல்களை செய்வோர் தூக்கு மேடை செல்வதையும் காண்கிறோம்.

ஆகவே, பசி நோயை தணிக்க நேர்மையாக உழைத்து பொருள் ஈட்ட வேண்டும். எந்த நிலையிலும் கோபத்திற்கு ஆளாகாமல் எச்சரிக்கையுடன் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி ஆசையும், கோபமும்தான் நம் உண்மையான தெய்வ வடிவை மறைக்கின்றன என்ற தெளிவையும் பெறவேண்டும்.

அ.பொ.

அழுங்கும்–வருந்தும். தின்னும்–சாகடிக்கும். பசி நோய்–பசியாகிய நோய். செறிவு–நெருக்கமான சூழல். விழைவு–பேராசை. செறுநர்–எதிரிகள். வெவ்வுரை–கடுமையான சொற்கள்.

பொருள் சுருக்கம்

பசி நோய், ஆசை, கோபம், ஆகிய மூன்றும் மனிதத் தன்மையை இழக்க வைக்கும் தீமைகளாகும் இவற்றால் எந்த நன்மையும் விளையாது.

96. இம்மூவர் மாமழை போன்றோர்

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டான்
செய்வகை செய்வான்தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை.

விளக்கவுரை

கணவன் வாய் திறந்து கூறும் முன்பே அவன் முகக் குறிப்பறிந்து அவன் நினைத்ததை முடிப்பவன் நல்ல மனைவி தான் மேற்கொண்ட துறவு ஒழுக்கத்திற்கு ஏற்றார் போல் ஒழுக்க நெறிகளை கடைபிடிப்பவர்

தவசீலர். குடிமக்களுக்கு கேடு செய்வதைநீக்கி நன்மைகளையே செய்யும் அரசன் சிறந்த அரசன் இம்மூவரும் மாமழை போன்ற செல்வம் என்று திரிகடுகம் கூறுகிறது.

கற்புக்கரசிகளுக்காக தெய்வமே இறங்கி வந்து அருள் வழங்கியதை புராண இதிகாசங்கள் நமக்கு எடுத்து கூறுகின்றன. கணவனை தெய்வத்திற்கு மேலாக மதிக்கம் பெண் மாமழை போன்றவள் என்பது கருத்து. தவசீலர்களால் தான் பாமர மக்கள் ஞான அறிவை பெறுகிறார்கள்.

ஞான அறிவு ஒன்று தான் உண்மையான கல்வி. ஒரு மனிதனை தெய்வமாக்குவதுதான் ஞானக் கல்வி அந்த ஞானக் கல்வியை போதிக்கும் தவசீலர் உலகம் முழுமைக்கும் மாமழை போன்றவராகும். குடிமக்கள் நலன் ஒன்றையே லட்சியமாக கொண்ட அரசன் தெய்வம் போன்றவன். அந்நாட்டிற்கு அவனே பெருஞ் செல்வம். பெரும் பாதுகாப்பு. மாமழை என்பதாகும்.

அ.பொ.

கொண்டான்-கணவன். குறிப்பு-நோக்கம். பெண்டாட்டி-மனைவி. கொண்டான்-துறவு பூண்டவர். செய்வகை-செய்ய வேண்டிய செயல். தவசி-நோன்பு இருப்பவன். கொடி கொரீ-தீமையை நீக்கி.

பொருள் சுருக்கம்

கற்புக்கரசி, தவசீலர், நல்ல அரசன் ஆகிய மூவரும் மாமழை போன்றவர்கள் மழை பெய் என்று சொன்னால் இவர்கள் சொல்கேட்டு மழை பொழியும் என்பதாகும்.

97. இம்மூன்றும் நல்லறம் செய்யாதவர் செயல்கள்

ஐங்குரவர் ஆணை மறுத்தலும் ஆர்வுற்ற
எஞ்சாத நட்பினுள் பொய்வழங்கும்-நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறததலும் இம்மூன்றும்
நற்புடை இலாளர் தொழில்.

விளக்கவுரை

வழி நடத்திச் செல்லும் பெரியோர்களாகிய ஐந்து பேர்களின் அறிவுரைகளை, ஆணைகளை மீறி செயல்படுவது, ஆர்வமும், பாசமும் நிறைந்த நண்பர்களிடத்தில் பொய் வார்த்தை கூறி ஏமாறுதல், நெஞ்சில் இடம் பெற்ற, கற்புக்கரசியான மனைவியை கைவிடுதல் ஆகிய இம்மூன்று செயல்களும் நல்லறம் செய்யாதவர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

பெரியோர்கள் கூறும் அறிவுரைகள் ஆரம்பத்தில் கசப்பது போல் தோன்றினாலும் வாழ்வில் இனிப்பை நிறைப்பதாகும். மருந்து கசக்கிறது என்பதற்காக அதை சாப்பிட மறுத்தால் நோய் எப்படி குணமாகும்? அதே போல் சான்றோர் அறிவுரைகளை மீறி நடப்பவர்கள் நல்லறம் அறியாதவர்கள் என்பது கருத்து உண்மையான நண்பர்களிடம் பொய் கூறி ஏமாற்றுதல் துரோகத்திற்கு நிகரானது துரோகம் என்பது தீமையையே விளைவிக்கும் கற்புக்கரசியான மனைவியை கைவிடுதல் விசேகமானது அல்ல. தெய்வங்களே கற்புக்கரசிகளுக்காக இறங்கி வந்து அருள் செய்திருக்கின்றன. கற்புக்கரசியாகிய சாவித்திரி தன் கணவனின் உயிரையே எமனிடமிருந்து மீட்டாள். அத்தகைய பெருமைக்குரிய கற்புக்கரசி குணம் கொண்ட மனைவியை கைவிடுவது நல்லற மல்லாதது என்பதாகும்.

அ.பொ.

ஐங்குரவர்-வழிகாட்டிகளான ஐந்து பெரியோர்கள் அவர்கள் அரசர், ஆசிரியர், ஞானி, தந்தை, மூத்தோன் ஆகியோர். ஆணை-கட்டளை. ஆர்வுற்ற-விரும்பிய. எஞ்சாத-குறையாத.

பொருள் சுருக்கம்

பெரியோர்களின் கட்டளையை மீறுவது உண்மை நண்பரிடம் பொய் கூறி ஏமாற்றுதல், கற்புடைய

மனைவியை கைவிடுதல் ஆகிய விவேகமற்ற செயல்கள் நல்லறம் அல்லாத செயல்களாகும்.

98. இம்மூன்றும் மாமழைக்கு அடிப்படை

செந்தீ முதல்வர் அறம்நினைந்து வாழ்தலும்
வெஞ்சின வேந்தன் முறைநெறியில் சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச் செலவும் இம்மூன்றும்
திங்கள் மும்மாரிக்கு வித்து.

விளக்கவுரை

யாகத் தீ வளர்த்தலில் முதன்மையான அந்தணர்கள் தங்கள் குல ஒழுக்கம் குறையாமல் வாழ்வது. எதிரி மீது கொடிய கோபத்தை காட்டுகின்ற அரசன் தன் குடிமக்களை சிறப்பாக பாதுகாத்தல். வாழ்க்கைத் துணையானவள் தன் கணவன் மன விருப்பத்தை மதித்து நடத்தல் ஆகிய மூன்றும் மாதம் மும்மாரி பொழியும் மழை வளத்திற்கு நிகரானது என்று திரிகடுகம் கூறுகிறது.

வேத மந்திரங்களை முறையாக ஓதி யாகம் வளர்ப் பவர்கள் அந்தணர்கள். இங்கு அந்தணர்கள் என்று கூறுவது சுத்தமானவர்கள் என்பது பொருளாகும். வேத மந்திரங்கள் ஆரம்பத்தில் சகல செல்வங்களையும் வழங்குகிறது. இறுதியில் ஆத்ம காட்சியை காண வழிகாட்டுகிறது. ஆகவே, யாகத் தீ மனித குலத்திற்கு மாமழை போன்றது. பகை அரசர்கள் மீது கோபத்தை காட்டும் அரசன், குடிமக்களை கண்போல் காக்கிறான். ஆகவே, இவனும் மாமழை போன்றவன். கணவன் விருப்பப்படி செயலாற்றும் மனைவி மங்கையரில் மாணிக்கம் போன்றவள். அவனும் மாமழைக்கு நிகரானவன் என்பது பொருளாகும்.

அ.பொ.

செந்தீ–வேள்வி தீ. அறம்–குலஒழுக்கம். வெஞ்சினம்–கொடிய கோபம். முறை நெறியில்–ஆட்சி நெறிமுறைப்படி. கொழுநன்–கணவன். திங்கள்–மாதம். மும்மாரி–மூன்று மழை. வித்து–அடிப்படை மூலம்.

பொருள் சுருக்கம்

யாகத் தீ வளர்க்கும் அந்தணர் குடிமக்களை பாது காக்கும் அரசன் கணவன் குறிப்பறிந்து செயலாற்றும் நல்ல மனைவி. ஆகிய மூவரும் மாழைக்கு நிகரானவர் களாகும்.

99. இம்மூவர் நல்லோருடன் சேரமாட்டார்கள்

கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்ற
பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும்–முட்டின்றி
அல்லவை செய்யும் அலவலைரயும் இம்மூவர்
நல்லுலகம் சேரா தவர்.

விளக்கவுரை

கல்வியில் சிறந்த, அறிவில் சிறந்த, சான்றோரை ஒதுக்கிவிட்டு வாழ்பவன், தான் எதை விரும்புகி றோனோ அதையே மூர்க்கத்தனமாக செய்யமுனைபவன் தொடர்ந்து நல்லதல்ல தீமைகளையே செய்து வெட்டிப் பேச்சில் காலம் கழிப்பவன் ஆகிய மூவரும் நல்லோர்களுடன் சேரமாட்டார்கள். நல்ல கதியை அடையமாட்டார்கள். என்று திரிகடுகம் கூறுகிறது.

அறிவில் சிறந்த சான்றோரை நீக்கிவிட்டு வாழ்பவன் கெடுவான். மகர பாரத காவியத்தில் பீஷ்மர், விதூர் கண்ணன் ஆகிய பெரியோர்களின் அறிவுரைகளை கேளாமல் துரியோதனன் அழிந்தான். ஆகவே, சான்றோரை ஒதுக்குபவன் துன்பம் அடைவான்

என்பதாகும். அடுத்து மற்றவர்களின் மனதை புரிந்து கொள்ளாமல் தான் கூறுவதே சரி என்று வாதம் செய்து அச்செயலையே செய்ய நினைப்பவனும் கெடுவான். நல்லதை விட்டுவிட்டு தீமைகளையே பேசுபவன் அமுதம் அருகியிருக்க சாக்கடை நீரை அருந்துபவன் போன்றவன் ஆவான். ஆகவே, அவனும் கெடுவான் என்பது பொருளாகும்.

அ.பொ.

கைவிட்டு-புறந்தள்ளி. காமுற்ற-ஆசைப்பட்ட பெட்டாங்கு-விரும்பியதை. பேதை-அறிவிலி. முட்டு-தடை. அலவலை-வீண் பேச்சு. நல்லுலகம்-நல்லவர் வாழும் இடம்.

பொருள் சுருக்கம்

சான்றோரை ஒதுக்குபவன். தான் விரும்பியதையே செய்ய நினைப்பவன், நல்லதை விலக்கி தீமைகளையே பேசுபவன் ஆகிய மூவரும் நல்லோர்களுடன் சேரமாட்டார்கள். நல்ல கதியையும் அடையமாட்டார்கள்.

100. இம்மூன்றும் மன்னனுக்கு பாதுகாவல்கவசம்

பத்திமை சான்ற படையும் பலர்தொகினும்
எத்துணையும் அஞ்சா எயில்அரணும்-வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க்கு உறுப்பு.

விளக்கவுரை

மன்னனான தன்னிடம் மிகுந்த அன்பும், கடமை உணர்வும் கொண்ட படை பலமும், எத்துணை பேர் கூடி பகைத்து வந்தாலும் கலங்காமல் நிற்கும் பலமுள்ள மனதில் காவலும் நிறைந்து வந்துள்ள, நினைக்கின் எண்ணிலடங்காத அழிவற்ற உயர்ந்த செல்வமான

வருவாயும், ஆகிய மூன்றும் நாடாளும் மன்னனுக்கு அமைய வேண்டிய பாதுகாப்பு கவசங்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

படை வீரர்கள் அரசனிடம் பேரன்பு கொண்டவர்களாக இருந்தால் போரில் மிகுந்த வீரத்துடனும், வல்லமையுடனும் போர் செய்து வெற்றியை விளைவிப்பார்கள். ஆகவே, அப்படை வீரர்கள் அரசனுக்கு கவசமாகும். பகை கூட்டம் மிகுதியாக வந்தபோதும் கலங்காத மதில் காவல் மன்னனுக்கு சிறந்த கவசமாகும்.

ஆகவே, மதில் அமைக்கும்போது எதனாலும் தகர்க்கப்படாத உறுதி பெறுமாறு செய்ய வேண்டும் என்பது கருத்து. நிதி நிறைந்திருந்தால் தான் அரசு பணிகளை சிறப்பாகச் செய்ய முடியும். போர்க்கருவிகளை குவிக்க முடியும். குடிமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியும். ஆகவே, வருவாய் பெருகியிருப்பது மன்னனுக்கு சிறந்த கவசமாகும்.

மேலே கூறப்பட்ட மூன்று கவசங்களும் அமைய வேண்டுமானால் அரசன் கருணையுடையவனாக வீரம் உள்ளவனாக, மதிநுட்பம் நிறைந்தவனாக இருக்க வேண்டும் என்பது உட்கருத்து.

அ.பொ.

பத்திமை-அன்புடைமை. சான்ற-நிறைவான. படை-நால்வகை படைபலம் (தேர்ப் படை, குதிரைப் படை, யானைப் படை, காலாட் படை ஆகிய நான்கு). தொகினும்-கூடிவரினும். எயில்-கோட்டை. அரண்-காவல் வகை மன்னர்க்கு நால்வகை படை போல் நான்கு வகை காவல் அரண்களும் வேண்டும். அவை உறுதியான மதின் அரண் நீர் அரண், நில அரண், காமரண் என

நான்காகும். எண்ணின்-நிறைத்த மாத்திரத்தில். உலவா-அழியாத. விழுநிதி-மிக உயர்வான செல்வம். வேந்தர்-மன்னன். உறுப்பு-பாதுகாப்பு கவசம்.

பொருள் சுருக்கம்

நாடாளும் மன்னனை நல்ல பாதுகாப்பை பெற்றிருக்க வேண்டும். கடமை உணர்வும், அரசனிடம் பேரன்பும் கொண்ட படை வீரர்கள். உறுதியான மதின் அரண். செல்வம் நிறைய வருவாயை பெருக்குதல். ஆகிய மூன்றும் மன்னனுக்கு மிக முக்கியமான பாதுகாப்பு கவசங்கள்.

திரிகடுகம் உரைவிளக்கம் நிறைவுற்றது.

❐ ❐ ❐

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

"திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்."

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு
மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

"நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்."

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்
தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

"பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!"

– கி.வீரமணி
தலைவர், திராவிடர் கழகம்

"நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து 'ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது' எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா."

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,
கிராமிய இசைக் கலைஞர்.